தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண்: 423

# தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

## பதினாறாவது தொகுப்பு

**(இலக்கியப் பகுதி)**

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்:

**புலவர் வீ. சொக்கலிங்கம்**

தமிழாசிரியர் (ஓய்வு)

சரசுவதி மகால் நூலகம் தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்

இ.பி. 2001

விலை: ரூ. 50-00

தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண்: 423

# தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

## பதினாறாவது தொகுப்பு

**(இலக்கியப் பகுதி)**

*சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்:*

**புலவர் வீ. சொக்கலிங்கம்**

*தமிழாசிரியர் (ஓய்வு)*

*சரசுவதி மகால் நூலகம் தஞ்சாவூர்.*

**தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்**

**சரசுவதி மகால் நூலகம்**

கி.பி. 2001

விலை: ரூ. 50-00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்–தொகுதி 16 |
| பதிப்பாசிரியர் | : | புலவர் வீ. சொக்கலிங்கம் |
| வெளியிடுபவர் | : | இயக்குநர், சரசுவதி மகால் நூலகம் |
| வெளியீட்டு எண் | : | 423 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | மார்ச்சு 2001 |
| தாள் | : | 11.2 கி.கி. தமிழ் நாடு |
| நூல் அளவு | : | 34×48 செ.மீ. |
| பக்கங்கள் | : | 142 |
| படிகள் | : | 500 |
| எழுத்து | : | 10 புள்ளி |
| அச்சிட்டோர் | : | கஜேந்திரா அச்சகம், சிதம்பரம். |
| புத்தகக்கட்டு | : | அட்டைக் கட்டு |
| பொருள் | : | இலக்கியச் சுவடி விளக்க அட்டவணை |
| விலை | : | ரூ. 50 |

# வெளியீட்டாளர் முகவுரை

உலகப் புகழ் கொண்டது தஞ்சை, மாமன்னர் சரபோஜியின் சரசுவதி மகால் நூல் நிலையம். இதன்கண் தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, மராட்டி முதலான மொழிச் சுவடிகள், பனை ஓலைச் சுவடிகளாகவும், காகிதச் சுவடிகளாகவும், தம்முடைய தொன்மையினை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

அவற்றுள், தமிழ்ப் பகுதியிலுள்ள சுவடிகள், இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இலக்கியச் சுவடிகளாகவும், பல மருத்துவச் சுவடிகளாகவும் காணப்படுகின்றன. இலக்கியச் சுவடிகள் 1501 முதல் 1600 வரையிலான எண்களைக் கொண்டவைகட்கு விவர அட்டவணையாக இந்நூல் வெளி வருகின்றது. எஞ்சியுள்ள சுவடிகளின் விவர அட்டவணை தொடர்ந்து வெளி வர உள்ளன.

இப்பதினாறாவது தொகுதியினை, தக்க விளக்கங்களுடனும் குறிப்பு களுடனும், விவர அட்டவணை தயாரித்தளித்த, இந்நூலக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் புலவர் வீ. சொக்கலிங்கம் அவர்கட்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் வெளிவரப் பொருளுதவி நல்கிய நடுவண் அரசுக்கும், நன்முறையில் அச்சிட்டுத் தந்த சிதம்பரம், கஜேந்திரா அச்சகத்தாருக்கும் எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.

இந்நூல் விரைவில் வெளிவர ஆவன அனைத்தும் செய்த நூலக நிர்வாக அலுவலர் திரு.சாமி.சிவஞானம், எம்.ஏ., அவர்களுக்கும் வெளியீட்டு மேலாளர் திரு.அ.பஞ்சநாதன், எம்.ஏ.,எம்.எல்.ஐ.எஸ்., அவர் களுக்கும் எனது நன்றியினைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தொகுதியினைப் பெற்று மக்கள் பயனடைவதோடு தங்களிடம், அல்லது நண்பர்களிடம் உள்ள சுவடிகளையும் இந்நூலகத்தில் சேர்த்துப் பெரும் பயனடையக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்

*தஞ்சாவூர்*
*16—3—2001*

முனைவர் சூ. இராசாராம், இ.ஆ.ப.
*மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்*
*சரசுவதி மகால் நூலகம்.*

# பதிப்பாசிரியர் முன்னுரை

"கற்றது கைம்மண்ணளவு கல்லாதது
உலகளவு என்று
உற்ற கலை மடந்தை ஓதுகின்றாள்"

எனவே, கற்க வேண்டிய நூல்கள் ஏராளம். பரந்த விரிந்த இவ்வுலகத்தில் தஞ்சை சரசுவதிமகால், இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் இலக்கியச் சுவடிகளையும், பல மருத்துவச் சுவடிகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது அவற்றை உலகுக்கு வெளிப்படுத்துவான் வேண்டி இலக்கியச் சுவடிகள் 1501 முதல் 1600 வரை விவர அட்டவணை தயாரிக்கப்பட்டு இப்பதினாறாவது தொகுதி வெளிவருகின்றது.

ஒவ்வொரு சுவடியிலும் உள்ள உட்பிரிவுகளை ஏ.பி.சி முதலான பிரிவுகள் தந்து, 2163 முதல் 2328 வரையிலான தொடர் எண்கள் தந்து அச்சிடப்பட்டுள்ளன.

இது, வெளிவரப் பொருளுதவி புரிந்த நடுவண் அரசுக்கும் இதற்கு அனுமதி தந்த சரசுவதிமகால் இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்கட்கும், அவ்வப்போது ஊக்கமளித்த நிருவாக அலுவலர் அவர்கட்கும், வெளியீட்டு மேலாளர் அவர்கட்கும் தமிழ்ப்பகுதிக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூலில் காணும் குற்றம் களைந்து குணம் கொண்டு வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடனாம்.

இங்ஙனம்
புலவர். வீ. சொக்கலிங்கம்
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்
சரசுவதி மகால்

தஞ்சாவூர்
15—3—2001

# பொருளடக்கம்


| நிகண்டு | | பக்கம் |
|---|---|---|
| சூடாமணி நிகண்டு | — | 1 |
| சூடாமணி நிகண்டு 11-வது தொகுதி | — | 2 |
| சேந்தன் சிவாகரம் | | |

**இலக்கணம்**

| | | |
|---|---|---|
| தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - நச்சினார்க்கினியர் உரையுடன் | — | 3 |
| ,, சொல்லதிகாரம் ,, | — | 4 |
| யாப்பருங்கலக்காரிகை - உரையுடன் | | 4 |

**சிற்றிலக்கியங்கள்**

**அந்தாதி**

| | | |
|---|---|---|
| ஆறெழுத்தந்தாதி எனும் சடரட்சாவந்தாதி | — | 5 |

**அம்மானை**

| | | |
|---|---|---|
| அரிச்சந்திரன் அம்மானை | — | 6 |
| துரோபதை அம்மானை | — | 7 |
| மார்க்கண்டன் அம்மானை | — | 8 |

**உலா**

| | | |
|---|---|---|
| தியாகராசர் உலா | — | 9 |

**கலம்பகம்**

| | | |
|---|---|---|
| மதுரைக் கலம்பகம் | — | 10 |

**பிள்ளைத்தமிழ்**

| | | |
|---|---|---|
| திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ் | — | 11 |

**மாலை**

| | | |
|---|---|---|
| சரவணபவானந்தசாமி மாலை | — | 11 |
| திருப்பரங்குன்றத்து மாலை - வெண்பா | — | 12 |
| பழனியாண்டவர் மண்டல மாலை | — | 13 |

**தனிப்பாடல்**

| | | |
|---|---|---|
| தனிப்பாடற்றிரட்டு | — | 14 |

**இதிகாசம்**

| | | |
|---|---|---|
| சூரபதுமன் சண்டை | — | 15 |
| மகாபாரதம் | — | 16 |

**கதை**

| | | |
|---|---|---|
| அசுவமேத யாகக் கதைகள் | — | 17 |
| காத்தவரா சுவாமி கும்மி | — | 18 |
| சித்திரபுத்திர நயினார் கதை | — | 19 |
| பஞ்சதந்திரக் கதைகள் - உரையுடன் | — | 20 |
| மதுரைத் திருவிளையாடற் புராணக் கதை வசனம் | — | 20 |
| விக்கிரமாதித்தன் கதை (முப்பத்திரண்டுபதுமை கதை) | — | 21 |

**இசை**

| | | |
|---|---|---|
| அரிச்சந்திர நாடகக் கீர்த்தனைகள் | — | 22 |
| இராம நாடகக் கீர்த்தனைகள் | — | 23 |
| கீர்த்தனைத் திரட்டு | — | 24 |

## வேதாந்தம்

ஆத்மாநாதம் விவேகம் — 25
இரகசியத் திரைய சாரம் — 26
கைவல்ய நவனீதம் — 26
சிவோகம் - சங்கற்ப நிராகரணம் — 27
ஞான வாசிட்டம் - உரையுடன் — 28
பகவத் கீதா சாரம் — 28
பரிபூரண உத்தரகீதை — 29
வால்மீகர் சிவயோகம் - 10 — 30
வேதாந்த சித்தாந்தம் — 31

## சைவத் திருமுறைகள்

அகத்தியர் தேவாரத் திரட்டு — 32, 34
சேத்திரக் கோவை — 35
திருக்கோவையார் — 1136, 37
திருத்தொண்டர் புராண சாரம் — 38
திருமுருகாற்றுப்படை நச்சினார்க்கினியர் உரையுடன் — 39
தேவாசகம் — 1140,41,42
தேவாரத்திரட்டு — 43
பெரியபுராணம் — 44

## சைவத் தோத்திரங்கள்

அவிநாசிப்பத்து — 45
எக்காலக்கண்ணி — 45
கணேச பதிகம் — 46
கபிலரகவல் — 47,48
சிவவாக்கியர் பாடல் — 49
சௌந்தரியலகரி — 50
,, உரையுடன் — 50
பட்டினத்தார் பாடல் — 51, 52
பூரணமாலை — 53

## வீரசைவம்

வைராக்கியதீபம் — 54

## வைணவத் தோத்திரங்கள்

கெருடப் பத்து — 55

## நாடகம்

சிறுத்தொண்டர் நாடகம் — 56

## வரலாறு

பன்னிரு பத்திரிக்கை வரலாறு — 58, 59

## சட்டம்

தேச சட்டங்கள் — 59

## தத்துவம்

பதார்த்த சாரம் — (ஜைனம்) — 60

## நாடி சாத்திரம்

குரு நாடி — 61

## காமநூல்


கொக்கோகம் — 62
கொக்கோகம் எனும் மதனநூல் - உரைபாடம் — 63
கொக்கோகம் சொரூப சூசகம் — 64
கொக்கோக நுட்பம் — 65
மதன நூல் — 66


## மருத்துவம்


அகத்தியர் — 12 — 67
அகத்தியர் — 16 — 68
அகத்தியர் காவியம் — 1000 — 68
அகத்தியர் குழம்பு — 69
அகத்தியர் மநிவெண்பா — 69
அகத்தியர் வைத்தியம் — 70
இராம தேவர் பட்சணி — 71
கெந்தக சுத்தி — 71
சவுரியார் குழம்பு — 72
சிவகாமியம்மன் — 10 — 73
சுப்பிரமணியர் பூசாவிதி — 73
தெட்சிணாமூர்த்தி சௌமிய சாகரம் — 1200 — 74
விப்பாணி பாடல் — 75
பொதிகைமுனி இந்திரசாலம் — 6 காண்டங்கள் — 76
வீரமெழுகு — 76
வைத்தியத் திரட்டு — 77, 78, 79


## மந்திரங்கள்


அகத்தியர் சல்லிய நிகண்டுக்குத் திறவு கோல் 203 — 79
அகத்தியர் 6-க்குச் சல்லியம் — 32 — 80
அகத்தியர் அஷ்டகர்மவித்தை — 81
அகத்தியர் மதிவெண்பா — 81
அஷ்டகருமம் — 8 — 82
இராமதேவர் சிதம்பரபூசை — 83
ஒட்டியம் — 84
கெருடபஞ்சாட்சரம் — 84
கெருடபஞ்சாட்சரவிர்த்தி — 85
கெருடமந்திரம் — 86
புகொங்கணர் சல்லியம் — 87
கோச பீஜாட்சரங்கள் அறிய விபரம் — 88
சக்கரவகைகள் — 88
சக்தி நாற்பத்து முக்கோண சக்கரவிதி — 89
சண்முகத்தின் பூசைவிதி — 90
சல்லிய நூல் - உரையுடன் — 91
சல்லியம் — 91
சுந்தரானந்தர் கேசரிவித்தை — 92
தெட்சிணாமூர்த்தி பாட்டு—125 — 92
தொட்டியம் — 93

| | | |
|---|---|---|
| நட்டாமுட்டி மாந்திரிகம் | — | 94 |
| நிதியெறு தீபம் | — | 94 |
| புலிப்பாணியார் தேவிபூசை | — | 95 |
| பேய் ஆடாமல் கட்ட மந்திரம் | — | 96 |
| மந்திரங்கள் | — | 96 |
| மந்திரசாத்திரம் 6 ÷ 3 | — | 97, 98, 99, 100, 101, 102 |
| மந்திரத் திரட்டு | — | 103 |
| வேண்டின வீட்டில் சோரரும் வருவர் | — | 103 |


## சோதிடம்


| | | |
|---|---|---|
| அகத்தியர் சாத்திரம் | — | 104 |
| அலகு நூல் | — | 105 |
| அன்பத்தோரட்சரம் | — | 105 |
| ஆந்தைகாதல் அட்டவணை | — | 106 |
| இடைக்காட்டார் சாத்திரம் - வருஷபலன் | — | 107 |
| உள்ளமுடையான் நட்சத்திரப் பொருத்தம் | — | 108 |
| குமாரசாமீயம் — உரையுடன் | — | 108 |
| கொர்ச்சனை மனிதருக்கு ரேகை லட்சணம் | — | 109 |
| கெவுளிகாதல் | — | 109 |
| கெவுளி சாத்திரம் | — | 110 |
| சோசார பலன் | — | 111 |
| சகாதேவநூல் சாத்திரம் | — | 112 |
| சகாதேவன் சாத்திரம் | — | 113 |
| சக்கரப் பொசிப்பு | — | 114 |
| சத்தியாரூடம் | — | 115 |
| சல்லியநூல் — 100 | — | 116 |
| சாதகவிதி — அஷ்டகர்மம் | — | 117 |
| சாமுத்ரிகாலட்சணம் | — | 118, 120 |
| சித்திராரூட நொண்டி | — | 121 |
| சித்திராரூடம் | — | 122 |
| சூடாமணி உள்ளமுடையான் | — | 123 |
| சோதிட சாத்திரம் | — | 123 |
| சோதிடம் | — | 124, 125 |
| தரிக்கால் விபரம் (வள்ளுவர் வாக்கியம்) | — | 125 |
| தொடுகுறி சாத்திரம் | — | 126 |
| நட்சத்திர நிகண்டு | — | 127 |
| நட்சத்திரப் பொருத்தம் | — | 128 |
| பல்லிக்குப் பலன் | — | 129 |
| பல்லி விழும்பலன் | — | 129 |
| மரண கண்டிகை | — | 130 |
| மனை சாத்திரம் | — | 130, 131 |
| ருது சாத்திரம் | — | 131 |
| லக்கின பலன் | — | 132 |

# தஞ்சை சரசுவதி மகால் நூலகத்

## தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

## 16-வது தொகுப்பு

### இலக்கியப் பகுதி

வரிசை எண்: 2163

சுவடி எண்: 1593-b

## சூளாமணி நிகண்டு

ஏடுகள்: 30. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 10-11 வரிகள் பொருள்: நிகண்டு. அளவு: 38×4 செ.மீ. கி. எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: வீரைமண்டலபுருடர். முழுமை: முற்றற்றது.

### தொடக்கம்

ஹரி: ஓம் நன்றாக திருச்சிற்றம்பலம்

முதலாவது தெய்வப் பெயர்த் தொகுதி

(பாயிரம்)

ஆனைமுக னாறுமுகன் ... ... ... ... திருந்தியக மலமூர்த்தி
திருப்புகழ்ப் புராணஞ் செய்தோன்
பரந்த சீர்க் குணபத்திரன்னாள் பணியும்
மண்டலவன் றானே.

பாயிரம் முற்றும்

முதலாவது தேவப் பெயர்த் தொகுதி

சங்கர னிறையோ ... ... ... சம்பு சதாசிவன் பேயோடாடி
பொங்கர வணிந்த மூர்த்தி புராதகன் பூதநாத
னங்கை வேணியன் கங்காளன் கடுக்கையங்
கண்ணிசூடு

### முடிவு

போர்க்களம் வெஞ்செருக்களம்
பொருகளப் பேர்
புற்று வன்மீக மெனப் புகலுமே .... ... ... ....

### காலம்

இல்லை

### குறிப்பு

நான்காவது தொகுதியின் முன்பகுதி வரை உள்ளது. இது எமது சுவடி எண் D 23/486 போன்றது.

வரிசை எண்: 2164 சுவடி எண்: 1591

# சூடாமணி நிகண்டு 11வது தொகுதி

ஏடுகள்: 46. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 7-9 வரிகள் பொருள்: நிகண்டு. அளவு: 43×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: வீராமண்டல புருடன் குணபத்திரன். முழுமை: முற்றற்றது.

குறிப்பு

இது எமது சுவடி எண் D 1096 / 938 போன்றது. ஏடுகள் தலைதடுமாற்றம் ஒடிந்தும் முறிந்தும் உள்ளன.

---

வரிசை எண்: 2165 சுவடி எண்: 1593 - a

# சேந்தன் திவாகரம்

ஏடுகள்: 106 சுவடியின். நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 10-12 வரிகள் பொருள்; நிகண்டு அளவு: 38×4 செ.மீ. கி. எண்ணிக்கை: 6000 எழுத்து: தமிழ் ஆசிரியர்: திவாகரமுனிவர் முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்

(சிங்க) த்தின் பெயர்
... ... மடங்கல் அரகண்டீரவம்
கேசரி மிருகாபதி வ... ...ப் போத்துச் சீயம்
வயப்புலி பஞ்சானனமே வயமா

முடிவு:

முற்பெறு சிதலெறும் பினைய மூவறிவே
நான்கறிவுயிர்ப் பெயர்
... ... ... ... மூக்கொடு கண்ணும்
.... ... ... ... டும் ரெண்டும் நான்கறிவே
ஐந்தறி வுயிர் வகை

காலம்:

இல்லை.

குறிப்பு

இது சேந்தன் என்பவரது வேண்டுகோட்கிணங்கத் திவாகர முனிவரால் செய்யப் பட்டமையின் இருவர் பெயரும் சேர்த்து'சேந்தன் திவாகரம்'என்றாயிற்று பன்னிரண்டு தொகுதிகளையுடையது. இச் சுவடியில் 3-ஆம் தொகுதி முதல் -12-ஆம் தொகுதி முற்பகுதி வரை உள்ளன. ஏடுகள் தலைதடுமாற்றம். இது எமது சுவடி எண் 474 போன்றது. முன் ஏடுகளின் முன்பகுதி சிதைந்துள்ளது.

வரிசை எண்: 2166 சுவடி எண்: 1597-a

# தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியருரையுடன்

ஏடுகள்: 158 சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது பக்கத்திற்கு: 10-12 வரிசை பொருள்: இலக்கணம். அளவு: 29×4. செ. மீ. கி. எண்ணிக்கை: 6500 எழுத்து: தமிழ். ஆசிரியர்: தொல்காப்பியர் முழுமை; முற்றுமுளது.

## தொடக்கம்

வடவேங்கடந் தென்குமரி யாயிடைத்
தமிழ் கூறு நல்லுலகத்து வழக்குஞ் செய்யுளு
மாயிரு முதலி னெழுத்துஞ் சொல்லும்
பொருளு நாடிச் செந்தமிழியற்கை
சிவணிய நிலத்துதொடு முந்துநூல் கண்டு

## முடிவு

மலையமானாடி மலாடெ ... ... லெழுத்தொழிந்தன
பவளங் கெட்டு முடிந்தது பொதுவி லென்பது
பொதியி லென உகாரந் திரிந்து யகார
வுடம்படு மெய் பெற்று .... ... .... ....தது
பிறவு மிவ்வாறே திரிந்து மருவி வழங்குவன வெல்லா
மிப் புறநடையானமைத்துக் கொள்க — 78
ஒன்பதாவது குற்றியலுகரப் புணரியன் முடிந்தது.
எழுத்ததிகாரத்திற் காசிரியன் பாரத்துவாசி நச்சினார்க்கினியர்
செய்த காண்டிகை (முற்றும்). ஆக சூத்திரம் நானூற்றெண்பத்து மூன்று
சிவகோசா முதலியார் பாதாரவிந்தமே கெதி-வடிவேதுணை.
சாலிவாடீசுரர் காந்திமதியம்மை பாதாறவிந்தமே கெதி
சண்முகநாதன் பாதார விந்தமே கெதி
சந்திவிநாயகர் பாதாரவிந்தமே கெதி
குமரன்துணை வடிவேலு துணை
குருபாதமே கெதி.

## குறிப்பு

இது, எமது சுவடி எண் D56/623 போன்றது, பிற செய்திகளை D55/622-ல் காண்க.

வரிசை எண்: 2167 சுவடி எண்: 1597-s

# தொல்காப்பியம் சொல்லதிகாரம் நச்சினார்க் கினியருரையுடன்

ஏடுகள்: 140 (159-298) சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது பக்கத்திற்கு 10-12 வரிகள் பொருள்: இலக்கணம். அளவு: 29×4. செ.மீ. கி. எண்ணிக்கை: 6000 எழுத்து: தமிழ் ஆசிரியர் தொல்காப்பியர் முழுமை முற்றற்றது.

## தொடக்கம்

உயர்திணை யென்மனார் மக்கட்பெய
ரஃறிணை யென்மா ரவரல பிறவே
யாயிரு திணையி னிசைக்கு மன் சொல்லே!

## முடிவு

ஆசிரியர் தர மேற்கூறு ... .... ... மவுருபுகளின்ற் சில
யிரண்டரவதற்கு முடிப ... ... .... மென்பதுணர்த்து
தற்குவம வுருபவர் கெல்லாம் பொதுவாய்
வழக்குவாசகமாய் நிற்கு மொப்பெனு
முருபினை .... ... .... ....ப்பி னொப்பினென வெடுத்
தோதினாராதலி னவ்விரணடா.

## காலம்

இல்லை.

## குறிப்பு

இதுவும் எமது சுவடி எண் D 56/628 போன்றது.

---

வரிசை எண்: 2168 சுவடி எண்: 1590

# யாப்பருங்கலக் காரிகை உரையுடன்

ஏடுகள்: 88 சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது பக்கத்திற்கு 8-10 வரிகள் பொருள்: இலக்கணம், அளவு: 21½×3. செ. மீ. கி. எண்ணிக்கை: 5000 எழுத்து: தமிழ் ஆசிரியர்: அமுதசாகரர் முழுமை முற்றற்றது.

தொடக்கம்

... .... .... ... டியில் கடிமலர்ப் பிண்டி,
சந்தம் மடிய அடிதொடை பாவினங்கூறுவன் பல்லவத்தின்
கந்தம் மடி ... ... ... ... ... ... மருட்டியதாழ் குழலே என்பது
காரிகை நூல் உனாக்கு மிடத்து

முடிவு

... ... ... ... தாரை வணங்கி யென்ற பாலதனை
வேண்டார் வணக்கி யென்று தொகுக்குவ்வழி ... ... .... ... வாறு
பாசிழை யாகம் பசப்பித்தான் டைந்தொடீ இ
மரசேன னென்று மனங் ... ... .... .... ... ... ...

காலம்

இல்லை.

குறிப்பு

படிப்பதற்கே அருமையாக உள்ள நூல் அச்சாகியுள்ளது.

---

வரிசை எண், 2169 சுவடி எண் : 1580-b

# ஆறெழுத்தந்தாதி எனும் சடாட்சர அந்தாதி

ஏடுகள் : 27. சுவடியின் நிலைமை : பழுது· பக்கத்திற்கு 4-5 வரிகள், பொருள்: அந்தாதி. அளவு. 35×3. செ.மீ. கி. எண்ணிக்கை 600. எழுத்து: தமிழ் ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்:

ஹரி ஓம்.

பொதியையி லெழுந்தருளிய அகஸ்திய முனிவர்
அருளிச்செய்த சடாட்ஷ அந்தாதி யென்னும்
ஆறெழுத் தந்தாதி.

காப்பு

கணபதி துதி.

நேரிசை வெண்பா

கற்பகமிருக்கத்தஸ் கந்தமிகு நந்தவனப்
பொற்பகமி ருக்கப் பொதிகைமுனி — நற்கரகத்
தண்ணீரை யாதரித்த வைந்துகரன் காப்பாமெம்
மெண்ணீரை யாறெழுத்திற்கே.

முருகன் துதி

கட்டளைக் கலித்துறை

ஆறு முகமுண்டு பன்னிரு தோளுண் டங்கையினி
லேறிய வேலுண்டு வெற்றி மயூரமுண்டு ஏவல்செய்ய

நூல்

ஆனந்த மாறெழுத் தாலயமாமென் தங்கமெல்லாம்
தானந்த மரதி முதற்பொரு ளாகிசந் தரங்கமுநீ

முடிவு:

தெய்யன நின்றுநின் றாடசிலம் போசைத் திருவிளையாட்
டையநின் னங்கம தெள்னங்க மாய்நின்ற வானந்தமே! —102

ஆறெழுத்தந்தாதி முற்றிற்று

முற்றும்

காலம்

சுபானு வருஷம் ஆவணிமாதம் 13-ஆம் தேதி எழுதியது
முற்றும் சுப்பாபிள்ளை சுவடி.

குறிப்பு:

இது எமது சுவடி எண் D. 1121/843 போன்றது. பிற குறிப்புகளை அங்கு காண்க.

---

வரிசை எண்: 2170

சுவடி எண்: 1574

# அரிச்சந்திரன் அம்மானை

ஏடுகள்: 160. சுவடியின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள் பொருள்: கதை. அளவு: 39×3 செ.மீ. கி.எண்ணிக்கை : 8000. எழுத்து : தமிழ். ஆசிரியர் : அறியக்கூடவில்லை. முழுமை : முற்றற்றது.

தொடக்கம்:

ஹரிஓம் நன்றாக குருவாழ்க குருவேதுணை
சீர்கொண்ட தவமுனிவன் கவுசிகன்
சோதிக்க நிறைதவறா வண்ணம்
பேர்கொண்ட சத்தியரிச் சந்திரனாமம்
பகுதிபேச நாளும்

நூல்

பூமாது வாழ்க புகழ்கெளரி வீற்றிருக்க
நலமாது வாழ்கயிந்த நானிலமெல் லாந்தழைக்க
செங்கமலத் தோறும் திருமாலும் யீஸ்பரனும்
ஐயங்கானும் புங்கவனு அண்டருடன் கொண்டாடி

முடிவு:

வஞ்சக மனைபொழிக ஏவலு பிரட்டுருட்டுக
நெஞ்சகங் கொடுமை தீய்மை நீதிலகிகடந்து
மிஞ்சுமக் கினியள் தாவ மிகவெறிந்த கன்றுவக்க
பஞ்சுபோல் பறந்து தூளாய்ப் பாற் ....... ம்மா
ஆகவிருத்தம் — 139
......திருவைப்போற்றி பதியி.

காலம்:

ஸ்ரீ செனன சென்ம சவுக்கிய ஞான வர்த்தினி
குல சம்பிரப் பதவி பூருவ புண்ணியானாம் லிக்கிதே
சாரியவாகன சம்வத்சரம் 1762. கலியுக சம்வத்சரம்
4942க்கு பிரபவாதி வருஷம் 34 பிலவா வருஷம்
வையாசி மாதம் 1-ஆம் தேதி உத்திராட நட்சேத்திரம்
எழுதத் தொடங்கினது.
கெங்கா கணபதே நமா.

குறிப்பு:

அரிச்சந்திரனுடைய வரலாறு அம்மானைப் பாடலாக எளிய முறையில் எல்லோரும் அறிந்து கொள்ளும் வண்ணம் பாடப்பட்டது. ஏடுகள் ஒடிந்தும் முறிந்தும் உள்ளன.

---

வரிசை எண்: 2171 சுவடி எண்: 1551

# துரோபதை அம்மானை

ஏடுகள்: 131. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 5-6 வரிகள். பொருள்: வரலாறு. அளவு: $33\frac{1}{2}\times2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 4500. எழுத்து: தமிழ் ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்

அத்தி முகனே ஆனைமுக வேதியனே
சத்தி மகனே தையல்நல்லாள் புத்திரனே
வித்தகனைப் பாட வேலவனே முன்னடவாய்
தாயே சாஸ்பதியே கரம்பிராணி வாசகியே

முடிவு

துன்பமற வாழ்ந்து துணையிருப்பாள் ராசகன்னி
எண்ணும் பதினா யிருப்பர் றாவையகத்தில்
ஆல்போல் தழைத்து அருகுபோல் வேறோடி
மூங்கில்போல் சுற்றம் முசியாமல் வாழ்ந்திருப்பார்

காலம்

வேலுமயிலுங் குருவே துணை

திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த தாரா நல்லூரிலிருக்கும் முத்துக்கருப்பன் குமாரன் ரெங்கசாமி சுவடி படிக்கிற துரோபதை யம்மானை.

பிரோசப்பதி வருஷம் மாசிமாதம் 29-ஆம் தேதி எழுதிக் கொண்டது. வேலு மயிலும் குருவே துணை.

முற்றிற்று

குறிப்பு

இது, எது சரசுவதி மகாலில் அச்சாகியுள்ளது. பாரதக் கதையில் வரும் துரோப தையின் அங்கம் பற்றி உரைப்பது. நாட்டுப்புறத் தெருக்கூத்து போன்றது.

வரிசை எண்: 2172

சுவடி எண்: 1566

# மார்க்கண்டன் அம்மானை

ஏடுகள்: 117. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 8-10 வரிகள் (2பத்தியாக) அளவு: 38×3½ செ மீ. கி. எண்ணிக்கை: 5000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுள்ளது.

தொடக்கம்

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை
அம்புலி யுமக்கணிந்து கொன்றை சூடு(ம்)
அரனிடத்தில் வீற்றிருந்த
உமை யாள் பாலன் கும்பமுலை தெய்வானை
வள்ளிபங்கள் குமரகுருபரனற்கு முன்பு வந்த
நூல்
சீர்பெருகும் பூவில் சிறந்த திருமாது
பார்பெரு நீதி பாரசத்தி நாமாது
பேர்பெருகு மேனி களபநெடு மால்வேதன்
அரனார் திருப்பாதம் அன்பாக வேதொழுது
வாம்புசரும் மார்க்கண்டன் மகிழும் புராணகதை

முடிவு

ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடி
மூங்கில்போல் சுற்றம் மூசியாமல் வாழ்ந்திருப்பர்
படித்தவர்கள் நித்தநித்தம் ப(ல்வதினு)ம் பெற்றுவாழ்வர்
கேட்டோர் கிளையும் கிலேசமற்று வாழ்ந்திருப்பார்
சற்குரு பாதார விந்தமேதுணையாக வேணும்
சம்பூர்ணம்

சாதாரண வருஷம் கார்த்திகை மாதம் 7-ஆம் தேதி புந்திவாரம் ரோகணி அட்சேத்திரமும் கும்ப லக்கினமும் கூடிய தினத்தில் மொவ்வாழளளவிருத்தும் முகடாவ்ளிக் .... அசருணாணாணித்தை .... துன்னாகா அநம்மழவ அக்காவை

எடுத்தவன் படித்துக் கொடுக்கவும்

ராமசியம்

அகுபா தந்துணை

அழகிரி செட்டிக்கு அவிதுப் போட்டேள் அமார்க்கண்டளம்மனை

சுப்பாரயபிள்ளை எழுதியது

மார்க்கண்டனம்மானை

குறிப்பு

இதில் மார்க்கண்டேயனின் வரலாறு கூறப்படுகிறது. அவித்தமும் சந்த அகவலு மாக உள்ளது 167 விருத்தங்கள் உள்ளன இகண்டுபத்தியாக எழுதப்பட்டுளது. சந்தம் நன்றாகிருக்கிறது.

* 

வரிசை எண்: 2173 சுவடி எண்: 1594-a

# தியாகராசர் உலா

ஏடுகள்: 13. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது பக்கத்திற்கு: 14–16, வரிகள் பொருள்: சிற்றிலக்கியம் அளவு: $30 \times 4\frac{1}{2}$ செ. மீ. கி. எண்ணிக்கை: 1500 எழுத்து தமிழ்: ஆசிரியர்: அறியக் கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்

திருச்சிற்றம்பலம்

நீர்பூத்த தாமரையி னிற்குந்தே வாதியர்
யேர்பூத்த .... ... ... ...ன் பரனெனும் .... ... ... ...சீர்மூத்த
வேரந்தத் திற்றெளிந்த ... ... ... ... ... ... ....

.... ... .... ... ... ... .... .... ...

முடிவு

ரெழு பருவத் தெவ்வோரு முன்போத
.... ... ... ய்வார்ப ... .... .... சைவ வழி
போந்தான் சந்தாய்ப் பானவதி ... ... ....ரடத்துளி
போந்தான் போந்தா னுலா!

திருச்சிற்றம்பலம்

தியாகராச சுவாமி வுலா

முற்றும்

சுவாமி வேண்டவளர்ந்த மகாலிங்கத் துணை

காலம்

இல்லை.

குறிப்பு

சிறந்த நூலாகக் கருதப்படுகிறது. மிகவும் பூச்சியரித்துள்ளதால் எழுத்துக்கள் தொடர்ச்சியாக இல்லை. உலா என்பது இளமைப்பவமுற்ற தலைமனைக் குலம் குடிப்பிறப்பு, முதலானவற்றால் இன்றான் என்பது தோன்ற வீதியில் பவனி வரக் கண்ட பேதை, பெதும்பை மங்கை மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்கின்ற எழுவகைப் பருவ மகளிரும் தம் நிலைகலங்கி அவன்பாற் காதல் கொண்டதாக நேரிசைக் கலிருவண்பாவாற் கூறுவது இந்நூல் திருவாரூரில் எழுந்தருளி யுள்ள தியாகேசப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டுபாடப் பட்டுள்ளது.

---

வரிசை எண்: 2174 சுவடி எண்: 1594-b

# மதுரைக் கலம்பகம்

ஏடுகள்: 10, சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது பக்கத்திற்கு: 12-16 வரிகள் பொருள்: சிற்றிலக்கியம்- அளவு: 30×4 $\frac{1}{2}$ செ. மீ. கி. எண்ணிக்கை: 1000 எழுத்து: தமிழ் ஆசிரியர்: குமரகுருபர் சுவாமிகள் முழுமை: முற்றற்றது.

தொடக்கம்

திருச்சிற்றம்பலம்

ஆட லறுபத்து நாலுடைய ராம் புல-ரனமே
விடையின் மேலேறி விளையாடும்-கூட
லுறைகளிறே யுன்பாத முன்னினேன் கண்டாய்
இறைகளிறென் கூற்றுக் கினி.

முடிவு

யினையநின் றன்மைமற் றெம்ம னோரு
நினையவுஞ் ... ... ... ... ...
.... ... .... ... ... ... .... ... கறவே
வாழியென் மனனு மணிநா வும்மே!
குமரகுருபகத் தம்பிரான் அவர்கள்
மீனாட்சி துணை சொக்கனாரே துணை.

காலம்

இல்லை.

குறிப்பு

இது, மதுரை சோமசுந்தரக்கடவுள் மீது பாடப்பட்டது நூறு செய்யுட்களாலானது இது தொண்ணூற்றாறு வகைப்பிரபந்தங்களுள் ஒன்று புயவகுப்பு, அம்மானை முதலிய பதினெட்டுறுப்பும் இளயபப் பாவும் பாவினங்களும் விரவிவர, அந்தாதித் தொடையாகப்பாடப்படுவது தேவர்க்கு நூறும், அந்தணர்க்குத் தொண்ணூற்றைந்தும் அரசர்க்குத் தொண்ணூறும், வணிகர்க்கு ஐம்பதும், மற்றவர்கட்கு முப்பதுமாகப் பாடப்படுவது இப்நூல் அச்சாகியுள்ளது.

---

வரிசை எண்: 2175 சுவடி எண். 1526

# திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ்

ஏடுகள்: 30. சுவடியின் நிலைமை: மிக மிகப் பழுது. பக்கத்திற்கு: 5-6 வரிகள். பொருள்: பிள்ளைத் தமிழ். அளவு: 41½×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பகழிக்கூத்தர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம்:

செந்தமிழ்க்கு வாய்த்ததிருச் செந்தில் பதிவாழுங்
கந்தனுக்குப் பிள்ளைக் கவிசெய்தாள்
............ சேர்மார்பன் தேர்ப்பாகன் வந்த
தருமா பகழிக்கூத்தன்.

முடிவு

தவம்புரிய வெங்கருந்தாளா
நெட்டிருந் தாமலோ டியந்தா
சார்ந்திப்பா யொரு பொருப்பெறவ.

காலம்

இல்லை.

குறிப்பு

மிகமிகச்சிதில மடைந்து ஒடிந்துள்ளது. இந்நூல் அச்சாகியுள்ளது.

---

வரிசை எண்: 2176 சுவடி எண்: 1560a

# சரவண பவானந்த சாமி மாலை

ஏடுகள்: 13. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 5-6 வரிகள். பொருள்: சைவத் தோத்திரம். அளவு: 24×2½ செ.மீ. கி. எண்ணிக்கை: 150. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

தொடக்கம்

ஹரி ஓம்
நன்றாக குருவாழ்க
குருவே துணை.

சிவ நமசிவாய மென்று ஓது — அதிலே
தெளிவாகி நீயுந் தியானிக்கும் போது
நவகோண சக்கர மீது
நடனம் புரிந்தாளே செகமோக மாது
சூக மாய்கை பஞ்சவர்கள்
சூது யிந்தத் தொல்லுலகில் யெப்போது நம்பபடாது
தவமேவு தென்பழனி மீது — வளருந்
சரவண பவானந்த சாமி துணை யாமே! — 1.

முடிவு

அசைவான தசைதூல மேரு — அங்கே
அணியா தென்றே யுறுதி நிசகண்ட தாரு
தசவா வொடுங்கிவிடு வீறு
யோக சரவண பவானந்த சாமிதுணையாமே!
யீஷ்பறர் துணையாக வேணும்.

காலம்

இல்லை.

குறிப்பு

இடையிடையே ஏடுகள் இல்லை. பிழைகள் மலிந்துள்ளன.

---

வரிசை எண்: 2177

சுவடி எண்: 1528

# திருப்பரங்குன்றந்து மாலை - வெண்பா

ஏடுகள்: 11. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு 4-5 வரிகள் பொருள்: மாலை. அளவு: 34½×2 செ.மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து தமிழ். ஆசிரியர்: சோமசுந்தரஞ்செட்டியார். முழுமை: முற்றற்றது.

தொடக்கம்

சாற்றுக்கவி

உலகுபுக ழியபுரி யோர்பழக் கொண்டயன்
..........................வெண்பா நூறன்பா
லாய்ந் தியற்றி னானே

நூல்

சீரார் நிலமகலொண் செல்வியனூ வாமென்னப்
பாரார் பலர்சேர் பரங்குன்றே — வாரார்
தன்முத்தா ரத்தன் நனிமருகன் சேர்தன்
இன்முத்தா ரத்தன் இடம்.

முடிவு

உலைத்தான் நீக்கினவனுமாகிய
முருகக் கடவுளின் இடம் — தலம்

காலம்

இல்லை

குறிப்பு

ஏடுகள் ஒடிந்தும் முறிந்தும் உள்ளதால் செய்யுட்கள் சரியாக இல்லை.

---

வரிசை எண்: 2178 சுவடி எண்: 1506

# பழனியாண்டவர் மண்டல மாலை

ஏடுகள்: 15. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 4-7 வரிகள். பொருள்: மாலை. அளவு: 22 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். முழுமை முற்றற்றது.

தொடக்கம்

காப்பு

வாயில் வந்ததெலா..................... யெனப்
பழனி மலையிலே வளர் தண்டபாணி
கோயிலும் புகுந்து புலம்பி யென்னுடைய
குறையெலாந் தவிர்த்திட நினைந்தே
நாயினேன் றொடுக்கு மண்டல மாலை
நலத்தொடென் னாவிலே யுதிக்கத்
தாயினும் கருணை யுடைய வேலம்மிலுந்
தான் துணை யாக நின்றிடுமே!

நூல்

பொற்பதந் தனையே யிடைவிடாத் துணையாய்
பூசனை புரியும் வாழ்வி சைத்து
மற்பாதம் மனைக டாறுந் தமியேனை
யலைந்திட விடுப்பது நன்றோ!

முடிவு

கரிட்ட சோதி வடி வேலவா நின்
கருணை கொண்டெனைக் காத்தருள் வாய்!
குருவாய் நிறைந்தபரி பூரணா நின்
கருணை கொண்டெனக் காத்தருளுவாய்!

காலம்

இல்லை

குறிப்பு

இதில் செய்யுட்கள் 24 வரை உள்ளன. பின்னர் தனிதனிப் பாடல்களாக உள்ளன.

---

# தனிப்படல் திரட்டு

வரிசை எண்: 2179 சுவடி எண்: 1580-a

ஏடுகள்: 9. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு. 4 வரிகள். பொருள்: தனிப்பாடல். அளவு: 35×3 செ.மீ. இ. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ்: ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

தொடக்கம்

தலையோ பதினெட்டுக் காலாறு
நாற்பது தானடக்கம்
விலையோவதிகங் கொம்பு தொண்ணூற்றாறும்
மேதிக்குள்த்
துலையாத வாசகஞ் சொன்னா ரகஸ்த்தியர்
தொல்புவிக்குள்
அலையாப் பொருளிதுகா ணுச்சிதமாக
வறிந்தவர்க்கே!

முடிவு

சேல்மிஞ்சிப் பாயும் வயல்புக ழூரர் செழுஞ்சிலம்பில்
வேல்மிஞ்சிப் பாயும் விழியணங் கரம்அந்த மெல்லிநல்லாள்
மால்மிஞ்சி யான்சொன்ன வார்த்தையை மிஞ்சியென் மாருமிஞ்சிக்
கால்மிஞ்சிக் காரன்பின் போனாளென் னைவிட்டுக் கைமிஞ்சியே!

காலம்

இல்லை

குறிப்பு

இதில், புலவர்கள் பல சமயங்களில், வேடிக்கையாகவும், சிலேடையாகவும் அழகாகவும் பாடிய 'பாடல்களில் 33 பாடல்கள் உள்ளன. செய்தக்காதி (சீதக்காதி) மீது பாடிய பாடல்கள் உள்ளன,

---

வரிசை எண்: 2180 சுவடி எண்: 1507

# சூரபதுமன் சண்டை

ஏடுகள்: 15. சுவடியின் நிலைமை; பழுது. பக்கத்திற்கு: 4-6 வரிகள். பொருள்: இதிகாசம் அளவு: 21×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 300. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறிக்யகூடவில்லை. முழுமை: முற்றற்றது.

## தொடக்கம்

சிவமயம்

தெச்சணாமூர்த்தி துணை
கந்த சாமி துணை
குருவே துணை
தண்டாயுதபாணி துணை வேலும் .... ...
பாலசுப்பிரமணியம் துணை
நாலுசூறன் உயித்தியம்
குருவே துணை

நூல்

வந்திடும் சேனைகள் பெருகக்
குகன்வேள் சிங்கமா முகவன் யெங்கே
யெனக்கோ வித்த விந்தை கண்டு
பூதற்களு மவுணறும் போர் வீரனை

## முடிவு

விட்டனேந்வாள் பதிக்குழ கோரமாய்வர
வேலை விட்டு விடா லேந்தமே
... ... ... மல்வர சூரபன்மன் கந்த சுவாமி
யுக்கிரனும் சண்டை தொ ... ... ...

## கால்ம்

இல்லை

## குறிப்பு

இது, கந்தபுராணத்தில் சூரபத்மனுக்கும் குமாரக்கடவுளுக்கும் நிகழ்ந்த சண்டைபோல எழுதப்பட்டுள்ளது.

வரிசை எண்: 2181 சுவடி எண்: 1585

# மகாபாரதம்

ஏடுகள்: 322. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். பொருள்: இதிகாசம் அளவு: 41×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 16000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: வில்லிபுத்தூரார். முழுமை: முற்றற்றது.

தொடக்கம்

கிஷ்ணசுவாமி தூதுச் சருக்கம்
காப்பு
விருத்தம்

பேர்படைத்த விசையனொடு மும்மை நெடும்
பிறவியினும் பிரியானாகி
சீர்படைத்த கேண்மையினாற் தேருர்தற்
கிசைந்தருளும் செங்கண்மாலை

முடிவு

துப்புரவினோடே துடர்ந்து கதை கேட்போர்கள்
துன்பமகலத் துடர்ந்து கதை கேட்போர்கள்
அன்புடனே யெக்காலும் அட்சயமாய்த் தான் வாழி
ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி பாதாரவிந்தமே துணை
வாழ வந்த சுவாமி துணை

காலம்

ரரட்சத வருஷம் வைகாசி மாதம் 6ஆம் தேதி செவ்வாய்க்கிழமை, சோமவாரத்தில் பகல் நாழிகை 7-க்கு மேல் பதினொரு நாழிகையில் தொவக்கினது
ஷெ டி வருஷம் ஆவணி மீ 22ம்தேதி எழுதி முகிந்தது.
குருபாதமே கெதியாக வேணும்

முற்றும்

இந்த பாரதம் எழுதினது கிழையூரிலிருக்கும் தம்பாலக் குடிக்கு வீரப்பன் சேர்வைக்காரன் குமாரன் வேம்பையா சேர்வை முகூர்த்தம் செய்து கையினால் எழுதப்பட்டது.

இந்த பொஸ்த்தகம் பாரதம் வேம்பய்யா ஏடு. ஸ்ரீராமஜெயம் சுப்பிரமணிய சுவாமி துணை பரமசிவம் முன்னிற்க வேணும்

குருபாதமே துணை

குறிப்பு

இதில் ஏடுகள் தலை தடுமாற்றமாக உள்ளன. பிற குறிப்புகளை எமது சுவடி எண் D421/64ல் காண்க.

வரிசை எண்: 2182 சுவடி எண்: 1563

# அசுவமேத யாகக் கதைகள்

ஏடுகள்: 277 சுவடியின். நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8-10 வரிகள். பொருள்: கதைகளி அளவு: 38½×3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 18000 எழுத்து தமிழ் ஆசிரியர்: வேதவியாசர் முழுமை: முற்றுமுளது.

## தொடக்கம்

வேத வெயாச மகாரிஷியானவர்
செனமேசெய ராசாவைப் பார்த்து பதினெட்டு
நாளை பாரதம் உயிற்றம் முடிந்தது..................
தர்மராசா சகலமான பாவ நிவாரண மாகும்படி
சறசாந்தாதி அசுவமேதி யாகம் நிறைவேரின
கதையைப் போதிச்சா ரென்று

## முடிவு

செய முனியானவர் விஷ்த்தாரமாய்
செனமேசெய ராசாவுக்குச் சொல்லி
அவனும் கேட்டு மகா சந்தோஷத்தை
அடைந்தா ரென்றவாறு

சம்பூர்ணம்

## காலம்

ஆனந்தா வருஷம் தை மாதம் 9ம் தேதி திருக்காட்டு நத்தம் வாத்தியார் சுப்பாபிள்ளை அசுவவேதி யாகத்தை எழுதி முகிந்தது.

முற்றும்

குருபாதம் துணை
சரஸ்வதியே நமஸ்த்து
விக்கினேஷ்பரனே நமஸ்த்து

குருமுன்னிற்கவும்

## குறிப்பு

இதில் எமனாசுரன் கதை, யிஷ்ட்டாபதி பட்டணம், நீலத்துசன் தரம் பூரத்துசன் கதை முதலான கதைகள் உள்ளன.

வரிசை எண்: 2183 சுவடி எண்: 1581

# காத்தவராய சுவாமி கும்மி

ஏடுகள்: 34 சுவடியின் நிலைமை: பழுது பக்கத்திற்கு: 6 வரிகள். பொருள்: கதை. அளவு: 26×2½. செ. மீ. கி. எண்ணிக்கை! 700 எழுத்து தமிழ். ஆசிரியர்: முத்தையன் வீரையன் முழுமை; முற்றுமுளது.

தொடக்கம்

கும்மிப்பாடல்

செந்திரு மாதுங் கமலத் திருவும்
ஞானச் செகபரியும்
நீங்காது திகழ்வைகும்
சுந்தரஞ்சேர் வளமிகுந்த சோனாட்டில்

தாயுமான சுவாமி துதி

ஆதியிலே மறையவன்தன் குலத்தில் வந்த
ஆட்சியெனும் மடமயிலுக் காக முன்னாள்
பாதிவழிதனி லவதி கெற்பதாகிப்
படுந்துயரம் நீயறிந்து பரிவாய் வேத

முடிவு

சோதிமய மாகியதோர் சிவபதத்தை யடைந்துலகில்
தெய்வமான
நீதியுள்ள காத்தனார் கீர்த்தனைக் கும்மியதாய்
நிகழ்த்தினேனே!

கும்மி முற்றும்

காலம்

விசுவாவசு வருஷம் ஐப்பசி மாதம் 17-ஆம் தேதி குமார வயலூர் சு. முத்து மதுரையாபிள்ளை எழுதியது.

வேல் துணை

குறிப்பு

இது, காத்தவராயனுடைய வரலாற்றினைக் கும்மி பாட்டினாகக் கூறுவது.

வரிசை எண்: 2184 சுவடி எண்: 1546

# சித்திர புத்திர நயினார் கதை

ஏடுகள்: 90. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6-8 வரிகள் பொருள்: கதை. அளவு: 41×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 5000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

காப்பு

தொடக்கம்

அத்தனும் அரனு மாலு
மானநல் ரிஷிகள் தேவர்
நித்தமும் பலாப லன்கள்
நெறியுடன் தெரிவ தற்குச்
சித்திர புத்திரனார் செனித்ததோர் கதையைப் பாட
மத்தக முகமுந் தொந்தி
வயிறு நங்காப்பதாமே!

நூல்

திருமகிழ்ந்து வாழுமந்தச் சித்திர...............
விருப்ப முடன்பாட விநாயகனே...............
விக்ந விநாயகனே வேழ முகத்...............
தொந்திக் கணபதியே தூய...............

முடிவு

இந்தக் கதையை யெடுத்துரைக்கக் கேட்டவர்கள்
ஆல்போல் தழைத்து அருகுபோல் வேருன்றி
நெல்வேலி நாதர் நெடுங்காலம் வாழியவே!
காந்திமதி யம்மாளும் கணபதியும் வாழியவே!

அமராவதி கதை முற்றிற்று

சிவமயம்

காலம்

விசு வருஷம் கார்த்திகை மாதம் 25-தேதி வியாழக்கிழமை திரிதிகையும் புனர்பூச நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் சித்திரபுத்திர நயினார் கதை எழுதி முடிந்தது.

முற்றிற்று

கடவுள் துணை

பூவுலகில் மக்கள் செய்யும் பாவ புண்ணியங்களை எழுதி வைக்க நியமிக்கப்பட்ட எமலோகத்திலிருப்பவருடைய கதையாகுமிது.

குறிப்பு

முதலேட்டில்: இஃது மயிலம் சுப்பிரமணிய சுவாமிகளால் பார்வையிடப்பட்டு திருத்தணியிற் சித்தையர் அவர்களால் மாரிக்கபுரம் முத்து செட்டியார் அவர்களது சுக விரஞ்சனி முத்திராட்சர சாலையிற் பதிப்பிக்கப்பட்டது 1879-ம் வருஷம் என்றுள்ளது.

---

வரிசை எண்: 2185 சுவடி எண்: 1530

## பஞ்சதந்திரக் கதைகள் மூலமும் உரையும்

ஏடுகள்: 100 சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு 7-8 வரிகள். பொருள்: கதை அளவு: 39 × 3½ செ மீ. கி எண்ணிக்கை: 6000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை.

தொடக்கம்

மியற்றில் பெருமுளை பிடுங்கிய
குரங்கு பெறு பேறே

என்றது: அப்பொழுது தமனகன் சொல்லுவான். கற்டகனே! நமக்குச் சிங்கத்தினாலே ஆகுற காரியமென்ன. இதனாலே வயிறு நிரம்ப யிறையானது கிடைக்குமோ அல்லவென்று பெருமையானது வநது சேருகிற துண்டோ.

முடிவு

அந்த மற்கட ராசனும் மனமகிழ்ந்து சந்தோசமாய்
யினிமையாகிய வசனங்கள் சொல்லி..............ம்
ரசமிகுந்த கனிகள் நித்தியமும் கொடுப்ப வாங்கித்
தின்று கொண்டு யிருந்ததுகள் முதலை யென்றவாறு — 7

காலம்

இல்லை

குறிப்பு

இதன், செய்திகளை எமது சுவடி எண்D564/105-ல் காண்க

---

வரிசை எண்: 2186 சுவடி எண்: 1596

## மதுரைத் திருவிளையாடற் புராணக் கதை வசனம்

ஏடுகள்: 86. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 8-9 வரிகள். பொருள்: புராணம். அளவு: 43 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 3000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை பெற்றது.

தொடக்கம்

ஆதியிலே பிரமதேவர் பிள்ளைகளுடனே
காசித் தலத்திலே யிருந்து கொண்டு
அசுவமேத யாகஞ் செய்தார். அப்போது
அகத்தியர் வேதவியாசர் நாரதர்
சனகர் ச............வாம தேவர் வான்மீகர்
வசிட்டர்சுகர் இவர்கள் முதலான ரிஷியள்
தேவரதியள் எல்லோரும் வந்தார்கள்

முடிவு

.................பேரை நேரே யிழந்து தள்ளியும்
கால்முறித்த பேர்களுந் தலைதகா...............
...................னேகம் பேர் மரணத்தையடைந்தார்கள்
மந்திரிமார்களிது கண்டு.....................................

காலம்

இல்லை

குறிப்பு

மதுரையிலே சொக்கேசப் பெருமான் அன்பர்கள் பொருட்டு அறுபத்து நான்கு திருவிளையாடல்களைப் புரிந்தார். அதனைப் பரஞ்சோதி முனிவர் 'திருவிளையாடற்புராணம்' எனப்பாடினார். இந்நூல் உரைநடையாக உள்ளது. 42-வது திருமுகங்கொடுத்த திருவிளையாடல் முடிய உள்ளது 43-வது பாணபத்திரருக்குப் பலகையிட்ட திருவிளையாடல் சொல்லுகிறோம் எனத் தொடங்குகிறது. இது முழுமையாக இல்லை.

---

வரிசை எண்: 2187 சுவடி எண்: 1578-a

## விக்கிரமாதித்தன் கதை (32 பதுமை கதை)

ஏடுகள்: 76. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 8-9 வரிகள். பொருள்: கதை. அளவு: 25½ × 3½ செ மீ. கி. எண்ணிக்கை; 4000. எழுத்து தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுப்பெறாதது.

முப்பத்திரண்டு பதுமை கதை
விநாயகர் துதி

புதுமையாக நறபோசனம் புந்திக்குற
பதுமை சொன்ன கதையின் பகுப்பெல்லாம்
கதிமையான கடகரி காற்றொழிதி
கதைகளின் விரலாறு
முதுமையான தமிழின் மொழிகுவாம்.
கடல்புடைசூழ்ந்த பூலோகத்தில் உஜினி மாநகரத்தில்
க்ஷத்திரிய குலத்தில் ஒற்பவித்த விக்கிரமார்க்கன்

முடிவு

அவனைக் கண்ட துண்டமாக வெட்டி எறிந்து
நறமோகினிக்கி உண்டான துன்பங்களைத் தீர்த்து
கமல சாஸ்திரியும் நரமோகினியும் இச்சித்த படியே
இருவரையும் மருவச் செய்து அவர்களுக்கு வேண்டும்
பொருள்களையும் குடுத்து ஊஜினி பட்டணத்துக்கு வந்து விட்டார்

காலம்

இல்லை

குறிப்பு

இது எமது சுவடி எண் D1200/732b போன்றது மற்ற செய்திகளை அங்கு காண்க. இதன் பின்னர், பித்தளை, இரும்பு சாமான்களின் ஜாபிதாக்கள் எழுதிய 8 ஏடுகள் உள்ளன.

---

வரிசை எண்; 2188 சுவடி எண்: 1508

# அரிச்சந்திர நாடகக் கீர்த்தனைகள்

ஏடுகள் 27, சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 4–6 வரிகள். பொருள்: இசை. அளவு: $19 \times 2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 1600. எழுத்து: தமிழ், ஆசிரியர்: அறியக்கூடவில்லை, முழுமை: முற்றற்றது.

தொடக்கம்

வேட்டைக்கி நீர் போனீரானால்
    ராசகோவே — என் சுவரமி
கோட்டைதனில் நானிருக்கேன்
    ராசகோவே — என்சுவரமி
நாட்டினில் அரசையாளும்
    ராசகோவே — என் சுவாமி
நாயகியாள் யான்வருவேன்
    ராசகோவே — என்சுவாமி

குறிப்பு

கானகந்தன்னில் பாலுருடனுமே
    காட்டில் தெரிப்பை சமுந்தது
கோசிகமுனி கிருபை யாலுமே
    காட்டிலரவ மிரட்டிக் கடிக்காதோ
பெத்தவயறு பத்தியெரியுதே — பத்தியெரியுதே ..................

காலம்

இல்லை

குறிப்பு

ஏடுகள் முறிந்துள்ளன. அரிச்சந்திரன் வரலாறு கூறும் கீர்த்தனைகள் உள்ளன.

---

வரிசை எண்: 2189 சுவடி எண்: 1567

## இராம நாடகம் (கீர்த்தனைகள்)

ஏடுகள்: 230. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். பொருள்: நாடகம் & இசை. அளவு: 40×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 7000 எழுத்து: தமிழ். ஆசிரியர்: சீர்காழி அருணாசலக் கவிராயர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்

சிவமயம்

ஹரி ஓம்

நன்றாக குருவாழ்க குருவே துணை

ஆனை முகனே அரனார் திருமகனே
சேனையர்கோ னாகவனஞ் செய்வோனே — ஞானமே
நாடகத்தைக் கொண்டுஉந்தன் நல்லருளாலே ராம
நாடகத்தைச் சொல்வே னான்!

பாயிரம்

அண்டர்தன் துயரம் தீர
அயோத்திமா துயரம் தீர
தண்டகா ரண்ணியஞ் சென்று
சமுத்திரம் அணையாய்க் கட்டிக்

நூல்

பாலகாண்ட விருத்தம்

மகராசனாய் மகராசன் மிகுசூரிய
வங்குச ராசன்
சுகராச கவிசிவ நாயகி கைகேயி
சுமித்திரையாள் தேவியர்

முடிவு

வறு............ யோர் மங்களஞ் செய்யக்
காரணமென்று பிறை தன்னுயிர்போல மனதுட் கொண்டு
கருமுகில் நேர்மேனி ரகுராமன் பூமி
காரித்திட்டானொரு ......... சேர்த்திட்டானே!
ஸ்ரீராமஜெயம்.

காலம்

பாயிரம் நந்தனவருஷம் ஆனிமீ 17-ந் தேதி குருவாரநாள்
பாலகாண்டம் நந்தனவருஷம் ஆனிமீ 20-ம் தேதிஆதித்தவராம்
அயோத்தியா காண்டம் நந்தன, ஆடிமீ 6-ந் தேதி புதன்கிழமை
ஆரணிய காண்டம் நந்தன ஆடி 27-ம் தேதி குருவாரநாள்
சுந்தரகாண்டம்...................................................
ஆகிய காண்டங்கள் எழுதி நிறைந்த காலம் மட்டும் உள்ளன,

குறிப்பு

இதில் 6 காண்டங்களும் முழுதும் உள்ளன. இது, எமது சுவடி எண் D1174/8171 D 1175/982 போன்றது.

---

வரிசை எண்: 2190 சுவடி எண்; 1580-c

## கீர்த்தனைத் திரட்டு

ஏடுகள்: 16. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 4-7 வரிகள். பொருள்: தோத்திரங்கள். அளவு: 35×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ் ஆசிரியர்: முருகேசக் கவிராசர் முதலானோர் முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்

பல்லவி

கண்டு சேவிப்போய் — முருகேசனைக்
கண்டு சேவிப்பாய் மனதே.

அனுபல்லவி

அண்டருங் காணாத ஆனந்தக் கூத்தனை
தொண்டர்க் கருள்புரியும் பேரின்ப மூர்த்தியைக் — கண்டு

முடிவு

பாமரந் தனிலே பராமுக மேனோ
காமனை யீன்றவனே கெருடனேற? — காக்கவே — உன்
திருவடி நம்பினேன் திருமகள் நேசா
துரைசிங்க இருதயவாசா கெருடனேறி — காக்கவே.

குறிப்பு

இதில், சாமுண்டி அம்மன் பேரில் பதம், சுப்பிரமணியர் பேரில் செய்த ஒரடிக் கீர்த்தனம்' ஸ்ரீரெங்கர் வழிநடைப்பதம், முதலான கீர்த்தனைகள் உள்ளன.

---

வரிசை எண்: 2191 சுவடி எண்: 1539.

# ஆத்மாநாதம் - விவேகம்

ஏடுகள்; 14 சுவடியின் நிலைமை: நல்ல நிலை. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: வேதாந்த சித்தாந்தம். அளவு: $24 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 300 எழுத்து: தமிழ் ஆசிரியர்: ஆச்சாரிய சுவாமிகள் முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்

திருச்சிற்றம்பலம்

ஆத்மா நாத விவேகஞ் சொல்லுகிறோம். அதாவது: ஆத்மாவினிலக்கணத்தையும் அநாத்மாவினிலக்கணத்தையும் பகுத்தறிவதாம். அவற்றுள்

ஆத்மாவென்பவன் அநாத்மாவை அறிகிறவனாம். அநாத்மாவென்பது தூலஞ் சூட்சுமங் காரண மென்ன மூன்று சரீரங்களாம்.

முடிவு

வேறொரு தோற்றரவு மற்ற சச்சிதானந்த சுபாவமான நிலையைக் கண்டபடியே யலைச்சலற நின்று பிரமமாகக் கரைந்து போனபடியினா லவனே சீவன் முத்தனென்று சொல்லப்படுவன்.

ஆத்மாநாத்ம விவேகம்

முற்றிற்று

சரஸ்பதி துணை

காலம்

யிப வருஷம் வைகாசி மாதம் பணமங்கலம் தம்பிசாமி கையெழுத்து.
(இது, அச்சான விபரம் கடைசி ஏட்டில் உள்ளது)

குறிப்பு

இது ஆன்மாவை அறிகின்ற வழி கூறுவது.

---

வரிசை எண்: 2192 சுவடி எண்? 1589

# இரகசியத்திரய சாரம்

ஏடுகள். 80. சுவடியின் நிலைமை மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 5-6 வரிகள் பொருள்: வேதாந்தம். அளவு: 42×2½ செ.மீ. கி. எண்ணிக்கை: 3000 எழுத்து: மணிப்பிரவாளம். ஆசிரியர்: வேதாந்த தேசிகர். முழுமை: முற்றற்றது.

## தொடக்கம்

மூலங்........யொன்றிரண்டான
மொழியிரண்டும் மேலொன்றிலை
யென்னின்றவ் வித்தகனுடைய

## முடிவு

நின்றனக்கு நிகரி நின்னடி யடைவாரி
நின்பாலன்றி அன்பாலுய்யாரி
வாரண மழைக்க வந்த காரணமே!
சீரார் தூப்பில் திருவேங்கடமுடையான்
திருவடிகளே சரணம்.

## காலம்

பிரமோதூத வருஷம் புரட்டாசி மாதம் 15-ஆம் தேதி
ஆதிநாரண பயமிகரத் திடத்தில்
தினகரிஷ்யம் பொஸ்த்தகம்

## குறிப்பு

திருமந்திரம், த்வயம், சரணாகதி ஆகிய மூன்று இரகசியங்களைக் கூறும் வைணவ நூல்

—*—

வரிசை எண்: 2193 சுவடி எண்: 1538

# கைவல்ய நவனீதம்

ஏடுகள்: 45. சுவடியின் நிலைமை; மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 8-10 வரிகள். பொருள்: வேதாந்தம். அளவு: 27 × 3½ கி. எண்ணிக்கை: 3000. எழுத்து: தமிழ். முழுமை: முற்றுமுளது.

## குறிப்பு

இது, எமது சுவடி எண் D1731/1311 போன்றது.

வரிசை எண்: 2194 சுவடி எண்: 1556

# சிவோகம் சங்கற்ப நிராகரணம்

ஏடுகள்: 16. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 9-10 வரிகள். அளவு: 17½ × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 400. பொருள்: வேதாந்தநூல். எழுத்து: தமிழ் முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்

சங்கராச் சாரிய சுவாமிகள்
ஞானபீட மேறுகையில்
வந்து கண்டித்த பரமத வாதிகள்
சங்கைக்கு உத்தாரம்

அகண்ட பரிபூரணமாய்ச் சோதி மயமா யிருக்கும்
பிரம மென்னி லந்தகார வடிவாயிருக்கின்ற
வவித்தை பொருந்தி நில்லாதந்த வவித்தை யில்லை யெனில்

முடிவு

சித்து விலாசத்தினாற் றோன்றுஞ் செகஞ் சீவன் முத்தனுக்கு
நட்டமானாற் சித்து நித்தியமாயல்லோ யிருக்க வேணு
மாரோபமு மதிட்டானமும்போ மென்றாற் சூனியமா
மென்கின்ற சங்கைக்கு சுபாவக ஞான மொன்றுமே

சத்தியமான படியினாற் சொரூபத்துக் கானியில்லை
யென்றுத்தரம் — 78

சிவோகச் சௌபாக்கிய சுவாமிகளாற் சொல்லப்பட்ட சங்கற்ப
நிராகரண முற்றிற்று
சிவசிதம்பர தேசிகன் திருவடி வாழ்க

காலம்

இல்லை.

குறிப்பு

இது, மறைஞான சம்பந்தர் இயற்றிய சைவ சித்தாந்த சங்கற்ப நிராகரணத்தின் வேறாயது.

வரிசை எண்: 2195 சுவடி எண்: 1517

# ஞான வாசிட்டம் (உரையுடன்)

ஏடுகள்: 80. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 10-13 வரிகள் அளவு: 46 × 4 செ.மீ. கி. எண்ணிக்கை: 7000. எழுத்து: தமிழ். முழுமை: முற்றற்றது.

## தொடக்கம்

### உரைச்சிறப்புப் பாயிரம்

மணிநெடுங் கடனிகர் மாமறை முடிபுந்
துணிவுறு மவமுஞ் சொல்லுந் தொடரோன்
......... .......... ......... ......... .......... .........
......... .......... துலங்குறு தனையே

## முடிவு

அனிகமோ டேகி சதுரங்க சேனையொடு போய்
யானே யவரொ-டு மரும்போர் செங்குவன்
அடியேனே யவ்விரா க்ஷதர்க ளோடரிய
யுத்தக செய்கேன் எவ்வாறு

(இ-ம்) புத்திர வாஞ்சையினால் அவனை அனுப்ப மனமில்லாமல் விசன மடைந்த வராய் இராட்சதர் யுத்தத்துக்குச் சக்தியில்லா திருக்..................

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், ஏடுகள் தொடர்ச்சி இல்லை. முகப்பேடு இல்லை. மூன் ஓரங்கள் முறிந்திருப்பதால் உள் தலைப்புகளும் அறிவதற்கில்லை. இரண்டு ஓரங்களிலும் பாட்டின் தொடக்கம் குறிப்பிடப்பட்டுளது. உரையுடன் இருக்கிறது.

———❋———

வரிசை எண்: 2196 சுவடி எண்: 1540

# பகவத் கீதை சாரம்

ஏடுகள்: 9. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 9-10 வரிகள். பொருள்: வேதாந்தம். அளவு: $27\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ். முழுமை: முற்றற்றது.

தொடக்கம்

சோகிதனென்று நீ அழுகிறதினாலும்
பன்ன வரியோர் கணமொழியே பதர்தலாலும்
சொல்லுதற்கரிய நல்ல புத்திசாலிகளுடைய
வசனங்களைப் போலிருக்கிற வாக்குகளைச்
சொல்லுகிறதினைலும் —13

முடிவு

விருப்பு வெறுப்பில்லாம லுதாசினனாக
வசனிப்பதே திடப்பிரக்ஞனது
வசனப்பிரகாரம், இந்திரிய நி........
.......... ......... .........

காலம்

இல்லை

குறிப்பு

செய்யுட்கள்

இதில் முதல் 12 செய்யுட்கள் இல்லை பிற்பகுதியும் இல்லை தொடக்கம் முடிவு இல்லாததால் சரிபாகக் கணிக்க முடியவில்லை

---

வரிசை எண்: 2197 சுவடி எண்: 1599

# பரிபூரண உத்திர கீதை

ஏடுகள்: 63. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 8-10 வரிகள். பொருள்: வேதாந்தம். அளவு: 18 × 3செ.மீ. கி. எண்ணிக்கை: 1200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: ஸ்ரீ கிருஷ்ணபகவான். முழுமை முற்றுமுளது.

தொடக்கம்

பிறமானந்தம் பரம சுகிர்தம் கேவலம்
த்யான மூர்த்திம் விசுவாதீதம் சேகண
சதிற்சம் தத்துவ மஷ்யாதி லனிதம்
யேகம் நித்தியம் விமலம சலம்

முடிவு

பொன்னும் ஒடும் சரியென்று, சிரையும் சரியும் உண்டான அன்னமும்சரி போக வஸ்துக்கள் வந்தத்தினாலே சந்தோஷமில்லை. இப்படிக்கொத்த யோகீஷ்பரனே சீவன்முத்தன்.

அத்தியாயம் 3-க்கு கிரந்தம் 109

உத்திர கீதை மூன்று அத்தியாயமும் யெவன் மனனம் பண்ணி
அனுபவிக்கிறானோ அவனே சீவன் முத்தன்
ஸ்ரீ கிருஷ்ண நாராயண சுவாமி அருச்சுனனுக்குத்
திருவிளம் பத்தினது பரிபூரண உத்திர கீதை மூன்று
அத்தியாயமும் முஷ்திதும்

காலம்

இல்லை

குறிப்பு

குருக்ஷேத்திரத்தில் பாரதப் போரில் அருச்சுனனுக்குக் கண்ணபிரான் 18 அத்தியாயங்களிலே பகவத் கீதையை அருளினாக அதன் தத்துவப் பொருளை அறிய அசுவமேத பருவத்திலே மீண்டும் உத்திரகீதையை மூன்று அத்தியங்களாக உபதேசித் தார். அது இச்சுவடியில் தமிழில் எழுதப்பட்டுள்ளது.

பின்னர் 9 ஏடுகளில் இதனை எழுதத் தொடங்கியிருக்கிறார்கள். சீவன் முத்தனாவதற்குண்டான விளக்கங்கள் இதில் உள்ளன.

இது எமது சுவடி எண் D1722/996 ஐ போன்றது.

---

வரிசை எண்: 2198 சுவடி எண்: 1519

# வால்மீகர் அருளிச் செய்த சிவயோகம் - 10

ஏடுகள்: 4. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பொருள்: வேதாந்தம்-யோகம் அளவு: 26 × 3 சி. எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: வால்மீகர் முழுமை; முற்றுமுளது.

தொடக்கம்

வெண்பா

உற்ற பொருளை யொருநூலாய்ச் சொல்வதற்குக்
கற்பகத்தின் ருவிணையைக் காப்பென்றிங்—குற்றவர்கள்
பாதமலர் மேற்கொண்டு பாடலொரு பாடுகுரு
நாதனிரு தாளிணைய நாடு.

முடிவு

குவலயத்தி லவன்கூத்து ஒன்றுமில்லை
விண்டுரைத்தேன் சிவயோக மார்க்க மெல்லாம்
விரிவான சாஸ்த்திரத்தைக் குறிக்கிச் சென்னேன்
கண்டுரைத்தார் சித்தர்பதி னெட்டுப் பேராம்
காசினியில் பரிபாஷை யாகச் சொன்னார்
பண்டுயர விளம்பியதை யரியச் சொன்னேன்
பரமரக சியஞ்சிவயொகம் பத்து முற்றே — 10

முற்றும்

காலம்

இல்லை

குறிப்பு

இது, சிவயோகத்தின் நிலையினைச் சுருக்கிக் கூறுவது.

---

வரிசை எண்: 2199 சுவடி எண்: 1523-a

# வேதாந்த சித்தாந்தம்

ஏடுகள்: 65. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 4-6 வரிகள் பொருள்: வேதாந்த சித்தாந்த அளவு: $15\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ. கி.எண்ணிக்கை: 1000 எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்

கொண்டதொரு கூத்தெல்லாம் நாதன் கூத்து
பிரிதிவு அப்பு தேயு வாயு ஆகாசம்
ஆக பூதம் — ௫
பிராணன், அபரணன், உதானன் வியானன்
சமாணன் ஆக பிறணாதி வாயுக்கள் — 5

முடிவு

இப்படி சச்சிதானந்த சொரூபமா யிருக்கிற
பரமாத்மாவே தானென்று கரதலாகமலம்
போலே யெவனறியிருனோ அவனே
சீவன்முத்த னென்று வேதாந்த சித்தாந்தம்.

காலம்

இல்லை

குறிப்பு

இது, 36 தத்துவங்களை உள்ளடக்கி, வேதாந்தத்தையும் சித்தாந்தத்தையும் இணைத்து சிவன் முத்தனை அடையாளம் காட்டுகிறது.

---

வரிசை எண் 2200 சுவடி எண்: 1553-a

# அகத்தியர் தேவாரத் திரட்டு

ஏடுகள்: 39. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 18-20 வரிகள் பொருள்: சைவத் திருமுறைகள்: அளவு: $10\frac{1}{2} \times 5$ செ.மீ. கி.எண்ணிக்கை: 1600 எழுத்து: தமிழ். ஆசிரியர்: தேவார மூவர் – அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்

திருச்சிற்றம்பலம்

குருவுருவம் வெண்ணீ றெழுத்தஞ்சுங் கோயி
லரனுருவ மெய்ய றவைமே லாக்குந் — திருவடியுஞ்
சிட்டான வர்ச்சனையுந் தொண்டுஞ் சிவாலயமாக
ணிட்டா வகத்தியனா ராட்டு.

தோடு கூற்றா பித்தா மூன்றும்
பீடுடைத் தேசி கன்பொரு ளாகு
நீற்றுப் பதிகம் நிகழ்த்துங் காலை
மாற்றப் பரையின் வரலா றாகுந்.

* * *

தீதிலிவ் லகத்தியத் திரட்டினை யுலகினி
லோதின ரடைகுவு வோதின ரவரே!

திருச்சிற்றம்பலம்.

தோடுடைய செவியன் விடையேறியோர்
 தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென்
 னுள்ளங் கவர் கள்வன்.

முடிவு

யென்னவனாம் அரனடியே யடைந்திட்ட சடைய
 னிசைஞானி காதலன் திருநாவலூர்க்கோ
னன்னவனோ மாரூர னடிமைகேட் முகப்பார்
 ராரூரி லம்மானுக் கன்பரர் வாரே!

திருச்சிற்றம்பலம்.

அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றும்.

சபா நடேசன் துணை.

வாஞ்சேசுவா சுவாமி துணை.

மங்களாம்பாள் துணை.

காலம்

இல்லை

குறிப்பு

இதில்

| | |
|---|---|
| திருப்பிரமபுரம் | தோடுடைய செவியன் |
| திருவதிகை | கூற்றாயினவாறு |
| திருவெண்ணெய் நல்லூர் | பித்தாபிறை சூடி |
| திருவாலவாய் | மந்திரமாவது நீறு |
| பஞ்சாக்கரப் பதிகம் | துஞ்சலும் துஞ்சலிலாத |
| நமச்சிவாயத் திருப்பதிகம் | காதலாகிக் கசிந்து |
| நமச்சிவாயத் திருப்பதிகம் | சொற்றுணை வேதியன் |
| திருப்பாண்டிக் கொடுமுடி | மற்றுப்பற்றெனக்கு |
| சேத்திரக் கோவை | ஆரூர் தில்லை |
| சேத்திரக் கோவை | தில்லைச்சிற்றம்பலம் |
| சேத்திரக் கோவை | காட்டூர் கலே கடம்பூர்மலையே |
| திருவெழு கூற்றிருக்கை | ஓருருவாயினை |
| திருக்கடவூர் மயானம் | வரிய மறையார் |
| கோயிற்றிருவிருத்தம் | பாளையுடைக் கமுகோங்கி |
| திருப்பூவணம் | வடிவேறு திரிசூலம் |
| திருக்கடவூர் மயானம் | மருவார் கொன்றை |
| வான்கொழிப்புத்தூர் | பொடியுடை மார்பினர் |
| திருவதிகை வீரட்டானம் | அரவணையான் சிந்தித் |
| திருப்புன்கூர் | அந்தணாளனுள் |
| திருப்பூந்தராய் | பந்துசேர்விரலர் |
| திருக்கயிலாயம் | வேற்றாகி விண்ணாகி |
| திருக்கழுகுன்றம் | கொன்று செய்து |
| கோளறு பதிகம் | வேயுறுதோளிபங்கன் |
| திருவிருத்தம் | குலம்பலம் |
| திருத்தொண்டத்தொகை | தில்லைவாழந்தணர் |

இருபுறமும் பித்தளைத் தகடுகளும், பித்தளை நாராசமும் உள்ளன.

இது. தாலபத்திரம் எனும் கூந்தற்பனை ஏட்டில் எழுதப்பட்டுள்ளது. அச்சாகியுள்ளது.

சிவாலய முனிவர் தவத்தின்படி அகத்தியர், ''குருவருள், பரையின் வரலாறு, அஞ்செழுத்துண்மை, கோயிற்றிறமும், சிவனுருவம், திருவடி, அர்ச்சனை, அடிமை என்னும் எட்டு நிலைகளைக் கொண்ட இருபத்தைந்து பதிகங்களைக் குறிப்பிட்டு, இவைகளை முறைப்படி பாராயணம் செய்தால் மூவர் அருளிய அடங்கல் முறை முழுவதையும் பாராயணம் செய்த பலன் கிடைக்கும்'' என்று அருளினார். அதுவே இவ்வகத்தியர் தேவாரத்திரட்டு ஆகும்.''

வரிசை எண்: 2201

சுவடி எண்: 1554-b

# அகத்தியர் தேவாரத் திரட்டு

ஏடுகள்: 25 (3-27) சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு 18-20 வரிகள் பொருள்: சைவத்திருமுறைகள் அளவு: $15\frac{1}{2} \times 5\frac{1}{2}$ செ மீ கி எண்ணிக்கை: 1600. எழுத்து: தமிழ் ஆசிரியர்: முனிவர் அகத்தியர். முழுமை: முற்றுற்றது.

குறிப்பு

இது எமது சுவடி எண் 1553-a போன்றது. தாலபத்திரம் எனும் கூந்தற்பனை ஏட்டில் எழுதப்பட்டுள்ளது. முகப்பு காப்பு ஏடு பித்தளையால் ஆனது. விநாயகர், சிவலிங்கங்கள், பூசகர்கள் ஆகியோர் பதிக்கப்பட்டுள்ளனர். பின் காப்பேடு பித்தளை அதிலும் முருகன், வள்ளி, தெய்வானை ஆகியோர் புடைப்புச் சிற்பமாகக் காணப்படுகின்றனர். திரட்டு வரலாற்றினை சுவ 1553-ல் காண்க.

வரிசை எண்: 2202

சுவடி எண்: 1598

# அகத்தியர் தேவாரத் திரட்டு

ஏடுகள்: 118. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6-10 வரிகள். பொருள்: திருமுறை. அளவு: $25 \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 4000. எழுத்து: தமிழ் & கிரந்தம். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுற்றது.

குறிப்பு

இது, எமது சுவடி எண் 1553-a போன்றது. ஏடுகள் தலை தடுமாற்றம். இடையிடையே கிரந்த மாந்திரிக ஏடுகள் காணப்படுகின்றன. முகப்பேடுகளில் சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன.

வரிசை எண் : 2203 சுவடி எண் : 1534-B

# சேத்திரக் கோவை

ஏடுகள்: 2. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பொருள்: சைவத்திருமுறைகள். அளவு : $15\frac{1}{2} \times 5\frac{1}{2}$ செ.மீ. பக்கத்திற்கு: 18-20 வரிகள். கி. எண்ணிக்கை : 100. எழுத்து: தமிழ். முழுமை: முற்றுமுளது.

திருச்சிற்றம்பலம்

## தொடக்கம்

கோவில் திருவேட்களம் நெல்வாயில் கழிப்பாலை
குலவு பெருமணம் மயேந்திரப் பள்ளி முல்லை
வாயில் கலிக்காமூர் சாய்க்காடு திருப்பல்லவனீச்சுரம்
வெண்காடு வளர் திருக் காட்டுப்பள்ளி

## முடிவு

மூவரருள் பதிக மிருக்குமூ ரனேகமரம்
வைப்புத் தானமுடனே துதிப்பார்க்கு
யிருவத்தியொரு பதிமையுந் தருதியாய்ச்
சார்வாரிகள் சத்திய முத்தியுமே!-14

சேத்திரக் கோவை முற்றும்

திருச்சிற்றம்பலம்

## காலம்

இல்லை:

## குறிப்பு

இது தாலபத்திரம் எனும் கூந்தர்பனை ஏட்டில் எழுதப்பட்டுள்ளது தலைப்புக் காப்பேட்டில் விநாயகர், சிவலிங்கங்கள் பூசகள் ஆகியவை பித்தளை ஏட்டில் காணப்படுகின்றன. அதே போல் பின் மூகப்பேட்டில் பித்தளைத் தகட்டில் முருகன் வள்ளி தெய்வானை காணப்படுகின்றனர்.

இது மூவர் பாடிய சேத்திரக் கோவையினும் வேருயது பாடல் பெற்ற தலங்களின் பெயர்களைக் கூறுவது.

—❋—

வரிசை எண்: 2224 சுவடி எண்: 1554-d

# திருக்கோவையார்

ஏடுகள்: 43 (90-132) சுவடியின்நிலைமை பழுது பக்கத்திற்கு: 18-20 வரிகள்
பொருள்: சைவத்திருமுறைகள். அளவு: 15½ × 5½ செ.மீ கி. எண்ணிக்கை: 2500.
எழுத்து: தமிழ் நூலாசிரியர்: மாணிக்கவாசகர் முழுமை முற்றுமுளது.

## தொடக்கம்

திருச்சிற்றம்பலம்

எண்ணிறைந்த தில்லைபெழுதோ புரந்திகழும்
கண்ணிறைந்து நின்றருளுங்கற்பகமே - நண்ணிவசீர்த்
தேனூறுஞ் செஞ்சொற்றிருக்கோவை யென்கின்ற
நானூறு மென்மனத்தே நல்கு,
ஆரணம் ..................... செப்பிடிலே-

காட்சி

திருவளர் தாமரை சீர்வளர் காவிக ளீசர் தில்லைக்
குவளர் பூங்குயில் கோங்குபைந்தன் கொண்டோங்குதெய்வ
மருவளர் மாலையோர வல்லியினோடன்னநடைவாய்ந்
துருவளர் காமன்றன் வெற்றிக் கொடிப்போன் றொளிர்கின்றதே!

## முடிவு

இரும்பரிசி லெற்றவர்க் கருளி விரும்பிமகிழ மேவுத லுரைத்தது —400

திருச்சிற்றம்பலம்

கோவையார் முற்றும்

திருச்சதக முதலாகச் சிறந்த தமிழறு நூறு
விரித் தகவல் நாலுபொருட் கோவை யாறு
நூறு முளாத்தன் பின் முடிந்த விந்த துயர் வாத
வூரனழித்துரித்தெழுது மம்பலவ னெழுத்தன்று சாற்றினார்

சபாபதி ரெட்சிக்க
சிவகாமி அம்மன் துணை
மாணிக்காவசக மூர்த்தி துணை
திருச்சிற்றம்பலம்

## காலம்

இல்லை

## குறிப்பு

இது எமது சுவடி எண் D 2022/1469—போன்றது. கூந்தன் பனை ஏட்டில் எழுதப் பட்டுள்ளது. பித்தளையாலான காப்பேடுகள். முன்னதில், விநாயகர் சிவலிங்கங்கள், பூசகர்கள் ஆகியோரும், பின்னதில் முருகன் வள்ளி தெய்வானையுடன் புடைப்புச் சிற்பமாகக் காணப்படுகின்றனர்.

---

வரிசை எண்: 2205 சுவடி எண்: 1595-b

# திருக்கோவையார்

ஏடுகள்: 55. சுவடியின் நிலைமை: பயனற்ற நிலை பக்கத்திற்கு: 14-15 வரிகள் அளவு: 17 × 4 செ.மீ. எண்ணிக்கை: 3000. பொருள்: திருமுறைகள் எழுத்து: ஆசிரியர்: மாணிக்கவாசகர். முழுமை: முற்றுமுளது.

## தொடக்கம்

**திருக்கோவையார்**

எண்ணிறைந்த தில்லை யெழுகோபு ரந்திகழக்
கண்ணிறைந்து நின்றருளுங் கற்பகமே — நண்ணியசீர்
தேனூறு செஞ்சொற் றிருக்கோவை யென்கின்ற
நானூறு மென்மனத்தே நல்கு.

**நூல்**

திருவளர் தாமரை சீர்வளர் காவிகளீசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தன் கொண் டோங்கு தெய்வ
மருவளர் மாலையோ வல்லியினோ டன்ன, நடைவாய்ந்
துருவளர் காமன்றன வென்றிக் கொடிபோன் றொளிர்கின்றதே!

## முடிவு

... .... ... கற்பகம் கற்றவர் நற்றுணை பாணரொக்கல்
சீரணி சிந்தா மணியணி .... .... ... ... .... ... ... .... .... ...
தாரணி கொன்றையன் றக்கோ தஞ்சங்க நிதிவிதிசே
ரூரணி யுற்றவர் ... ... .... ... .... ... ... ... மூதியமே!

திருப்பரிசிலேற்றவர்க்கருளிவி ... ... ...
மகிழ மேவுத லுரித்தே — 400
திருச்சிற்றம்பலம்
திருக்கோவையார் முற்றும்

## காலம்

965-ஆம் வருஷம் வய்யாசி மாதம் 15-ஆம் தேதி சோமவாரம் .... ... ... பூனர்பூச நட்சேத்திரமும் சாத்திக வேளையும் விருச்சிக லக்கணமும் ... ... .... கூடின சுபதினத்தில் அம்பலவாணர் கவிராச வாக் ... ... .... ... ... ஸ்ரீ வைகுண்டத்திலிருக்கும் சுப்பிரமணியன் திருவாசகம் திருக்கோவையார் எழுதி முற்றுப் பெற்றது.

மாணிக்கவாசக மூர்த்தி திருவடிகளே (சரணம்)

## குறிப்பு

சிதம்பரம் திருப்பாற்கடல் மடம் எனப்படும் அம்பலத்தாடும் சுவாமிகள் மடத்தில் ஓர் நாளிரவு மாணிக்கவாசகர் சொல்லச் சிவபெருமான் சுவடியில் எழுதினார். திருவாசகத்தில் உள்ள ''திருவெம்பாவை'' அம்பலவாணரின் உள்ளத்தைக் கவர்ந்தது.

''பாவை பாடிய வாயால் கோவை பாடுக'' என்றாலும், இத்திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் திருக்கோவையாரையும், மாணிக்கவாசகர் சொல்ல அழகிய திருச்சிற்றம்பலமுடையாரே எழுதிக் கைச்சாத்திட்டு, அச்சுவடியினை, சிதம்பரம், திருச்சிற்றம்பலத்தில் உள்ள ஆடல் வல்லான் திருவடியில் வைத்து மறைந்தார்.

கோவை நூல்களிலேயே இது முதன்மைச் சிறப்புடைமையின் 'திரு' என்ற அடைமொழி சேர்த்து 'ஆர்' விகுதி சேர்த்தும் ''திருக்கோவையார்'' என வழங்கும் சிறப்பினை யுடையது இந்நூல் அச்சாகியுள்ளது.

---

வரிசை எண்: 2206 சுவடி எண்: 1600-b

# திருத்தொண்டர் புராண சாரம்

ஏடுகள்: 17. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 9-10 வரிகள். அளவு: 25 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 800. பொருள்: திருமுறை. எழுத்து: தமிழ். ஆசிரியர்: உமாபதிசிவாச்சாரியார். முழுமை முற்றுமுளது.

## தொடக்கம்

*திருச்சிற்றம்பலம்*

மல்குபுகழ்வன்றொண்ட ... ... ... ... ... ... செப்பலுற்றேன் — 1
தண்கயிலை யதுநீங்கி நாவலூர் வாழ் சைவனார்
சடையனார் தனையனாராய்
மண்புகழ வருட்டுறையா னோலைகாட்டி
மணம் விலக்க வன்றொண்டார யதிகை சேர்ந்து

## முடிவு

மானியார் நேசனார் வாழ் செங்கட்சோழனார்
பான்மையார் நீலகண்டப் பாணனார் மேன்மைச் சடையாரிசை
ஞானியார் தம்மையெல்லாஞ் சேர்த்துத் தொடையாகப்பாடி
வன்றொண்டரடியிணைகள் சிந்தனை செய்தித்தத்
திருநாமக் கோவைதனை மந்திரமாக்கொண்டு மயிர்சிலிர்த்து
நைந்துருகி மெய்யன்பா லென்றும் விளம்பப்
பெறுவார்கள் கைதவும் புல்லறியுங் கற்பணையு மையலுந்தீர்ந்
.. த விதாந்தவகண பரிபூரணத்தினித்தியமா வாழ்வார் நிதம்

முற்றிற்று
திருச்சிற்றம்பலம்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது எமது சுவடி எண் D1797 / 1156 போன்றது.

இதன் பின்னர், வாழ்த்துப்பாடல் ஏடு ஒன்றும், தேவாரம், திருக்கோவையார் எழுதிய ஏடுகள் 4-ம் உள்ளன.

---

வரிசை எண்: 2207 சுவடி எண்: 1587-b

## திருமுருகாற்றுப்படை நச்சினார்க்கினியர் உரையுடன்

ஏடுகள்: 15. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 8-10 வரிகள். அளவு: 30 × 4 செ.மீ. கி. எண்ணிக்கை: 700. பொருள்: தோத்திரம் (சைவத் திருமுறை) எழுத்து: தமிழ். ஆசிரியர்: நக்கீரர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

உலகமுவப்ப வென்பது, உலகமென்பது
முதற்க வைனென்றுந் துணையுமொரு தொடர்
உலகமென்பது பல்பொரு ளொருசொல்

**முடிவு**

... ... ... பொருந்திய ... ... ... னவ ... ... நினைய நாம
பைவாமேக நவின்ற ... ... ... டைய முனிவர்
மு.... ... ... ...னுந்துணையும் பாடும்... ... ...
னைக் கூறிற்று, நோயின்றிய ... ... ... ... ...

**காலம்**

இல்லை

**குறிப்பு**

நக்கீரர் கைலை செல்லும் வழியில் பூதத்தாப்பிடிபட்டு அதற்கு இரை யாக இருக்கும் நிலையில் முருகனைக் குறித்துப் பாடிய பாடலாகுமிது.

---

வரிசை எண்: 2208 சுவடி எண்: 1553-b

# திருவாசகம்

ஏடுகள்: 81(40-128) 84-91 ஏடுகள் இல்லை சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 18-20 வரிகள். அளவு: 10½ × 5 செ.மீ. கி. எண்ணிக்கை: 3500. பொருள்: சைவத்திருமுறைகள். எழுத்து: தமிழ். ஆசிரியர்: மாணிக்கவாசகர். முழுமை முற்றற்றது.

## தொடக்கம்

திருச்சிற்றம்பலம்

தொல்லை யிரும்பிறவி ... ... ... ... ... தேன்
பருகித் தேகமெல்லாங் கருவொறுத் தருளிக்
கருங்கடலை வேர்துளைத்திட்
டுருவா சகமென்று முண்மை யுணர்ந்துத்தமனார்
திருவாக சகமென்றுந் தேன்.

சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்றாழ் வாழ்க
விமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றான்வாழ்க.

## முடிவு

செம்மைநல மறியாத சிதடரெடுந் திரிவேனை
மும்மைமல மறுவித்து முதலாய முதல்வன்றான
னம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை யேற்றுவித்து.
வம்மையெனக் கருளியவாறார்மெறுவா ரச்சோவே! — 9

திருச்சிற்றம்பலம்
சபாநடேசன் திருவடி வாழ்க.
தியாகராசர் துணை
கமலப்பராசத்தி கிருபை

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, கூந்தற்பனை எனும் தாலப்பத்திர ஏட்டில் எழுதப்பட்டுள்ளது இரு பக்கமும் பித்தளைளக் காப்பேபடும், பித்தளை நாராச (ஆணி) யும் போடப்பட்டுள்ள பாட பேதங்கள் மிகுந்து காணப்படுகின்றன.

—— * ——

வரிசை எண்: **2209** சுவடி எண்: **1595-a**

# திருவாசகம்

ஏடுகள்: 85. சுவடியின் நிலைமை: பயனற்றநிலை. பக்கத்திற்கு: 12-14 வரிகள். பொருள்: *திருமுறை*. அளவு: 17 × 4செ.மீ. கி. எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: மாணிக்கவாசகர் முழுமை முற்றுமுளது.

## தொடக்கம்

*திருச்சிற்றம்பலம்*
*திருவாசகம்*
*சிவபுராணத் திருவகவல்*

நமச்சிவாய வாழ்க நாதன் றாள்வாழ்க
விமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றான்வாழ்க
கோகழி யாண்ட குருமனிதன் தாழ்வாழ்க
வாகம மாகிநின் றண்ணிப்பான் றாழ்வாழ்க

## முடிவு

செம்மைநல மறியாத சிதட ரொடுந் திரிவேனை
மும்மைமல மறுவித்து முதலாய முதல்வன்றாள்
நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை யேற்றுவித்த
வம்மையெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே!

## காலம்

*திருச்சிற்றம்பலம்*

1969 வருஷம் .... ... ... ஆடி மாதம் 25ஆம் தேதி சோமவாரம்
... .... .... ... நட்சேத்திரமும் துதிகையும் மீன லெக்கினமும்
கூடின சுபயோக சுபதினத்தில் ... ... .... ... ... .... ... சீவைகுண்டத்தி
லிருக்கும் சிவசுப்பிரமணியன் யெழுதி நிறைவேறியது

## குறிப்பு

மாணிக்கவாசக மூர்த்தி கிருபையுண்டாக வேணும்

''திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்'' என்பது பழமொழி, ''மாணிக்கவாசகர் சொல்ல அழகிய திருச்சிற்றம்பலமுடையார் கையெழுத்து என்று குறிப்பிடப்படுவதால் இது சிவபெருமானே தாம் கைப்பட எழுதிய சிறப்பினையுடையது. கி.பி. 9ஆம் நூற்றாண்டில் பிற்பகுதியில் வாழ்ந்தவர் இந்நூலாசிரியர் என்பது ஒரு சாரார் கருத்து. இதன் பின்னர் உள்ள திருக்கோவையாரும் மாணிக்கவாசகர் பாடியதே. இச்சுவடி மிகவும் பூச்சியரித்துள்ளது. இதன் மூலச் சுவடிபாண்டிச்சேரி ஸ்ரீ அம்பலத்தாடும் சுவாமிகள் மடாலயத்தில் உள்ளது.

வரிசை எண்: 2210 சுவடி எண்: 1554-c

# திருவாசகம்

ஏடுகள்: 62(28-89) சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 18-20 வரிகள். பொருள்: சைவத்திருமுறைகள். அளவு: 15½ × 5½ செ.மீ. கி. எண்ணிக்கை: 3500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: மாணிக்கவாசகர். முழுமை: முற்றுமுளது.

## குறிப்பு

இது எமது சுவடி எண் 1553-b போன்றது. கூந்தற்பனை ஏட்டில் எழுதப் பட்டுள்ளது. இதன் பித்தளையாலான காப்பேடுகளில் முன் ஏட்டில், விநாயகர், சிவலிங்கங்கள், பூசகர்கள் ஆகியோரும், பின் ஏட்டில் முருகன் வள்ளி தெய்வானை ஆகியோரும் புடைப்புச் சிற்பமாகக் காட்சி தருகின்றனர். திருவாசகப் பாடல்களின் அட்டவணை ஏடு கடைசியில் உள்ளது.

வரிசை எண்: 2211 சுவடி எண்: 1555-a

# திருவாசகம்

ஏடுகள்: 49. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 18-20 வரிகள். பொருள்: சைவத்திருமுறைகள். அளவு: 15 × 5½ செ.மீ. கி. எண்ணிக்கை: 3500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: மாணிக்கவாசகர். முழுமை: முற்றுமுளது.

## குறிப்பு

இது எமது சுவடி எண் 1554-c போன்றது. கூந்தற்பனை ஏடுகளில் மிகச்சிறிய எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளது. இரு புறமும் பித்தளைக் காப்பேடுகள், பித்தளை நாராசம் (ஆணி) உள்ளன.

வரிசை எண்: 2212 சுவடி எண்: 1600-a

# தேவாரத் திரட்டு

ஏடுகள்: 21. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 10-11 வரிகள். பொருள்: திருமுறை. அளவு: 25 × 3½செ.மீ. கி. எண்ணிக்கை: 700. எழுத்து: தமிழ். முழுமை முற்றற்றது.

## தொடக்கம்

திருச்சிற்றம்பலம்

திருப்பிரமபுரம் பண்-நட்டபாஷை

தோடுடைய செவியன் விடையேறியோர்
தூவெ ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ...ள்ளங் கவர்கள்வ
னேருடைய மலரான் முனநாட் ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... பெம்மா னிவனன்றே! — 1

## முடிவு

நல்லார்கள் சேர்புகலி ஞானசம்பந்த னல்ல
வெல்லார்களும் பரவு மீசனை யேத்து பாடல்
பல்லார்களு மதிக்கப் பாசுரஞ் சொன்ன பத்தும்
வல்லார்கள் வானோருலகாளவும் வல்லானெ ... ... ... — 12

திருச்சிற்றம்பலம்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில் ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும் அருளிய பாடல்களில் சில உள்ளன. திருப்பிரமபுரம் — சம்பந்தர், திருவண்ணாமலை — சம்பந்தர், திருவிழிமிழலை — சம்பந்தர், திருக்கழுக்குன்றம் — சுந்தரர், திருவால்வாய் — சம்பந்தர் திருக்கழுமலம் — சம்பந்தர், திருக்கூடலையாற்றூர் — சுந்தரர், திருவாரூர் — அப்பர் திருவாலவாய் சம்பந்தர், திருக்குறும்பலா — ஞானசம்பந்தர், திருவையாறு — அப்பர், வேயுறுதோளி — சம்பந்தர், திருவாலவாய் — சம்பந்தர், திருவாணைக்கா — சம்பந்தர் நமச்சிவாயத் திருப்பதிகம் — சம்பந்தர், திருப்பாசுரம் — சம்பந்தர் ஆகியவை உள்ளன.

வரிசை எண்: 2213 சுவடி எண்: 1555-b

# பெரியபுராணம்

ஏடுகள்: 275 (50-342) சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 18-20 வரிகள். அளவு: 15 × 5½ செ.மீ. கி. எண்ணிக்கை: 14000. பொருள்: சைவத்திருமுறைகள். எழுத்து: தமிழ். ஆசிரியர்: சேக்கிழார். முழுமை முற்றுமுளது.

## தொடக்கம்

திருச்சிற்றம்பலம்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய
லகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்

## முடிவு

என்று மின்பம் பெருகு மியல்பினா
லொன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான் புகழ்
நின்ற தெங்கு நிலவி யுலகெலாம் — 53

வெள்ளானைச் சருக்கம் முற்றும்

ஆக விருத்தம் 4286-ம்

## காலம்

சித்தார்த்தி வருஷம் தை மாதம் 12-தேதி நாகூரிலிருக்கும் ஆபதோத்தாரணம் நெட்டெழுத்தால் திருத்தங்கணத்திலிருக்கும் சபாபதி முதலியாருக்கு எழுதிக் கொடுத்த பெரியபுராணந் திருவாசகத்தை வாசிக்கும் நாயன்மார்கள் ஆபதோத்தாரணத்துக்கு நல்ல புத்தி சதேக சிவன்முத்தி சாட்சாத்காரமுங் கிடைக்கும்படி சிந்திக்க

திருச்சிற்றம்பலம்
ஸ்ரீ குருப்பியோ நம:
வேலுமயிலுந் துணையாக

## குறிப்பு

இருபுறமும் பித்தளை காப்பேடு கொண்டது. பித்தளை (ஆணி) நாராசமும் கொண்டது. கூந்தற்பனை ஏட்டில் எழுதப்பட்டுளது. அச்சாகியுள்ளது.

—*—

வரிசை எண்: 2214 சுவடி எண்: 1552

# அவநாசிபத்து

ஏடுகள்: 3. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: சைவத்தோத்திரம். அளவு: 28 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 80. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

... ... ... .... மவும் பூவிலுரையும் .... ... ... .... ... ...
... ... ... ... வரத வேத ... ... ... ... ... ... ...ளிந்த
சிவகாமி வல்லியுடனே கருமேனிக் கொன்று
வருங்கால் தூதர் கடி ... ... .... ... ....கினாடி ... .... ....வறுமுன்
மறுமேவு மஞ்சொலை அவனாசிதர
வரவேணு மெந்தன் அருகே — 1

**முடிவு**

தங்கமான உடலுஞ் சுமந்து
சிமையுங் கனிந்து விடுமுன்
மா .... .... ... ... அவனாசினாதர்
வரவேணு மெந்த னருகே — 11
குருவே துணை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

கொங்கேழு தலங்களுள் ஒன்றான அவினாசியில் உள்ள இறைவன் மீது பாடப் பட்டதாகுமிது.

—❋—

வரிசை எண்: 2215 சுவடி எண்: 1550

# எக்காலக் கண்ணி

ஏடுகள்: 15. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6-8 வரிகள். பொருள்: சைவத் தோத்திரம். அளவு: 28½ × 3செ.மீ. கி. எண்ணிக்கை: 300. எழுத்து: தமிழ். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

... ... ... ....த்தி சிந்தை விளக்காம்
தீவாகரத்தில் ... .... ... .... தோறாமல்
நேரே பகிதி யுறுவா மனமே பத்து
முத்திதரும் வேத மொழிந்த
மெஞ்ஞானப் புலம்பல் சொல்ல
அத்திமுகன் பாதம் ஆத்தாள் சிவானந்தி
அருள்புரிவ தெக்காலம் — 1

### முடிவு

யிரும்போ உனது மனம்
    என்மீதி லன்பு வைக்க
கரும்புச் சுவை யமுர்தங்
    கண்டு கொள்வ தெக்காலம் — 159

### காலம்

இல்லை

### குறிப்பு

பத்திரகிரியார், 'நாம் திருவருள் பெறுவது எக்காலம்' என்று இறைவனை நோக்கிப் புலம்புகிறார். ஏட்டின் மேல் பகுதி அரித்துள்ளது. எழுத்துக்கள் அறிவதற்கில்லை இது. பெரியஞானக்கோவையில் 232 கண்ணிகளுடன் இடம் பெற்றுள்ளது.

---

வரிசை எண்: 2216 சுவடி எண்: 1582

## கணேச பதிகம்

ஏடுகள்: 8. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 5 வரிகள். பொருள்: தோத்திரம். அளவு: 26 × 2½ செ.மீ. கி. எண்ணிக்கை; 150. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை முற்றுமுளது.

### தொடக்கம்

**கணேசன் பேரில் பதிகம்**

மூலதிரி கோணமதில் வட்டநால் பீசமும்
    முளைத்தெழுந் தோங்காரமாய்
ஓராறு மொன்றாகி ஆயிரத் தெட்டண்ட
    முடிவா யுலாவு துங்க
வால பரிபூரண சராசர நிராகரமு
    மதிவிதியும் ஓர் கருணையாய்
வதனப் பிரசன்ன உந்ததன் மிதியென நடன
    மரகரசிவாய வெனவும்

## முடிவு

ஆதார மானபொருள் நீயென்று முயிராகி
யறன்மனையி நகரில் வாழ்வே
அரகரா ஓம்சிவா தருகுண நேமனே
அத்தியே கரிய மணியே
காதார யிக்கவிதை கேட்டுப் படிப்புதவு
கனகவள ரொலி நாயக்க
கடகரட விகடதட மதகளிற் றைந்துகர
கணபதிக் கடவுள் முதலே! — 10

கணேசப் பதிகம் முற்றும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இது பிள்ளையார் மீது பாடிய பதினாறு சீர் கழி நெடிலாசிரிய விருத்தம்.

---

வரிசை எண்: 2217 சுவடி எண்: 1512

# கபில ரகவல்

ஏடுகள்: 3. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு; 8-9 வரிகள். பொருள்: சைவத்தோத்திரம். அளவு: 24 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 120. எழுத்து: தமிழ். ஆசிரியர்: கபிலர் முழுமை முற்றுமுளது.

## தொடக்கம்

நான்முகத்தோன் கூறிய ஞான வழிவகையின்
ஞானச் சிறப்பை அரும்பொருளைக் கூறுங்காண்
ஆண்முதிதோ பெண்முதிதோ
ஆண்ட வினைமுதிதோ
நான்முதிதோ கோள்முதிதோ
நல்வினை மூத்ததோ
தீவினை மூத்ததோ

### முடிவு

என்னா மாகிலு மேற்பவர்க் கிட்டு
புலையுங் குலையுங் களவுஞ் சீற்றமு
நிலைபெறக் களைந்து நிற்பதை யறிந்து
ஆணும் பெண்ணு மல்லது குலமல்லப்
பேணி வகுக்கப் பிழையெனப் படுமே!

சிவமயம்

கபிலரகவல் முற்றும்

### காலம்

இல்லை

### குறிப்பு

இது, எமது சுவடி எண் D 1145/837-g போன்றது. சாதி வேறுபாடுகளைக் களைந்து உலகியலைக் கூறுவது.

---

வரிசை எண்: 2218 சுவடி எண்: 1513

## கபிலரகவல்

ஏடுகள்: 3. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 8-9 வரிகள். பொருள்: சைவத்தோத்திர நூல் அளவு: 24 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 120. எழுத்து: தமிழ். ஆசிரியர்: கபிலர் முழுமை முற்றுமுளது.

### தொடக்கம்

### முடிவு

### காலம்

### குறிப்பு

இது முன்பிரதி போன்றது

---

வரிசை எண்: 2219 சுவடி எண்: 1514

# சிவவாக்கியர் பாடல்

ஏடுகள்: 21. சுவடியின் நிலைமை: நிறைப்பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். பொருள்: சைவத்தோத்திரம். அளவு: 24 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 600. எழுத்து: தமிழ். ஆசிரியர்: சிவவாக்கியர். முழுமை: முற்றுமுளது.

## தொடக்கம்

*சிவவாக்கியம்*

அரியதோர் நமச்சிவாயம் ஆதியந்த மானது
மாறுநூறு தேவரன்று ரைத்த மந்திரம்
சுறுதியோ ரெழுத்துள்ளே சொல்லுவேன் சிவவாக்கியம்
தோசமாவ மானமாய்கை தூரத்தூர வோடுமே

## முடிவு

குடுகு டென்று வந்துவுயிர்
கொண்டு யிமன் போகையில்
குழந்தை மக்கள் அன்னை சுத்தம்
கூடியெந்த வார்த்தை பேசினும்
என்னை யாண்ட சோதியை
யெட்டெழுத்து மானதே — 149

சிவவாகியம் எழுதி முகிந்தது

முற்றும்

படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழுந் தாமரையுங் கையுந் — துடியிடையும்
அல்லும் பகலும் அனவரதமும் நினைத்தாற்
கல்லுஞ் சொல்லதோ கவி

நமசிவாயம்

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, பதினெண் சித்தர் பெரிய ஞானக் கோவையில் இடம் பெற்றுள்ளது. இவரும் 18 சித்தர்களில் ஒருவர். தத்துவக் கருத்து உரைப்புதோடு, சாதியைச் சாடுவதிலும் இப்பாடல்கள் சிறந்தன,

வரிசை எண்: 2220 சுவடி எண்: 1578-b

# சௌந்தர்ய லகரி

ஏடுகள்: 3. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 6 வரிகள். பொருள்: சைவத்தோத்திரம். அளவு: 25½ × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 100. எழுத்து: கிரந்தம். ஆசிரியர்: ஆதிசங்கரர் முழுமை: முற்றற்றது.

## தொடக்கம்

சிவ சக்த்யா யுக்தோ யதிபவதி சக்த: ப்ரபவிதும்
நசேதேவதேவோ நகலு குசலஸ்பந்திதுமபி|
அதஸ்த்வ மாராத்யாம் ஹரிஹர விரிஞ்சாதிபி
ப்ரணந்தும் ஸ்தோதும் வரகதமக்ருத புண்ய: ப்ரபவதி||

## முடிவு

சதுர்பி ஸ்ரீ கண்டேங்சிவ யுவதிபி: பஞ்சபிரபிரபி
ப்ரபின்னாபிஸ் சம்போர் நவபிரபிமூல ப்ரக்ருதிபி:|
த்ரயஸ் சத்வாரிம்ஸத் சுதல கலாசத்ரி வலயம்
ஸ்த்ர ரேகாபிஸ் சார்த்தம் தவசரணகோணா: பரிணதா:||

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில் 11 சுலோகங்கள் முழுமையாக உள்ளன.

---

வரிசை எண்: 2221 சுவடி எண்: 1587-a

# சௌந்தர்யலகரி உரையுடன்

ஏடுகள்: 79(6-84). சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 8-10 வரிகள். பொருள்: தோத்திரம். அளவு: 30 × 4 செ.மீ. கி.எண்ணிக்கை: 4000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: கவிராசபண்டிதர் வீரையானாதர். முழுமை: முற்றற்றது.

## தொடக்கம்

... .... ... ... ...படுமவளுடைய் பாதத்தை
இவ்வுலகினிடத் தனேகந்தரஞ் செய்தவர்கள்
.... ... ... .... .... ... ... ... ... ... ... ... ...

## முடிவு

*யீதயர்ந்து விடா சொலுங்கவி ராசபண்டிதன்*
*வீரையா னாதரஞ்சகிதாள் பெறுந்*
*திருநாம மென்பது நூறுமே யோதினர்*
பல போகமும் சிவலோகமும் பெறுவார்களே! — 104

சவுந்தரியலகிரி எழுதி முகிந்தது

## காலம்

973-ஆம் வருஷம் பிங்கள வருஷம் அற்ப்பிசி மாதம் 24-ஆம் தேதி சோமவாரமும் அமரபட்சத்துத் துதிகையும் ரோகணி நட்சேத்திரமுஞ் சுபயோக சுபகறணமும் பெற்ற சுபதினத்தில் எழுதி முகித்தான்; திருநெல்வேலி செங்கல் மடம் முடுக்கிலிருக்கும் பரியேறும் பிள்ளையவர்கள் குமாரன் நெல்லை நாயகம் எழுத்து.

நீடூழி வாழ்க சாலிவாடீசுவர சுவாமி லெட்சிக்க
காந்திமதி சோதி சகாயம்
குமரகுருபர முருக சரவணைத்
தெய்வம் முன்னிற்க
குருபாதமே கெதி

சிவசற்குரு பாதம்

## குறிப்பு

தொடக்க ஏடுகள் 5 இல்லை. ஆதிசங்கரர் எழுதிய நூலைத் தமிழில் செய்யுளாக்கி உரையும் எழுதியுள்ளார். இறுதியில் 4 பாடல்கள் நூற்பயன் கூறுகின்றன.

---

வரிசை எண்: 2222 சுவடி எண்: 1541

# பட்டினத்தார் பாடல்கள்

ஏடுகள்: 16. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 6-8 வரிகள். பொருள்: சைவத்தோத்திரம். அளவு: 21½ × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பட்டினத்தார். முழுமை: முற்றுமுளது.

## தொடக்கம்

**பட்டினத்தார் புலம்பல் — இறந்தகாலத்திரங்கல்**

வார்த்தை திறமில்லா மனிதருக்குப்
புன்சொல்லாஞ்
சாத்திரங்கள் சொல்லி சதிரிழந்து
கெட்டேனே — 1

பூரணமாலை

மூலத் துதித்தெழுந்த
முக்கோண சக்கரத்துள்
வாலை தனைப் போற்றாமல்
மதிமறந்தேன் — பூரணமே

## முடிவு

பூரண மாலைதனைப்
புத்தியுட னோதினர்க்குத்
தாரணியின் ஞானந்
தழைப்பிப்பாய் பூரணமே — 103

பூரணமாலை முற்றிற்று

## காலம்

இல்லை

## குறிப்பு

இதன் பின், நெஞ்சொடு மகிழ்தல் இரண்டு ஏடுகள் உள்ளன. இது அச்சாகியுளது.

வரிசை எண்: 2223 சுவடி எண்: 1548

# பட்டினத்தார் பாடல்

ஏடுகள்: 22. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். பொருள்: சைவத்தோத்திரம். அளவு: 23 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 350. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பட்டினத்தார். முழுமை: முற்றற்றது.

## தொடக்கம்

திருவேடமாகி தெருவினில்ப் பயன்றென்னைத்
தேடி வந்து
பருவாகிய பிட்சை பகருமென்றாரைப்
பதம் பணிந்து
கறுவாகு மெந்தன் கடகரைக்கே மேவிக்
கறுதுமென்னை
உறுவாகிக் கொள்வனென்றே இங்கனே
சிவனுத்ததுவே! — 1

**முடிவு**

**செஞ்சடையா முனறிவளியா முனயற் கண்கள்**
**பஞ்சடையாமல் அடியேனைக் காத்துப் பதந்தருவாய்**
**செஞ்சடையான் பரமகயிலாசச் சிவக் கொழுந்தே!** — 97

**தெண்டாயுதபாணி துணை**
**குருகடாட்சம்**

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, பட்டினத்தார் பாடிய பல பாடல்களில் ஒன்று இதன் பின்னர் *'சங்கத்தார் பாடல்'* என்ற தலைப்பில்

''*கால ஞாயற்கடுங்கதிர் பரப்பு*
வேலையுங் குளமும் வெட்டி வற்ச்சு
.................................................
வருந்த வேண்டாம் வராதீர் வராதீர்
இருந்தன மிருந்தன மிடர்தவிந்த் தனமோ'' என்ற அகவல் உளது.

---

வரிசை எண்: **2224** சுவடி எண்: **1549**

# பூரண மாலை

ஏடுகள்: 9. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: சைவத்தோத்திரம் அளவு: 28 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பட்டினத்தார். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

(முதல் மூன்று கண்ணிகள் எழுது மாறில்லை)

*உருத்திரனை யிருதயத்தில்*
*உண்மையுடன் ஏத்தாமல்*
*கருத்தழிந்து நானும்*
*கலங்கினேன்—பூரணமே* — 4

**முடிவு**

படைத்து அளித்திடுவாய்
பரப்பிரமன் தன்னினத்தை
துடைத்து ....................
துலங்கவைப்பாய்—பூரணமே — 84

குருபாதம் துணை
சிவராம செயம்
தாயிமான சாமி துணையாக வேண்டியது.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

சுவடியின் மேல் பகுதி அரித்துள்ளதால் எழுத்துக்கள் அறியக்கூடவில்லை. ''மூலத் துதித்தெழுந்த எனத் தொடங்கும் இப்பாடல் பெரியஞானக் கோவையில் இடம் பெற்றுள்ளது. அதில் 102 கண்ணிகள் உள்ளன.

---

வரிசை எண்: 2225 சுவடி எண்: 1537

# வைராக்கிய தீபம்

ஏடுகள்: 42. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 7-9 வரிகள். பொருள்: வீரசைவசாத்திரம். அளவு: 27 × 3 செ.மீ. கி.எண்ணிக்கை: 1000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: சாந்தலிங்க சுவாமிகள். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

வைராக்கிய தீபம்
மூலம் பாயிரம்

ஆரணமுகம்புகழ் வாரணந் துதிசெயக்
காரண சுகபரி பூரணம் வருமே!

நூல்

தோன்றிநின் றழியப் படுங்கொடும்
பிறப்பிற் றுன்பமே யன்றி யெட்டுணையு
மூன்றி நெஞ்சகத்தோந்திடிற் பிறிதிலை
யாறுண்டு போற்றிரிந்துயர்க் கெல்லாந்

**முடிவு**

**பின்னை மூவரி லிரண்டு பேர்களுஞ்**
**சமாதி யோகந்**
**தன்னையுற் றிருப்பவர் தேகசஞ் சார**
**நிமித்தந் தன்னா**
**யுன்னு வோளிவரன் வேற்றோ**
**ராலுணர்பவன் வரியா னாகு**
**மன்னியர் தம்மாற் றன்னா லறியாதோ**
**னன்றி உனாமே.**

**அ-கை இந்த நால்வர் பயன்களைக் கூறல்,**
**அரிதாகுமிவர்களிவ்வா றனேகரானாலுருதி—சரியாகும்**
**பாடுபட்ட சமாதிக்குப் பலனே தென்றால்.........**

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் ஏடுகள் ஒடிந்தும் இடம் மாறியும் உள்ளன. நூல்பற்றிய செய்திகளை எமது சுவடி எண் D 686/538-Cல் காண்க.

---

வரிசை எண்: **2226** சுவடி எண்: 1558

# கெருடப் பத்து

ஏடுகள்: 46. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 5 வரிகள். பொருள்: வைணவ தோத்திரம். அளவு: 36 × 2 செ.மீ. கி. எண்ணிக்கை: 1000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுள்ளது.

**தொடக்கம்**

ஹரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை
தேவாதிதேவர் பாலராலுண்ணாது
திருநாம மோது திருவாய்
மூவாத வாயு வுலகே ளோடெருமந்
சாரு ...................................
மேவாத வின்பமவை மேவி மேவி
தெடுவீடு கண்டு முடிவாய்

**முடிவு**

கண்டில்லை முன்புசொல்லக் கேட்டில்லை
    கண்ணுண் டெம்பால்
கொண்டிலைக் கொடுப்பதல்லாற்
    குறை... யாதுநின் கொள்கை
யுண்டிலை யென்ற ..............
    தந்த உதவியோனே
பண்டிலை நண்புநாங்கள் செயித்தது
    பகாதி..............ன. — 12

கெருடப்பற்று எழுதி நிறைந்தது
சம்பூர்ணம்

ஸ்ரீராம ......தி பாதார விந்தருமகெதி
ஸ்ரீமத் ராமச் சந்திர மூர்த்தி பாதாரவிந்தமே கெதி
கெருடபகவான் துணை

**காலம்**

சுக்கில வருஷம் புரட்டாசி மாதம் ....... திருவோண நட்சேத்திரத்தில் கெருடபற்று எழுதி முகிந்தது; முற்றும்

விக்கினேசுபரன் துணை
ரங்கன் செட்டி மகன் கிஷ்ணன் செட்டி

**குறிப்பு**

திருமால் இரமாபத்திரர் தேவர்கள் முதலானோருக்குச் சொல்லியதுபோலும்.

---

வரிசை எண்: 2227 சுவடி எண்: 1579

## சிறுத்தொண்டர் நாடகம்

ஏடுகள்: 135. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: நாடகம். அளவு: 40 × 3 செ.மீ. கி.எண்ணிக்கை: 6000 எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுள்ளது.

**தொடக்கம்**

சிவமயம்
கங்காள மூர்த்தி துணை
கலித்துறை

திருமாதுரையும் பின்ன லூர்மக மாயி
    நின் செங்கமல
யிருபாதந் தன்னை யிரஞ்சும் ரெங்கய்யரை
    யெப்பொழுதும்
குருவா யெனதுளங் கொண்டரனாருக்கு
    யூனமுது
தருநாடகந் தனைப்பாட நல்வாக்கியந்
    தந்திடவே!

## நூல்
### விருத்தம்

மாமணியா ரரவணியும் வள்ளல் தனக்கு
அமுதூட்டி வளர்பேர் பெற்ற
மாமறையோர் குலத்துதித்த பரஞ்சோதி
பண்டிதனார் வளமை கூர்

முடிவு

நாரணன் பூமகட்கும் நற்றவத்தோ ரனைவருக்கும்
காரண குருவினுக்கும் கற்றுணர்ந்த நல்வர்க்கும்
மங்களம்

சிறுத்தொண்டர் நங்கையர்க்கும் சீரா ளனாதருக்கும்
அருள்கொண்ட சந்தனநங்கையான மகா பத்தினிக்கும்
மங்களம்

குருவே துணை
மாரியம்மன் துணை
வப்பாளிக் கூத்தர் துணை
நாட்டாரப்பன் துணையாகவும்
மாகாளியம்மன் துணை

காலம்

ஏவிளம்பி வருஷம் ஆனி மாதம் 12-ஆம் தேதி குருவாரம் அமரமட்சம் தசமியில் அசுபதி நட்சத்திரத்தில் அமிர்தயோகத்தில் லாப வேளையில் சிம்ம லக்கினத்தில் வல்லூறுப்பட்சி போஜன வேளையில் சிவேத முகூர்ந்தத்தில் ஆறாவது சமயம், சொர்ண வஸ்த்திராபரண சமையத்தில் உத்தராயண கால இரவி நமஸ்கார வேளையில் இத்தியாதி கூடிய சுபயோக சுபமுகூர்த்தத்தில் அம்மாள் பேட்டையிலிருக்கும் வாத்தியார், கூத்தப்பெருமாள் பிள்ளை மகன் அண்ணாமலைப் பிள்ளை பார்வையிட்டு எழுதப்பட்டது.

முற்றிற்று
கடவுள் துணையாக வேண்டியது.

## குறிப்பு

அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராகிய சிறுத்தொண்டர் வரலாற்றினை நாடக ரூபமாக ஆக்கி, சித்திரை அம்மாவாசையன்று இரவில் நடிப்பது பண்டுதொட்டு வந்த மரபாகும். அவ்வாறு எழுதப்பட்ட நல்ல பிரதியாகக் காணப்படுகிறது. பல இடங்களில் இந்நாடகம் நடைபெறும். அவ்வாறு நடத்தும் நாடகாசிரியர் ஒருவர் இதனை எழுதியமைத்திருத்தல் வேண்டும்.

வசை எண்: 2228 சுவடி எண்: 1522

# பன்னிரு பத்திரிக்கை

ஏடுகள்: 80 (7-86) சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 5-7 வரிகள். பொருள்: வரலாறு. அளவு: 29 × 2½ செ.மீ. கி.எண்ணிக்கை: 2500. எழுத்து : தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

## தொடக்கம்

(முதல் 6 ஏடுகள் இன்மையால் தொடக்கம் இல்லை அதனால் 2வது பத்திரிக்கை தொடக்கம் எழுதப்பட்டது)

ரெண்டாவது பத்திரிக்கை

ரெண்டாவது பத்திரிக்கை எழுதுகிறது வீறபோக வசந்த ருயர் பத்திரிக்கை, சுபமஷ்த்து. மங்களம். நிருபம் வந்தது. ஸ்ரீமன் நாராயணமூர்த்தியே பிறவா வருஷத்திலே வையாசி மாசம் 3-ஆம் தேதி பூராட நட்சத்திரமும் திறையோதசி குருவாரமும் கூடின சமையத்திலே பகுத்தாப்பிய ரிஷியாச்சிரமத்திலே போய்ச் சேர்ந்து அகோறமாணவன் தங்களும் மகாமுனியிசுபராளும் அவரவர்களைக் கண்டு தரிசனம்பண்ணி

## முடிவு

(பதினோராம் பத்திரிகையின் முடிவு—பின்பாதி ஒடிந்த நிலை)
.........பது வருஷம் ராச்சிய பரிபாலிமை பண்ணு......
ரியவிற்த்தி கொடுத்து ரட்சிப்போம் சாம .........
நமா வீரபோக வசந்தருயர் சுவாமியே ..........
றக்கையம்மாள் பாதாறமே நமா. சுவாமி ..........
பத்திரிக்கை முற்றிற்று. குரு.........

## காலம்

(மூன்றாவது பத்திரிக்கை தொடக்கத்தில்)

1555-ஆம் வருஷம் செல்லாநின்ற கலியும் 4932 ஆன ருத்ரோத்காரி வருஷம் மாசி-மீ 7-தேதி குருவாரம் திசமி விசாக நட்சேத்திரமாகிய சுபதினத்தில் மகா மத்திரமாகிய ருத்திரமேளி யீசுபரசுவாமி ............

## குறிப்பு

தொடக்கம் இல்லை. இதில் உலகத்தில் அதர்மம், அநீதி அதிகமானதால் ஈசுவரன், நாராயணர், சக்தி முதலானவர்களை முனிவர்கள் வேண்டி வரம் பெற்று, அதன்மூலம் வீறபோக வசந்தராயர் பிறந்து நீதியோடு அரசாண்ட செய்தி கூறப்பட்டுள்ளது.

வரிசை எண்: 2229 சுவடி எண்: 1525

# பன்னிரு பத்திரிக்கை வரலாறு

ஏடுகள்: 35. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 12-15 வரிகள். பொருள்: வரலாறு. அளவு: 13½ × 4 செ.மீ. எண்ணிக்கை: 2500. எழுத்து: தமிழ் ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

முதலாவது பத்திரிக்கை
கிரேகாதர தண்ட மகாமுனி யேஷ்பரர்கள்
மகாசித்தர்கள் மகா புண்ணிய புருஷர்கள்
மகாயோகிகள் இந்தக் கலியுகத்திலே
நடத்தப் போகிற விருத்தாங்கள் எழுதி
அனுப்பின விதம் யெப்படி யென்றால்

**முடிவு**

............பதவியடைவார்கள் இதற்குச் சமுச்சியமில்லை
பனிரெண்டாவது பத்திரிகை சிதம்பர சுவாமியார்
லட்சிக்கவேணும் ......... உண்டாக வேண்டியது
சாம்பசிவ மூர்த்தி சகாயம்.........
வசந்த ருயர்
கிருபா கடாட்சம் யென்றாளும் பெ..............
வேங்கடம்மா..................
......... வெள்ளிக்கிழமை அஷ்டமி புண்ணிய..........
இந்த .........பத்திரிக்கை சம்பூர்ணம்
உடுமலைப் பேட்டை பழனிக்குமாறுனடான்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, எமது சுவடி எண் 1522 போன்றது. இதுவும் குறைபாடுடையதே.

---

வரிசை எண்: 2230 சுவடி எண்: 1543

# தேசச் சட்டங்கள்

ஏடுகள்: 4. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 6-8 வரிகள். பொருள்: சட்டம். அளவு: 24 × 3 செ.மீ. கி.எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

*கிறிஸ்த்து 1816-ஆம் வருஷந்து 11-வது சட்டம்*
சென்ன பட்டணத்து அதிகாரத்துக் குட்பட்ட
சகல தேசங்களிலும் போலீசு என்று சொல்லப்பட்ட
காவல் பொதுப்பட நடக்கும்படி யேற்படுத்து—
கிறதற்காக விதிக்கப்பட்ட சட்டம்.

**முடிவு**

அந்தக் குற்றங்களை சுமத்தினவர்களையும்
சாட்சிக் காரர்களையும் அந்தத்
தாலூகா போலீஸ் உத்தியோகஸ்த்தர்களிடத்துக்கு
அனுப்ப வேண்டியது

**காலம்**

கி.பி 1816-ஆம் ஆண்டு

**குறிப்பு**

சென்னை அரசாங்கச் சட்டமாகுமிது.

---

வசை எண்: 2231 சுவடி எண்: 1576

## பதார்த்த சாரம்

ஏடுகள்: 210. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 7-9 வரிகள். பொருள்: தத்துவம். அளவு: 54 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 17000. எழுத்து: மணிப்பிரவாளம். ஆசிரியர்: மகாநந்தி முழுமை: முறுமுளது.

**தொடக்கம்**

ஓம் பணமிய பஞ்ச குருணம் தேஸியம் சகணதாயினம்!
போச்சம் பயத்தசாரம் சிச்சியரம் பவ்ய ஜீவாணம்!!

இப்படி மங்களாதி அர்த்தமாகவும் விசிஷ்ட்ட இஷ்ட்டாதிக்ரத அபிமத் தேவதா திரயத்துக்கு நாஸ்த்திக்ய பரிஹாரத்தமாகவும் சிஷ்ட ஆசார ப்ரதிபாலனார்த்தமாகவும் புண்ய அவாப்தியர்த்தமாகவும் நிர்விக்னார்த்தமாகவும் நமஸ்காரம் பண்ணி பதார்த்தசார மென்கிற கிரந்தத்தைச் சொல்லுகிறேன்

**முடிவு**

இதி வீதராக சர்வக்ஞ ப்ரணீதமும் சப்தபங்கி
சமாலிங்கிதமுமாகிய பதார்த்த சார சாஸ்த்திரேசக்த ஞான
மார்க்கணா சொரூபணம். த்வாவிம்சதி பரிச்சேத:
சதுர்விம்சதி தீர்த்தேசாம் சதுர்க்கதி நிவர்த்தயே
விருஷபாதி மகாவீரான் ப்ர்யந்தாம் ப்ரணமாம்யகம்
ஸ்ரீவிதராக: வீதராகாய நம:

**காலம்**

பகுதான்ய நாம சம்வத்சரே தட்சிணாயனே ஸ்ராவண மாசே ஸ்வரவண நட்சத்ரே பூர்ணம்யாம் திதௌ புதவாசர யுக்தாயாம் ஏவம் குண விஸிஷ்டாயாம் திதௌ வாசர:

ஆதிபுரக்ராம வாசின: அனந்தநா ஸ்ராவகேனபுத்ர: நேமிசாகர ஸ்ராவகேன ஸ்பவ ஹஸ்த்த விகிதம் ஸ்ரீரஸ்து.

ஸ்ரீ சுபமஸ்து கரக்ருத மபராதம் க்ஷந்து மர்ஹந்தி சந்த:
ஆக சர்க்கம் 22. வெகுதான்ய வருஷம் ஆடி மாதம் 26

எழுதி முடிந்தது.

## குறிப்பு

இது ஜைனமத தத்துவ நூல். ஜிவபதார்த்தம், அஜீவ பதார்த்தம், ஆஸ்ரவ பதார்த்தம், பந்த பதார்த்தம், புண்ய பதார்த்தம், பாப பதபர்த்தம், சம்வர பதார்த்தம், மோட்ச பதார்த்தம் ஆகிய ஒன்பது பதார்த்தங்களின் உண்மை கூறுவது அச்சாகியுள்ளது இதில 22 சர்க்கங்களே உள்ளன மொத்தம் 30 சர்க்கங்களை கொண்டதுவாகுமிது. 87

—— ❋ ——

வரிசை எண்: 2232 சுவடி எண்: 1523-b

# குருநாடி

ஏடுகள்: 15. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 5-6 வரிகள். பொருள்: நாடிசாத்திரம். அளவு: $15\frac{1}{2} \times 2$ செ.மீ. கி. எண்ணிக்கை: 250. எழுத்து: தமிழ். ஆசிரியர்: (அகத்தியர்) முழுமை: முற்றுமுள்ளது.

## தொடக்கம்

### தசவாயுக்களின் பேர்

பூரணமா மாதாரந் தன்னின் நின்ற
    புரியட்ட தசவாயுப் பேர்தான் கேளு
வாரணமாம் பிராணனோ டபானன் றானும
    மகத்தான வுதானனுடன் சமானன் வியானன்
காரணமா நாகனோடு கூர்மன் றானுங்
    கனமான கிரிகாகூர் தேவ தத்தன்
ஆரணமாந் தனஞ்சயனும் பத்து வாச்சு
    தப்பனே யசைவயினி யன்றகின்றேனே! —1

முடிவு

சித்தமுறுந் தலைவலிபடிக்கும் பித்த மாகுஞ்
சீரான தயரோகந் தயரோகந் தனக்குப் பித்தம்
குற்றமில்லை யிதின்குணங்கள் மருந்தாற்றி றாங்க
குருவான பூரணத்தின் குறிதான் பாரே! —30

காலம்

இல்லை

குறிப்பு

இதில், நாடி பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. இதன் பின்னர், மலர்கள் பெயரெழுதிய ஏடு ஒன்று உள்ளது.

———❋———

வரிசை எண்: 2233 சுவடி எண்: 1511

# கொக்கோகம்

ஏடுகள்: 56. சுவடியின் நிலைமை மிகப்பழுது. பக்கத்திற்கு: 7–8 வரிகள். பொருள்: காமநூல். அளவு: 24 × 3 செ.மீ. கி எண்ணிக்கை: 1500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: வரதுங்கபாண்டியன். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்

ஹரி:ஓம் நன்றாக குருவாழ்க குருவேதுணை

உனது சரக் காலமதி லனைய மெய்யும்
உடல் குளைந்த பிறைச்சடையும கரங்க நான்கும்
அனவாத முறும்பை ப ...... ஞானமருள்
பளிங்கு வடமிடு பொத்தகமு மாக

* * *

நிலநீர்ாலன் விசும்பா யுலக மெல்லாம்
நீண்டசிவ னயனாகி மத்தங்............
..............பயோததியைக் கடைந்து தோன்று
மமிர்திதன விண்ணவர்க...... ......

நூல்

திருமலி கருப்பு வென்றிச்
சிலையினி லுலக மெல்லாம்
பொருதுசெங் கோல்நடத்தி
புகழ்புனை யேக வீரன்
விரிகடல் பிறந்த திங்கள்
வெண்குடை நீழல் வைகும்
மருமலர் மலர்க்கை வாளி
மைந்தனைச் சிந்தை செய்வோம். —1

முடிவு

வெண்பா

கற்றறிந்த மூர்க்கராய்க் காமகலை யில்லார்போல்
மற்றொரு தெய்வத்தை வணங்காவே — பொற்றொடியார்
மாறடவு நெஞ்சில் வரும்புலவி நீக்குமவர்
காறடவு மெண்ணிரண்டு கை. —107

கொக்கோக சாத்திரம் முற்றும்
ஆகத்திரு விருத்தம். 344
அத்தியாயம் ஆறும் முற்றும்.

காலம்

இல்லை

குறிப்பு

இதில் நால்வகைச் சாதியின் குறியிலக்கணம், பதுமினி, சித்தினி, சங்கினி, அத்தினி, அமுர்தநிலை, குறியிலக்கணம், சாதியின் குறியிலக்கணம், மான் சாதி, வடவைசாதி, யானை சாதி அன்புடைத் தலைவியிலக்கணம், ஊடலிலக்கணம் முதலான பல தலைப்புகள் மூலம் மட்டும் உள்ளன.

வரிசை எண்: 2231 சுவடி எண்: 1557-c

# கொக்கோகம் எனும் மதனநூல் உரைபாடம்

ஏடுகள்: 3. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 8-10 வரிகள். பொருள்: காமநூல். அளவு: 39×3செ.மீ. கி. எண்ணிக்கை: 300. எழுத்து: தமிழ். ஆசிரியர்: சங்கராச்சாரியார். முற்றுமுளது.

தொடக்கம்

விநாயகர் காப்பு

கடல்கலர் மூல்கி னுள்ளே
 கசமின்ர் கமத்தைப் பண்டு
வடமொழி தன்னில் முன்னே
 வகுத்தனர் பெரியொ ரெல்லாம்
அடவுடன் தமிழி லோத
 ஐங்கர நால்வாய் மூன்று
கடமொழி யாத முக்கட்
 கணபதி காப்புத் தானே.

சங்கராச்சாரியார் துதி

முன்னூலாகிய வடமொழி மதனநூலை
யியற்றிய சங்காரச் சாரியாரை வணங்கியது.

முடிவு

மதனபீட வசனம்

விரும்பி அழைப்பாள். இந்தப்படி புணர்ச்சி செய்தால்
மருந்து, மந்திரம் தேவையில்லை.
இதுவே மருந்து மந்திரமுமாகும்.

பாயிர முற்றும்

காலம்

இல்லை

குறிப்பு

இதில் சிவபெருமான் பார்வதிக்குபதேசிக்கக் கேட்ட மதனநூலை நந்திதேவர் தெரிந்து, 'நந்திகேசுவரிய' மென்று தன் பெயராலே சனற்குமரார்களுக்குக் கூறினார். சனற்குமாரர் முதலான எழுவர்களும் தம்பெயரால் சொன்னதைச் சுவேத கேது வாத்ஸ்யாயனருக்குச் சொன்னார். வாத்ஸ்யாயனர் சப்த ரிஷிகட்குச் சொன்னார் அது 'வாத்ஸ்யாயனம்' பின்னர் பற்பலரும் பெருக்கினர். பின் அதனை வடசொல்லாலே கொக்கோக முனிவன் சொன்னதைத் தமிழினாலே, அதிவீரராம பாண்டியன் உணார்ப்பதற்கு முன்னம், பலவகை மதங்கட்கெல்லாம் ஆண்டகை சங்கராச்சாரியடிகளோர் வகைப்படுத்தி யீண்டிது மதன நூலென்றிசைத்தனன் என்பதனை செய்யுளும் உரையு மாகக் கூறப்பட்டுளது.

---

வரிசை எண்: 2235 சுவடி எண்: 1557-a

# கொக்கோக சூரும சூசகம்

ஏடுகள்: 78½. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 8-10 வரிகள். பொருள்: காமநூல். அளவு: 39×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 8000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அதிவீரராம பாண்டியன். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்

ஹரி:ஓம்

உலகத்து வியங்குகின்ற உயிர்களில்
மனிதர் அறிவுடைமையாற் சிறந்தவு ராயினர்
அவன் அடையத்தக்க அறம் பொருள்
இன்பம் வீடு என்னும் நான்கு
புருஷார்த்தங்களையும் பிரம்மச்சரியம்
இல்லறம், வானப்பிரத்தம், துறவற மென்றும்.

### முடிவு

வேதனல்கு சிலையா லுலகெலாம் புரக்கும்
கவின்மதிக் கவிகை நாயகனும் மன்னிய
ரதியும் முறை முறை யுணர்ந்து வாழி
காமாகமம் வாழி. பொன்னெடுந்
தந்தோன் ஆடவர் வாழி. புளகித
களபமுத்தார வன்னமென் முலையார் வாழி
என்னாளும் மலவுக் கணையைந்தும் வாழியவே

6-வது அத்தியாயம்

முற்றும்

### காலம்

இல்லை

### குறிப்பு

இது, சிறந்த நூலாகக் காணப்படுகிறது. இதில் பெண்களின் பருவம் அறியும் சக்கரம், நூல் வரலாறு, முதல் அத்தியாயம் சாதி லெட்சணம், அத்தினி, திதிகளின்படி செய்திகள், மூன்றாமத்தியாயம். குறி லட்சணம், சமரதம், ஆகர்ஷணம், வேகம் மூன்று, ஆண் பெண் மூவகைச் சாதி இலக்கணம், மான் சாதி, யானை சாதி, குதிரை சாதி, புணருங்காலம், கூடாவொழுக்க மகளிர், சுரதாரம்பம் ஆலிங்களம், ஊடல், பொருந்தாக் காமம் முதலான தலைப்புகள் உள்ளன. 12ஆம் ஏட்டில் மதனனாகிய கடவுள் துதி உளது. 14-ஆம் ஏட்டின் பின்புறம் நூல் வரலாறு இருக்கிறது.

---

வரிசை எண்: 2236 சுவடி எண்: 1557-b

## கொக்கோக நுட்பம்

ஏடுகள்: 13½(79-92). சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 8-10 வரிகள். பொருள்: காமநூல். அளவு: 39 × 3 செ.மீ. கி.எண்ணிக்கை: 1300. எழுத்து: தமிழ். ஆசிரியர்: கொக்கோகமுனிவர் முழுமை: முற்றுமுளது.

### தொடக்கம்

மதன் துணை

நூன்முகம்

மஞ்சுலாவிய மாவெள்ளி வெற்பினில்
விஞ்சை வேணியன் மேவுந் தவத்தினை
பஞ்ச பாணமும் பாய்ச்சி யடக்கினோன்
தஞ்சமென்று தனிக்கழல் மேவுவாம்

முடிவு

......நீலோற்பல மலர் உகாரம்
லம் ஹ்ரீம் ஹோம் இரீம்
அங்குச வேளேநமஹா என்று உரு 5000
செவிக்கவும்

சக்கரம் வுன்று இருக்கிறது

காலம்

இல்லை

குறிப்பு

இது, சிறந்த நூலாகக் காணப்படுகிறது: இதில் முதற்பாகம் நூல் வரலாறு, மற்ந 5-ஆம் பாகம் வரை நூல் பேசப்படுகிறது. பஞ்சபாணசக்கரம் மந்திரம் அட்சரம், செபம், உருவுகள் உள்ளன.

---

வரிசை எண்: 2237 சுவடி எண்: 1557-d

## மதன நூல்

ஏடுகள்: 39(96-134). சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 8–10 வரிகள். பொருள்: காமநூல். அளவு: 39 × 3 செ.மீ. கி, எண்ணிக்கை: 4000. எழுத்து: தமிழ். ஆசிரியர்; அதிவீரராமபாண்டியன். முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்

முதலாவது அத்தியாயம்
தத்துவ லட்சணம்

இயல்பினால்வரும் எண்வகை தத்துவப்
பயனையும் வருனாளின் திதியையும்—
வியனில் மெல்லியர் மிக்றபி யானவ்யும்
பயனுறு வரவுகள் பார்த்திடக் கூறுவாம்

முடிவு

செம்மிய கலத்தை எடுத்து சுத்தங்
கிருவரும் பாடமாய்ச் செய்து
தம்மிய யிருவவும் மறுபடி யணைந்து
தகைபெற விடுக ஒன்மதத்தே — 39
மதன நூலின் சூத்திரமும் கல்விப் பயிற்சியும்

முற்றிற்று
மதனவேள் ரதிசெல்வன் துணை

காலம்

இல்லை

## குறிப்பு

இதில், தெய்வதத்துவ லட்சணம் பூத தத்துவ லட்சணம் அமரதான சுரணம் பிசாசுதத்துவ லட்சணம், புண்ணியபுரி லட்சணம், ஏழுவகைப் பெண்கள் பருவ லட்சணம் கலவிப் பயிற்சி முதலான பல தலைப்புகள் உள்ளன. இது சிறந்த நூலாகக் காணப்படுகிறது.

---

வரிசை எண்: 2238 சுவடி எண்: 1545-m

# அகத்தியர்-12

ஏடுகள்: 2. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 10 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 40½ × 4 செ.மீ. கி.எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர் - 12 முழுமை:முற்றுமுளது.

## தொடக்கம்

தா..................பான் பாதம் போற்றி
சாஷ்த்திரமோ ராயிரத்தி யிருநூத் துக்குள்
தேயுரதக் கருவொன்று மில்லை யில்லை
சொல்லடக்க மாயுரைத்தேன் வழலை யொன்று

## முடிவு

நானென்ற ஆணவத்தை முடுக்க வேணும்
நலமான சிவயோக நாட்டம் வேணும்
தேனென்ற சற்குருவைச் சாற்க்க வேணும்
சித்தியே பன்றெண்டுஞ் சிறக்க முற்றே — 12

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், வழலை மதர்க்கஞ் சொல்லப்பட்டுள்ளது.

வரிசை எண்: 2239

சுவடி எண்: 1545-ஈ

# அகத்தியர்-16

ஏடுகள்: 2. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 10 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 40½ × 4 செ.மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஆதியென்ற மூலத்தி ............ பாதம்
ஆடினதோர் சூத்திரதி பதினாறப்பா
தேடியே அண்டபிண்டம் எல்லாம் சேர்த்து
சீராகப் பாடியதோர் எண்ணூலப்பா.

**முடிவு**

தோணவே கருகுருவும் விழிதுரையு மாகும்
வேதை வளியோடேறும்
பேணவே பதினாறும் யிதுவே யாகும்
பிலமாகும் அகத்தீசர் வாக்கிய முற்றே —16
குருபாதமே துணையாக வேண்டியது

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், மருத்துவம் பேசப்படுகிறது.

வரிசை எண்: 2240

சுவடி எண்: 1584

# அகத்தியர் காவியம்-1000

ஏடுகள்: 85. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 7 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 35 × 2½ செ.மீ. கி.எண்ணிக்கை: 4000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

இல்லை

கர வருஷம் தனுர் (மார்கழி) மாதம் 28-ஆம் தேதி

**குறிப்பு**

இது எமது வைத்தியச் சுவடி எண். D 721/361 அகத்தியர் பூரண காவியம் 1000 போன்றது.

வரிசை எண்: 2241 சுவடி எண்: 1575-b

# அகத்தியர் குழம்பு

ஏடுகள்: 11(6-16). சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 5-6 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 17 × 2½ செ.மீ. கி.எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

இல்லை

**முடிவு**

இல்லை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, எமது மருத்துவச் சுவடி எண். D 1212/594போன்றது.

---

வரிசை எண்: 2242 சுவடி எண்: 1545-w

# அகத்தியர் மதிவெண்பா

ஏடுகள்: 10. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 8-9 வரிகள். பொருள்: மாந்திரீகம், மருத்துவம். அளவு: 40½ × 4 செ.மீ. கி.எண்ணிக்கை: 800. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

ஆதிசிவன் பாதமதை அன்புடனே நெஞ்சில் வைத்து
சோதிமதி வெண்பாவைச் சொல்லவே—நீதியுடன்
வாலை யிருபதத்தை வாக்கிலே வைத்தருளும்
காளையின்மே லேறுசிவன் காப்பு —1

**முடிவு**

தானென்ற வேர்வாங்கிச் சாத்தினாளும் பூறுவத்திற்
தேறென்ற-ஆதினால் சேர்மூலம்—வானென்ற
மேஷமுமே கூடிமேவினால் வேர்வாங்கி
மோசம் வருஞ்சொல் மொழிந்து — 68

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது எமது வைத்தியச் சுவடி எண். D 526/296-ஐ, D 968/445-அ இதன் பின்னர் மாந்திரீக ஏடொன்றுளது.

---

வரிசை எண்: 2243 சுவடி எண்: 1578-அ

## அகத்தியர் வைத்தியம்

ஏடுகள்: 3. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 6 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 17 × 2½ செ.மீ. கி.எண்ணிக்கை: 50. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

பூரணமா மூண்மூலம்
பொரியிற் சூடாய்
புகையெழும்பி மேகந்தாய்
சிரசிற் சூடாம்.

**முடிவு**

காணப்பா சாத்தியமாம் ரோகந் தீரும்
நாட்டினேன் முன்னூற்றில் அசாத்தியம் தீர்
வேளப்பா மின்னூலை வைத்துக் கொண்டு
வேண்டிய வைத்தியத்தை விரும்பிச் செய்யே.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் ஐந்து பாடல்களே உள்ளன.

---

வரிசை எண்: 2244 சுவடி எண்: 1545-p

# இராமதேவர் பட்சணி

ஏடுகள்: 7. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 10-11 வரிகள். பொருள்: மருத்துவம் அளவு: 40½ × 4 செ.மீ. கி. எண்ணிக்கை: 700. எழுத்து. தமிழ். ஆசிரியர்: இராமதேவர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஆதியந்தம் நடுவிருந்த சோதி பாதம்
அகண்டபரி பூரணமே அரியே காப்பு
நீதிகலை வாணிகுகள் கந்தன் காப்பு
நிரஞ்சனமாய் நிற்குணமா வதீதங் காப்பு

**முடிவு**

கல்லடா காயசித்தி யோக மார்க்கம்
கருவென்ன சவுக்கராம் ஆதி ஆதி
வல்லடா பசுங்களுக்கு இன்னூலை யீய்ந்தால்
அந்திரமா யிடிவிழுந்து தலைவெடிக்கும் பாரு
வெல்லடா நவகோடி சித்து மாடும்
வேதாந்த பட்சணியா னதீத முற்றே. —75

**காலம்**

ராமதேவர் பட்சணி யேழு யேட்டுக்குள்ளே அடக்கம்.

**குறிப்பு**

இதில், மருத்துவம், மாந்திரீகம், யோகமார்க்கம், ஞானமார்க்கம் முதலானவை கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 2245 சுவடி எண்: 1545-b

# கெந்தக சுத்தி

ஏடுகள்: 4. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 12 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 40½ × 4 செ.மீ. கி. எண்ணிக்கை: 400 எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஆலக்கரண்டியிலே பசுநெய் விட்டு
கெந்தகம் போட்டு அடுப்பிலேத்திப் பிடிக்க
கெந்தகம் உருகும். அப்போது பசுவின்
பாலிலே பத்துதிரம் சாய்த்து

**முடிவு**

கலந்து சனங்களுக்குக் கொடுக்க
ஊசின பேர்கள் எல்லாம் ஒட்டம் பிடிப்பார்க
இதுக்கு மாத்து எண்ணெயில் விழுந்து
தேச்சா போகும். இதை சொல்ல வேண்டாம்.
இன்னம் செந்தட்டிக் காயை காயப்போட்டு
நுணுக்கி சாம்பலுடன் கலந்து போட
பிம்பு காணும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் மருத்துவத்தோடு சில வித்தைகளும் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 2246 சுவடி எண்: 1575

# சவுரியார் குழம்பு

ஏடுகள்: 13(17-29) சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 17× 2½ செ.மீ. கி. எண்ணிக்கை: 400. எழுத்து: தமிழ். ஆசிரியர்: சவுரியார். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

கறுபித்து கடுகுக்காய்
கடுகு யிந்துப்பு நற்பெருங்காயம்
நல்ல மனோசிலை மெயிப்புள்ள
சூதகம் மேவு வெண்காரம் திப்பிலி

**முடிவு**

சிறுகுருஞ்சா (சா) ருப்படி—நீ—சாரு
தீறுகுன்றி நோய்த்துடுவாரம் மொன்பதும்
கையாதீர கோரயைனா தண்ணீரில்
கொளஞ்சிக் கிஷாயம் மத்தில் நீதியக்
குவம்பு திரை குனீரி தேறு.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

சில்லரை தோஷம், மாந்தம், விஷத்துக்கு மருந்து அண்டவாதம், குடல்வாதம் தீர மருந்து முதலியன உள்ளன.

---

வரிசை எண்: 2247 சுவடி எண்: 1545-k

## சிவகாமியம்மன்-10

ஏடுகள்: 6. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 9-10 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 40½ × 4 செ.மீ. கி. எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: பொன்னம்பலம். முழுமை: முற்றுமுளது.

### தொடக்கம்

சமையமிரு மூவரை யிறந்தோர்க்கு
சிந்தை யுமையும் நெரியோர் தமக்கும்
முமையவள்தன் பூ மானை

### முடிவு

ரசத்தை மெய்க்கக் குளிகையாம்
கெந்தக மேய்க்கத் தயிலமாம்
இரும்பு முதல் கல்லும் தங்கமாம்
அரிகினாம ஆண்டவர் துணை

### காலம்

இல்லை

### குறிப்பு

இதில், இரசவாதம் பேசப்படுகிறது. பின் ஒரு ஏட்டில் மாந்திரீக சக்கரங்கள் விளக்கங்களுடன் உள்ளன.

---

வரிசை எண்: 2248 சுவடி எண்: 1545-b

## சுப்பிரமணியர் பூசாவிதி

ஏடுகள்: 2. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 9-10 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 40½ × 4 செ.மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: தெட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றுமுளது.

### தொடக்கம்

வாளப்பா சுப்பிர மணியனார்
சொல்லக்கேளு
வளமான யெந்தனுட குருவின் மூலம்
கேளப்பா அறுகோண மூன்று கோணம்
திருவையாய் விந்துட்டு கண்டு..........

முடிவு

ரெண்டெருவில் புடம் போடவும்
சல்லிகட்கு வெள்ளி ஒண்ணுருக்கி
க...கம் ஒன்னு குடுக்கவும்
அன்ன அன்ன நாட் செய்யவும்
அதியம் சாலம்

காலம்

இல்லை

குறிப்பு

இதில், மந்திரங்களும், மருத்துவமும் உள்ளன.

---

வரிசை எண்: 2249 சுவடி எண்: 157

## தெட்சிணாமூர்த்தி சௌமிய சாகரம்-

ஏடுகள்: 250. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 36½ × 3½ செ.மீ. கி.எண்ணிக்கை: 15000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: தெட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றுமுளது.

தொடக்கம்

சோதியெனும் மனோன்மணியைத் தியானம் செய்து
சுகமான சவுமியசா கரத்தைப் பாட
ஆதியெனுங் கணபதியும் வல்லபையுங் காப்பு
அயனான பிரமனொடு சரஸ்பதியுங் காப்பு
நீதியெனும் மாலுடனே லெட்சுமியுங் காப்பு
நின்நிலங்கும் ருத்திரனும் ருத்திரியுங் காப்பு
ஒதியதோர் மகேஸ்பரனும் மகேஸ்பரியுங் காப்பு
யுருதியுள்ள சதாசிவனும் மனோன் மணியுங் காப்பே! — 1

முடிவு

உண்ணைத்தான் மனத்துண்ணி யண்டத் தேறி
ஓம்சிவா வென்றுகுரு பாதம் போற்றிக்
கண்ணைத்தான் அறிந்துவெளி யொளிகண் ணோடே
கலந்துகொண்ட சவுமியசா கரந்தான் முற்றே! — 1201
முத்தான சவுமியசா கரந்தான் மைந்தா
முழுதுமதை யாதியந்தம் நன்றாய்ப் பார்த்து
சித்தான சித்துவிளை யாடுதற்கு
சிவசிவா குருநூலாய் தேர்ந்து கொண்டு
சுத்தான சுத்தற்கு சோதியாகி
சோதிமய மானசூட்சந் தன்னைப்
பத்தான திசதீட்சை முத்தி பெற்று
பரமபதத் தேவகைமி லோதிவாய் முத்தே!
குருபாதமே கெதி துணையாக வேணும்

**காலம்**

சாலிவாகன சகாப்தம் 1849 வருஷம். இதுக்குச் சரியான சவுமியா வருஷம் ஆடி மாதம் 17-ஆம் தேதி திங்கட்கிழமை 9 நாழிகைக்கு எழுதி முடிந்தது. முற்றும்.

வீரபத்திரபிள்ளை அவதார குமாரன் வயித்திலிங்கம் பிள்ளையுடைய செவடி.

இந்த செவ்டியை ஒருவரிடத்திலுங் குடுக்கக் கூடாது. 'விக்கவுங் கூடாது'

சவுமிய சாகரம் மகா பெரிதான வாக்கியம்.

இதை வைத்து வெள்ளிக்கிழமை செவ்வாய்க்கிழமை

தீபதூபம் குடுத்து வரவேணும். வேணும்
சரஸ்பதி முன்னிற்கவும்
இப்படிக்கி வயித்திய லிங்கம் பிள்ளை
செங்களனாட்சி யம்மன் துணையாக வேணும்
சரஸ்பதி முன்னிற்க வேணும்.

**குறிப்பு**

இது முழுமையான நல்ல சுவடி: இதில், தத்துவம், ஞான இந்திரியமஞ்சு ஐம்புலன், காசக்கூறு, வாசகாதியைழுந்து, மதி தெரிசனம், முச்சுடர் தியானம், சண்முக தியரனம், யெக்கியமாமுனி கேள்வி, பராபரத்தின் உற்பத்தி, எழுவர் படைப்பு, யுகம் பதினெட்டு, சமாது தம்பனம், உச்சாடினம், பிரம்ம தியானம், விஷ்ணு தியானம், ருத்திரத்தியானம் முதலான பல தலைப்புகள் உள்ளன.

---

வரிசை எண்: 2250 சுவடி எண்: 1545-b

# புலிப்பாணி பாடல்

ஏடுகள்: 8. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 9-11 வரிகள் பொருள்: மருத்துவம். அளவு: 40½×4 செ.மீ. கி. எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: புலிப்பாணி. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

பாறடா குதிரைக்கிச் சுழிதான் வேதம்
ப.................................சொல்லக் கேளும்
ஆரடா லிங்காதி வருத்த மப்பா
அவின்சரவா ன்ல்லாட்டகல் குதிரை மாளும்

**முடிவு**

அரிதாரம் கடகை வீரம் கஞ்சா
சிறுசின்னி கோரைக் கிழங்கு

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், குதிரைகளின் லட்சணங்கள், அதன் பலன்கள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 2251 சுவடி எண்: 1545-q

# பொதிகை முனி இந்திரஜாலம்-6 காண்டங்கள்

ஏடுகள்: 107(22+15+18+13+18+21) சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 10-11 வரிகள். பொருள்: வைத்தியம். அளவு: 40½ × 4 செ.மீ. கி.எண்ணிக்கை: 10000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

இல்லை

**முடிவு**

இல்லை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது எமது வைத்தியச் சுவடி எண். D 1498/1499/1500/75/-a, 751-b, 751-c போன்றது. அதில் 3 காண்டங்களே உள்ளன இதில், 6 காண்டங்கள் முழுமையாக உள்ளன.

---

வரிசை எண்: 2252 சுவடி எண்: 1576-d

# வீரமெழுகு

ஏடுகள்: 4. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 5-6 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 17 × 2½ செ.மீ. கி. எண்ணிக்கை: 50. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

வீரம் வராகனெடை ½
ரசம் வராகனெடை
ரசகற்பூரம் வராகனெடை —2
சாதிலிங்கம் வராகனெடை—2

முடிவு

சாம்பிராணி சூடம் ரெண்டு
தயிலரசம் அரைத்து வழித்து
சிமிழில் வை
புளி புகையிலை தள்ளவும்.

குறிப்பு

கிரந்தி, சூலை, கட்டுக்கிரந்தி, புண்புரைகள், அண்டவாதம் முடக்குசூலை, நெஞ்சடைப்பு, காலவலி தீரும் மருந்து, இது.

---

வரிசை எண்: 2253 சுவடி எண்: 1560-b

# வைத்தியத்திரட்டு

ஏடுகள்: 9. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 5-6 வரிகள். பொருள். மருத்துவம். அளவு: 24 × 2 ½ செ.மீ. கி. எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

தொடக்கம்

யிடி வல்லாதிலேகியம்

ரசம் ரசகற்பூரம் கெந்தகம் அரிதாரம்
ஊசிக்காந்தம் துருசு துத்தம் சாதிலிங்கம்
மனோசிலை சுக்கு திப்பிலி தேசாபுரம்

முடிவு

கோலிக்கல் 2 விரலு எடுத்தது பிளந்து
கலல.......நல்ல கழுவிப் போட்டு
அதை அரைச்சு பசுவெண்ணை
குழைத்துச் சாப்பிடவும்.

காலம்

இல்லை

### குறிப்பு

இதில், இருமலுக்கு மருந்து, பிறளி மாந்தத் திர்கு, மந்தத்துக்கு ஊளிகை பிள்ளைக்கு சொருவல் மந்தம், குழந்தைகளுக்கு இருமலுக்கு எண்ணெய், சன்னிக்கு முழுக்குத் தயிலம் மூலக்கடுப்பு, மூலக்கிராணி, ரெத்த கன்டல், மலசல மடைப்புக்கு மருந்து முதலியன உள்ளன.

---

வரிசை எண்: 2254 சுவடி எண்: 1571

## வைத்தியத்திரட்டு

ஏடுகள்: 15. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 4-5 வரிகள். பொருள்: மருத்துவம் அளவு: 28×2 செ.மீ. கி. எண்ணிக்கை: 150. எழுத்து: தமிழ். ஆசிரியர் அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

### தொடக்கம்

தாது விருத்தி லேகியம்
நெருஞ்சிமுன்
நீர்முள்ளி விரை
பூனைக்காலி விரை
தண்ணீர் முட்டான் கிழங்கு
..............................

### முடிவு

மற்ற தினுசுகளை இடித்துப் போட்டு
இரண்டு படி ஜலம் வார்த்து
எட்டுக் கொன்றாய்க் காய்ச்சி
3 வேளை கொடுக்கவும்

### காலம்

இல்லை

### குறிப்பு

இதில், இஞ்சி சூரணம், குன்மம், வாந்தி, ஏப்பம் வாய் ஊரப்புக்கு கியாழம், கிருமிகள், விரோசனம், கபாடலேகியம், சுகவிரோசன லேகியம், பெருன்னாங்காணிநெய், மாலைக்கண்ணுக்கு, சகல குன்மவாயுவுக்கும், சகல ஜன்னிக்கும் கியாழம் முதலியன உள்ளன.

---

வரிசை எண்: 2255 சுவடி எண்: 1575-a

# வைத்தியத்திரட்டு

ஏடுகள்: 5. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 5 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 17 × 2½ செ.மீ. கி. எண்ணிக்கை: 50. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

சத்திக்குன்மம்

சோதிலிங்க மத்தோளி போக்கிகை
சுவாமி அடி-தாய் பணிந்து
சாதிலிங்க மகத்தின்
குளப்பே சாத்தக்கேள்

**முடிவு**

சித்தாமணக்குக் கொட்டை பருப்பு
வராகனெடை-4 இதுவெல்லாம்
அரைத்து சிமிளில் வைத்துக்கொள்ளவும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், வயிற்று வலிக்கு மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 2256 சுவடி எண்: 1545

# அகத்தியர் சல்லிய நிகண்டுக்கு திறவுகோல்-203

ஏடுகள்: 11. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 10-11 வரிகள். பொருள்: மாந்திரீகம். அளவு: 40½ × 4 செ.மீ. கி.எண்ணிக்கை: 1000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

உன்னிய பொதிகை வாழும்
மொருமுனி யருளை யோதி
யின்னிய நிகண்டு பாட
இந்திர சால நூலைப்
பண்ணிய பாசை தோன்ற
பண்டித வேத னாவு
கன்னியு முமையு மீசன்
கந்தனுங் காப்புத் தானே!

**முடிவு**

கூட்டிய கருணர்பி கூடவே கூட்டி
ஆட்டு வாய்நீறு மெல்பளிளுப் பூச்சார் விட்டு
மூட்டுவாய் செவிநஞ்சு
முப்பாலாய் நஞ்சும்
தீட்டுவாய் தெளிளுந் தனையுஞ்
சேந்தொட்டியே — 204
முற்றும்
குருகிடாட் சமுண்டாக வேண்டியது
சாப்புமிய்யான் எழுதி முடிந்தது.
இது பதினொரண்ணாம் ஏட்டுவரை அடக்கம்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, மாந்திரீகமாக மை, அஞ்சனம், திலதம், தம்பனம் முதலானவைகளைக் கொண்டுள்ளது.

இதன் பின்னர், மருத்துவம் எழுதியுள்ளது.

---

வரிசை எண்: 2257 சுவடி எண்: 1545-g

# அகத்தியர் 6-க்கு சல்லியம்-32

ஏடுகள்: 3. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 10-11 வரிகள். பொருள்: மாந்திரீகம். அளவு: 40½ × 4 செ.மீ. கி.எண்ணிக்கை: 300. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஓதிய குருவாய் நந்தி
ஒளிமலர்ச் சுழியில் நின்று
போதிய பொதிகை நாதன்
புரிந்தோர் நறுக்கு சல்லியம் நூலை
நீதிசொல் தமிழி னாலே
நின்னய மாகச் சொல்வேன்
நாதனுக் குபதே சித்த
விநாயகன் காப்புத் தானே

**முடிவு**

மேனிச்சார் வேளைச் சாறும்
விரும்பிய பசளைச் சாறும்
வானியிலிடு மெண்டு வந்திடும்
வீடுவிட்டு காணாமல் மயக்க
மாகிகன்னியும் கருது வாளே
தானுமே யுரைத்த கற்மம்
தவபாருந்துகுரு முற்றே —32

இந்த ஏடு 2½ யேட்டுக்குள்ளே அடக்கம்
சாப்பு மியா எழுதினது.

இதை அறிந்து பார்த்து ஆடவும் இதுக்கு ஆசளச் சக்கதேவியை வசப்படுத்திச் செய்யவும். இல்லாவிட்டால் இதில் ஒரு தொழிலும் சித்திக்காது. இதை அறியவும்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், மாந்திரீகம் பேசப்பட்டுள்ளது.

---

வரிசை எண்: 2258 சுவடி எண்: 1545-x

# அகத்தியர் அஷ்டகர்ம வித்தை

ஏடுகள்: 2. சுவடியின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 8-9 வரிகள்: பொருள்: மாந்திரீகம். அளவு: 40½×4 செ.மீ. கி. எண்ணிக்கை: 150. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

காணப்பா நகாரமுத லஞ்செ ழுத்து
மாரில்க்கை கண்ட தம்பளம் மாடி காணும் காணும்
பூணப்பா மகாரமுத லஞ்செழுத்து மாறி
பூலோகத்தில் தேரணமாம் பூச்சா கத்தில........

**முடிவு**

சாரப்பா சிவதீட்சை பெற்றா னாகில்
சாதகமாய்...... ந்துட்டுணே யெட்டு மாடும்
நமசிவய மசிவயந.
சிவயநம வயநமசி
யநமசிவ

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், தெய்வங்களை அழைப்பதற்கு மந்திரம், ஸ்படிகமாலை சிவனுக்கு ருத்ராட்சமாலை, சிவதீட்சையின் முக்கியம் முதலானவை கூறப்பட்டுள்ளது.

---

வரிசை எண்: 2259 சுவடி எண்: 1545-h

# அஷ்டகருமம்-8

ஏடுகள்: ½. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 9 வரிகள். பொருள்: மாந்திரீகம். அளவு: 40½×4 செ.மீ. கி.எண்ணிக்கை: 25. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

வசீகரத்துக்கு — வடதிசை
மோகனத்துக்கு — கீழ்த்திசை
தம்பனத்துக்கு — மேல்திசை
உச்சாடனத்துக்கு — தென்திசை

**முடிவு**

இதுக்கு மந்திரம் ஓம் றீங் நசி உருவு 1008
இதுக்கு மந்திரம் ஓம் றீங் ஆம் உருவு 1008
ஒருகாரியம் செய்யவும்
சித்தியாகும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் வசீகரம் முதலானதற்கு, திசை வஸ்திரம், மணி மந்திரம், செய்ய வேண்டிய உரு முதலியன சொல்லப்பட்டுள்ளன.

வரிசை எண்: 2260 சுவடி எண்: 1545-o

# இராமதேவர் சித்தர்பூசை

ஏடுகள்: 5. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 10 வரிகள். பொருள்: மாந்திரீகம்: அளவு: 40½×4 செ.மீ. கி. எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: இராமதேவர். முழுமை: முற்றற்றது.

## தொடக்கம்

அட்சரப்போக்கு—81

பரமான பராபரத்தி னருளைப் போற்றி
பரமகுரு புலத்தியர்தன் பதமேல்க் கொண்டு
சிரமான வமுர்தநிலை பெற்று நானுஞ்
சிவசத்தி சிவபூசை செய்து

## முடிவு

மூடுவது அச்சிலைதான் மாயா ரூபம்
முன்னேரிப் பாயிரது ருக்கு மெத்த
கூடுவது யிச்சிலைகிப் பேரைக் கேளு
குட்டியென்ற சாதிகுட்டி சர்த்தியாச்சே —51

ஆச்சப்பா சர்தியென்ற குட்டிதன்னை

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், 51 பாடல்கள் முழுமையாக உள்ளன. ரேசக பூரக கும்பகம் முதலானவைகளும் தேவதா பூசையும் சிவபூசை முதலானதுகளும் சொல்லப்பட்டுள்ளன.

வரிசை எண்: 2261

சுவடி எண்: 1561-c

# ஒட்டியம்

ஏடுகள்: 9. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு 6-7 வரிகள். பொருள்: மாந்திரீகம். அளவு: 19 × 3½ செ.மீ. கி.எண்ணிக்கை: 150. எழுத்து: தமிழ். ஆசிரியர்: ஒட்டியமுனிவர். முழுமை: முற்றுமுளது.

## தொடக்கம்

இல்லை

## முடிவு

இல்லை

## காலம்

இல்லை

## குறிப்பு

இது எமது சுவடி எண் D 1476/721-b போன்றது.

---

வரிசை எண்: 2262

சுவடி எண்: 1586-e

# கெருடபஞ்சாட்சரம்

ஏடுகள்: 8. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 5-7 வரிகள் பொருள்: மாந்திரீகம். அளவு: 29 × 3 செ.மீ. கி.எண்ணிக்கை: 150. எழுத்து: தமிழ் ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

## தொடக்கம்

ஓதிய பிடாரர்க் கெல்லாம்
யுத்தகோ டாலி யாகும்
வாதினை வுரைத்தோர் நாவை
வலித்தறு கத்தியாகும்.

## முடிவு

புவனத் தியானம் விடாது பத்தி
உம்மென ஓங்கி சிரத்தில் கைவைக்க
விட்டோடுமே! —34

## காலம்

இல்லை

### குறிப்பு

இது, எமது சுவடி எண் வைத்தியம் D 1476/745-k போன்றது இதன்பின்னர் வைத்திய ஏடுகளும், மாந்திரீக ஏடுகளும், கெருடமந்திர ஏடுகளுமாக 20 ஏடுகள் உள்ளன.

---

வரிசை எண்: 2263 சுவடி எண்: 1531

# கெருடபஞ்சாட்சரவிர்த்தி

ஏடுகள்: 30+11. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 8-9 வரிகள். பொருள்: மாந்திரீகம். அளவு: 17 × 3½ செ.மீ. கி.எண்ணிக்கை: 600. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

### தொடக்கம்

ஹரி: ஓம் நன்றாக
அண்ணலங் கதிர்கள் கோடி
... ... ... ... ... ... ...
நண்ணுமே யெங்குந் தாங்கி
நந்... ... ... ... ... ...ன்னை
திண்ணியே கிண்டிற் நெற்றி
... ... ... ... ... ...யேற்றக்
கண்ணனைப் புயற்றிற் றாங்கு
... ... ... போற்றல் செய்வாம் —1

### முடிவு

நண்ணாலி வேர்தனைக் கொண்டுவந்து
நலமாக நீர்விட்டுத் திரமா யாரைத்துப்
பொண்ணரிய மருந்தை யன்னீரில் கலக்கிப்
பொருந்தக் குடிக்க நல்லபாம்பு முதலாய
சொன்னதோர் பனசை கொம்பேரி மூக்கன்
வளையான் கண்டங்கரு வழலை விரியன்
அண்ணாக வீடங்களுட னில்லாம லோடுமாங்
கைகண்ட மருந்தென்று ரைத்தார்க ளிதுவே —96

முற்றும்

### காலம்

இல்லை

## குறிப்பு

இதன் பின்னர் மருந்துகளும், சக்கரங்களும் மந்திரங்களும் எழுதிய ஏடுகள் 11 உள்ளன. இது பாம்பு கடி மருத்துவம் கூறுவது.

—※—

வரிசை எண்: 2264 சுவடி எண்: 1586-b

# கெருடமந்திரம்

ஏடுகள்: 3. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 6 வரிகள். பொருள்: மந்திரம். அளவு: 29 × 3 செ.மீ. கி.எண்ணிக்கை: 70. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

## தொடக்கம்

ஓம் ஹறி ஹறி கெருட ஆனந்த கெருடா
சிவசிவ கெருடா சிவசூரிய கெருடா
அனுமக்கெருடா ஆங்காரக் கெருடா
ஹறியுங் கிறியும் சிறியும் ஆங் அங்.

## முடிவு

நான்வந்து நிக்கிறேன கட்டினர்னே
கட்டுவிட்டு கடித்தாரைக் கடிவிட்டு
கையது பாசமது விஷமினிலையது
விஷம்நிலை கொலைந்து விஷம் நாசமத்து
போதே நேமைத்து கிரி ஒரு கால் விக்க
ஒருகால் மூக்கு கொத்தி கொத்தி கொத்தி
கொத்தி தின்ன தின்ன நீந்துது விஷமே —2

## காலம்

இல்லை

## குறிப்பு

பாம்பு கடிக்கு மந்திரிக்கும் மந்திரம், இது தலைப்பு அரித்துளது. இதன் பின்னர் விஷமாந்திரீக ஏடுகள் இரண்டு உள்ளன.

—※—

வரிசை எண்: 2265 சுவடி எண்: 1545-ப

# கொங்கணர் சல்லியம்

ஏடுகள்: 9. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 7-9 வரிகள். பொருள்: மாந்திரீகம். அளவு: 40½×4 செ.மீ. கி.எண்ணிக்கை 350. எழுத்து: தமிழ். ஆசிரியர்: கொங்கணர். முழுமை: முற்றுமுளது.

## தொடக்கம்

ஆதியாம் யெங்கள் வாசல்
அந்தணர் முனிவர் தன்னில்
மாதியா மாந்தி ரீகம்
அய்வரும் மூவரெண்றாய்

## முடிவு

வந்தவள் முன்னே நின்று
துருவாளே சம்பத்து யெல்லாம்
நல்குரோம் தொட்டிய வீரநணன்
பண்டு களய்யா ளறள
வருக வருக தொட்டியன் ஒட்டியன்
முனிவன்னான் சொலே. —100
தேவி துணையாகவும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில் பேய்களைக் கட்டுதல் முதலான மாந்திரீகம் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 2266 சுவடி எண்: 1545-d

# கோச பீஜாட்சரங்கள் அறிய விபரம்

ஏடுகள்: 1. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 12 வரிகள். பொருள்: மந்திரம். அளவு: $40\frac{1}{2} \times 4$ செ.மீ. கி. எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூட வில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

**அட்சரங்களுக்குப் போடுகிற உயிர்நிலை இது**

பிரிதிவியின் பீஜம் ஐம்பது லம்
அப்புவின் பீஜம் ஐம்பது வம்
தேயுவின் பீஜம் ஐம்பது ரம்
வாயுவின் பீஜம் ஐம்பது யம்
ஆகாச பீஜம் ஐம்பது அம் ஹசி.

**முடிவு**

இது கண்டு செய்யவும் தற்ம மயேசுரி நடக்கவும். பாவம் ஆகாது

**காலம்**

இல்லை

**குறிப்பு**

தகடுகளில் பீஜாட்சரம் எழுதும் முறை கூறப்பட்டுள்ளது.

---

வரிசை எண்! 2267 சுவடி எண்: 1509

# சக்கர வகைகள்

ஏடுகள்: 5 (100-104) சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 8-12 வரிகள். பொருள்: மாந்திரீகம். அளவு: $27\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 400. எழுத்து: தமிழ், ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

ஹரி! ஓம் நன்றாக

**வாலை பரமேஸ்வரி**

நறிமசி வால பரமேசுவரி என்
சத்துருவையும் சகல துன்பத்தையும்
சகல பூதப் பிரதேச பிசாசையும்
நசி நசி மசி மசி.
(முக்கோண சக்கரம் இருக்கிறது.)

### முடிவு

ஓம் சித்திவர ஆவேசமாய்க் காத்தான்
நிசி அடி அய்யும் கிலியும் சவ்வும்நம.
கருப்பன் மந்திரம்
(சக்கரம் உள்ளது)

### காலம்

இல்லை

### குறிப்பு

இதில், திசைக்கட்டு, பெண்வசீசரம், வசீகர கணபதி தியானம், மோகனத்துக்கு மகா மந்திரம் கணபதி, தம்பனத்துக்கு நடன கணபதி, வித்துவேஷண கணபதி, மாரணத்துக்கு உக்கிர கணபதி, பேதனத்துக்கு மூலகணபதி தியானம் முதலான பல மந்திரங்கள் சக்கரங்களுடன் உள்ளன.

---

வரிசை எண்: 2268 சுவடி எண்: 1521-b

## சக்தி நாற்பத்து முக்கோண சக்கர விதி

ஏடுகள்: 3½ சுவடியின் நிலைமை: மிகப்மிகப்பழுது. பக்கத்திற்கு: 7-9வரிகள். பொருள்: மந்திரசாத்திரம். அளவு: 31 × 3½ செ.மீ. கி.எண்ணிக்கை: 250 எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

### தொடக்கம்

முதல் ரேகை வரை 0-9 2-வது -5
3-வது 3. 4-வது 3 5-வது -4
6-வது 3. 7-வது 6 8-வது - 6
9-வது ரேகை வட்டமுனை - 6.

### முடிவு

பேதனம்

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | 2 | 4 | 5 | 6 |
| 1 | 6 | 7 | 8 | 3 |
| 6 | 8 | | 4 | 7 |
| 3 | 4 | 6 | 7 | 5 |
| 7 | 5 | 8 | 1 | 4 |

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், சக்தியைப் பூசிக்கும் முறைகளும், மந்திரங்களும் சக்கரங்களும் உள்ளன.

---

வரிசை எண்: 2269 சுவடி எண்: 1521-a

# சண்முகத்தின் பூசை விதி

ஏடுகள்: 1½. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 8-9 வரிகள் பொருள்: மந்திர சாத்திரம். அளவு: 31 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 100 எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஹரி: ஓம் நன்றாக
குருவாழ்க குருவே துணை
அறுகோண மிட்டு
சம் ஆம் உம் மம் சிம் வம் மிட்டு
ஓங்காரங் கட்டவும்
விருத்த மூணு யிடவும்

**முடிவு**

பசு நெய்விட்டு ஓமம் உரு லெட்சம், தற்பணம் பத்தாயிரம்
னாமம் ஆயிரம், பிராமண போசனம் நூறு பேருக்கும்
சத்தி பூசை விபூதி திரிசூரணம் சந்தணம் சவாது புனுகு
சக்கரத்தில் சாத்தவும். வீரடை தூவவும். புஷ்பம் சாத்தவும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், முருகக் கடவுளைப் பூசிக்கும் முறை கூறப்பட்டுள்ளது.

---o---

வரிசை எண்: 2270 சுவடி எண்: 1545-r

# சல்லியநூல்-உரையுடன்

ஏடுகள்: 19. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 10 வரிகள். பொருள்: மாந்திரீகம். அளவு: 40½×4 செ.மீ. கி. எண்ணிக்கை: 1000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

இல்லை

**முடிவு**

இல்லை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, எமது சுவடி எண் D 1977/1253 போன்றது. இதில் யந்திரங்களும், சித்திரங்களும் உள்ளன.

வரிசை எண்: 2271 சுவடி எண்: 1561-b

# சல்லியம்

ஏடுகள்: 23. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 7-9 வரிகள். பொருள்: மாந்திரீகம். அளவு: 19×3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 400. எழுத்து: தமிழ். ஆசிரியர்: சல்லியமுனிவர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

இல்லை

**முடிவு**

இல்லை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, எமது சுவடி எண் D 1977/1253, 1545-r போன்றது.

வரிசை எண்: 2272 சுவடி எண்: 1545-C

# சுந்தரானந்தர் கேசரி வித்தை

ஏடுகள்: 7. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 7-9 வரிகள். பொருள் மாந்திரீகம். அளவு: 40½×4 செ.மீ. கி.எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: சுந்தரானந்தர். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஆதிபரா பனாயான மூல நாதன்
அறுமுகவன் பதத்தைநிதம் அன்பால் போற்றி
வீதிதனில் வீடதிலே நின்ற சோதி
விளங்கிநின்ற சரசுபதியாள் பாதம் போற்றி

**முடிவு**

மாசிணெண்ட யிதறுங்கள் வாரா மக்களே
மாங்கிஷங்கள் மச்சமாகார்
பேசினேன் செம்பிலியும் வராயுமகா
யிலைத எளிபத்தியமாய்க் கொண்டி டாயே.
சுந்தரானந்த கேசரி முற்றும்
இந்த 55 பாட்டும் 7 ஏட்டுக்குள்ளே அடக்கம்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதன் கடைசிப்பக்கத்தில் நரைமயிர் கறுக்க மருந்து எழுதப்பட்டுளது.

வரிசை எண்: 2273 சுவடி எண்: 1545-j

# தெட்சிணாமூர்த்தி பாட்டு-125

ஏடுகள்: 10 + 1. சுவடியின் நிலைமை: மிகப்மிகப்பழுது. பக்கத்திற்கு: 10-11 வரிகள். பொருள்: மாந்திரீகம். அளவு: 40½ × 4 செ. மீ. கி. எண்ணிக்கை: 1000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: தெட்சிணாமூர்த்தி. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

**ஹரிஓம் நன்றாக தெட்சிணாமூர்த்தி அருளிச்செய்த கட்சி படர் மூலம் 125 பாட்டு சக்கரம் உயிரெழுத்து மாறல்.**

திருமகள் கயிலை மேவு
செகனாத தேவிக் கந்த
கருவளர் மாந்தி ரீகம்
கச்சியன் படரவன் பாட
மருமக ளான சோதி
மலர்த்திரு பாதம் போற்றி
உருவில்லா னருவு மில்லான்
உமைமகன் காப்புத் தானே! — 1

**முடிவு**

தோசமடா கொண்டுவர சுவாமி யாணை
சொல்லடா கருத்தடவச் சுருக்கு மெத்த
தோசமடா யிம்முறையை வெளிவி டாதே
சூத்திரந்தா னூத்திருபத் தஞ்சு முற்றே. **125**

தெட்சிணாமூர்த்தி குருபாதார விந்தமே துணை.

**காலம்**

இல்லை:

**குறிப்பு**

இதில், புருஷ வசியம், அனுமார் தியானம், அஷ்ட்ட கற்ம தம்பனம், ஆகற்ஷணம், மாடன் அட்சரம் முதலான தலைப்புகள் உள்ளன.

---

வரிசை எண்: **2274** சுவடி எண்: **1545 y**

# தொட்டியம்

ஏடுகள்: 4. சுவடியின் நிலைமை: மிகப்மிகப் பழுது. பக்கத்திற்கு: **7-8** வரிகள். பொருள்: மாந்திரீகம். அளவு: 40½ × 4 செ.மீ. கி. எண்ணிக்கை; **300**. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஆதியா மெங்கள் வாசல்
அந்தணர் முனிவர் தம்மில்
ஆதியா மாந்த ரீகம்
அய்வரும் மூவ ரொன்றாய்

**முடிவு**

சூட்சமாய் அவள்நிகத்தை யும் வாங்கி
............ பிருப்பளே யிவள்ங்க குள்ளே
சொல்லுவாள் நடக்குஞ் சோதி சூட்சம்
சூட்சமா யெட்சணியே — 38

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது எமது சுவடி எண் 1545-w போன்றதாயினும் வேறுபாடு காணப்படுகிறது. அது கொங்கணர் சல்லியம் எனப் பெயருள்ளது.

வரிசை எண்: 2275 சுவடி எண்: 1545-f

## நட்டாமுட்டி-மாந்திரீகம்

ஏடுகள்: 4+2. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 8-10 வரிகள். பொருள்: மந்திரம். அளவு: 40½ × 4 செ.மீ. கி. எண்ணிக்கை: 400. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

மாந்திரீக மானதொரு நட்டமுட்டி தானும்
மானிலத்தில் கருவாதி தயிலஞ் சொல்லுவன்
ஒந்திரிகம் யினிவேறே யொன்று மில்லை
ஆதித்தனாள் பிறந்த தலைச்சம் பிண்டம்.

**முடிவு**

வேறான மதிபார்த்து மதியொளியும் பார்த்து
விளங்குகின்ற பூரத்தின் வெளியும் பார்த்து
தாறான யிதுநட்ட முட்டி தானும்
சாத்தினோம் முப்பதிலே தானும் முற்றே!
நட்டாமுட்டி மாந்திரீகம், அஷ்ட்டகற்ம நட்டாமுட்டி முற்றும். —30
அரசப்பன் கைவசம் ஆகவேணும். இல்லாவிட்டால் ஆடமாட்டாது.
இதை ...............வும்

**காலம்**

இல்லை.

**குறிப்பு**

இதின் தலைப்பில் நட்டாமுட்டி மாந்திரீகம் 30 பாட்டும் 4 ஏட்டுக்குள் அடக்கம் என்றுளது. இதில் மாந்திரீகத்தோடு மருத்துவமும் கூறப்பட்டுள்ளது. பின் 2½ ஏடுகளில் மருத்துவம் காணப்படுகின்றது.

---

வரிசை எண்: 2276 சுவடி எண்: 1520

## நிதிபெறு தீபம் மந்திர சாத்திரம்

ஏடுகள்: 70. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 7-8 வரிகள். பொருள்: மந்திரம். அளவு: 28 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றறற்றது.

**தொடக்கம்**

நிதிபெறு தீபமென்கின்ற சாஷ்த்திரத்தை
நீலக்...... சொன்னதாகிலும்
சகலமான சகலமான சாஷ்த்திர......டு
ஈசுபரன் சொன்னது

### முடிவு

எட்டுவகை பெருமூத்திரத்துக்கு மருந்து
ஒருதெரு சுக்கு மரைத்து பசுவின்
மோரிலே நாலுநாள் கொள்ளவும்
சுக்கும் மிளகு மரைத்து பசுவின் மோரிலே
நாலு நாள் கொள்ளவும்.

### காலம்

இல்லை

### குறிப்பு

ஏடுகள் மிகமிகப் பழுதுபட்டிருப்பதால் தலைப்புகள் அறியக்கூடவில்லை. ஆயினும் மந்திரங்களும் மருத்துவங்களும் உள்ளன.

---

வரிசை எண்: 2277 சுவடி எண்: 1545-z

## புலிப்பாணியார் தேவி பூசை

ஏடுகள்: 3. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 9 வரிகள். பொருள்: மாந்திரீகம். அளவு: 40½ × 4 செ.மீ. கி. எண்ணிக்கை: 250. எழுத்து: தமிழ். முழுமை: முற்றுமுளது.

### தொடக்கம்

காரனியே பூரணமே கண்ணே மின்னே
களங்கமில்லா ரவிமதியே றீங்கார வல்லி
பூரணியே ஆரணமே போத ரூபி
பூங்கமல மரகதமே பொண்ணே யண்ணே.

### முடிவு

...................... புலிப்பாணி யானும்
அப்பனே கலியுகத்தில் பணிந்தேன் முற்றே
சாப்புமீரா சாயடியேடு

### காலம்

இல்லை

### குறிப்பு

இது, தேவியைப் பூசை செய்கின்ற முறையைக் கூறுகிறது.

---

வரிசை எண்: 2278 சுவடி எண்: 1544

## பேய் ஆடாமல் கட்ட மந்திரம்

ஏடுகள்: 2. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 6 வரிகள். பொருள்: மந்திரம். அளவு: 29 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 50. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஆடிவரும் பேய் நிக்கச் சிவ
சுத்தி வரும் பேய் நிக்கச்சிவ
பரமேஸ்வர னறிய நிக்கச் சிவ
பரமேஸ்வரி யறிய நிக்கச் சிவ

**முடிவு**

இரண்டு வேரையும் கொண்டுவந்து
ஓம் மென்று மந்திரத்தினால் 1008 உருச்
செய்து பேயாடுகிற வீட்டில் சொருகப்
பேயாடாது.

இதற்கு மந்திரம்
ஓம் நயமவந

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 2279 சுவடி எண்: 1536

## மந்திரங்கள்

ஏடுகள்: 24. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 7-9 வரிகள். பொருள்: மருத்துவம். அளவு: 18 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 400 எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

**வசியமோகினி**

அலமு சலந்தண்டு அங்கையிற் சங்காழி
யிலகு மணிப்பூ முடியா ளிந்து-சிலைநுதலரண்
மாவடு வாள் கண்ணி வராகியெனுங் குளிகை
நாவடக்கி யுண்டே நமக்கு.

**முடிவு**

செவ்வாய்க் கிழமைக்கு ருதுவானால்
ராசகுல மென்கிற தெய்வ மணுகும்
அதின்பலன்: ஒருதரம் ரத்தம் பச்சை
தோன்றியிருக்கும். ஒருவேளை கருப்பாயிருக்கும்
புருசனைக் கண்டாற் பயந்தோன்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், வீரபத்திர தியானம், சகலமான பேய்க்குமெழுதிக்கட்ட மூத்தவள் தியானம்; சுடலை மாடன் தியானம், அனுமார் தியானம் முதலான பல தலைப்புகள் உள்ளன.

வரிசை எண்: 2280 சுவடி எண்: 1504

# மந்திரசாத்திரம்

ஏடுகள்: 42 சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது பக்கத்திற்கு: 5-6 வரிகள். பொருள்: மாந்திரீகம். அளவு: 22 × 3 செ.மீ. கி.எண்ணிக்கை: 400 எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

**வசியத்துக்கு**

| | | | |
|---|---|---|---|
| லோகவசியம் | 105 | 60 | 44 |
| ராச வசியம் | 105 | 44 | 20 |
| ஸ்ரீ வசியம் | 87 | 70 | 56 |
| புருஷர் வசியம் | 84 | 26 | 105 |
| சத்துரு வசியம் | 105 | 42 | 88 |
| மிருக வசியம் | 55 | 86 | 66 |

**முடிவு**

இதுக்கு சக்கரம்

| | | | |
|---|---|---|---|
| 1 | 23 | 7 | 20 |
| 8 | 19 | 2 | 22 |
| 5 | 18 | 3 | உரு |
| 4 | 24 | 6 | 17 |

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், ஸ்ரீ மோகனம், புருஷ மோகனம், மாங்காய் காய, காயாமல் (இருக்க), ஆலையில் சர்றுவாரமல். வீடு ஒழுகாமல், மிருக தம்பனம், புள்வாய் கட்ட, தேவதை உச்சாடனம், வியாதி உச்சாடனம், முதலானவை சக்கரங்களுடன் உள்ளன.

---

வரிசை எண்: 2281 சுவடி எண்: 1532

## மந்திரசாத்திரம்

ஏடுகள்: 25. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 8-9 வரிகள். பொருள்: மருத்துவம் அளவு: 25×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 1000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

தரிப்பான் கலப்பை யென்னம்மை
வராகியென் சத்துருவை
பொரிப்பாள் பொரியெழச்
செந்தீயிலிட்டு பொரித்துச்
செரிப்பாளத்து மணவிட
முளையைத்தின்று நெடுநடவும்
சரிப்பா னங்கே படுக்கை
விரிப்பாள் சுக்காக நடத்துவளே!

**முடிவு**

திட்டமுடன் சென்றேன் நடையா
லறதன்னை திரிசூலத்தினால்
பட்டுவிளக் குத்தி செல்லாள்
திருபுனா சங்கரியே!
இது சத்துருப் படைதெறிக்க
(சக்கரம் இருக்கிறது)

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், திசைக்கட்டு விசைக்கட்டு முதலான பல மந்திரங்கள் உள்ளன.

வரிசை எண்: 2282 சுவடி எண்: 1533

# மந்திர சாத்திரம்

ஏடுகள்: 18. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6-8 வரிகள். பொருள்: மந்திர சாத்திரம். அளவு: 15½ × 3 செ.மீ. இ. எண்ணிக்கை: 350. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

**பூரானுக்கு**

கோரக்கர் மூலி குருவி னுபதேசம்
நேரொக்கக் கொண்டு நிலையறி வாளர்க்கு
சீரொற்று நிற்குஞ் சிவபதந் தானே

**முடிவு**

செய்த முறை சூரணஞ் சேர்நிறையிது
மூயிதமா யிரட்டி யுகந்துடன் சாதித்துத்
துய்யநல் வாசியைத் துவக்கியுள் நோக்கியே
அய்யன் குருபரன்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, வயிரவன் மந்திரம், சக்கத்தேவி மூல மந்திரம், பத்திரகாளி மந்திரம், பகவை மந்திரம் முதலான பல மந்திரங்களைக் கொண்டது.

வரிசை எண்: 2283 சுவடி எண்: 1584

# மந்திர சாத்திரம்

ஏடுகள்: 22. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 5-6 வரிகள். பொருள்: மந்திரசாத்திரம். அளவு: 18 × 2½ இ. எண்ணிக்கை: 300. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

அட்டவணை
மூச்சுவாங்க — 1
சொரிபிடிக்க — 1
தண்டு கட்ட — 1
போகிலே பனம் — 1

**நூல் பட்டு முரிக்க**
யெ.........ம் பனம்
சாதிக்காயைப் பொடி செய்து
யெண்ணையில் வெந்து புருஷனோடே
புணரும் போது தடவிப் புணர்ந்தால்
யடிமையாவன்

**முடிவு**

பாருநீ கொள்கி சிர்த்தில்
பரிவுட னுள்ளி கீயஞ்
சேருநீ கருஞ்சீர களுக்குடன்
கூடக் காச்சிச்
சீருடன் குடுத்துப் பின்னும்
சிறந்தவெள் ளறுகு தானும்
நீருடன் காச்சிக் கொள்ள
நீங்கிடு முனமே தானே! —69.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் முன் அட்டவணையில் உள்ளது போல் மந்திரங்கள் மருத்துவங்கள் உள்ளன.

---

வரிசை எண்: 2284 சுவடி எண்: 1535

# மந்திர சாத்திரம்

ஏடுகள்: 16. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: மந்திரசாத்திரம். அளவு: 13 × 2¼ செ.மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ் ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

நதகாலாக்கின அனுமந்த வீரா
அக்கினி அனுமந்தா வீறு விறாடாயு
கடதவிநள அனுமந்த ராய
மகுத்து மாமகிலை உரு தனாலே

**முடிவு**

புல்லா மணக்கன் வோதூ மானம்
மூன்றுநாள் யோனியில் வைத்துப்
பசுவு நெய்யில் சீக்காச்சி
புருசனுக்கு வா

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், செய்வினை, லோகவசியம், குட்டம் வரும்படி செய்ய முதலான பல மந்திரங்கள் உள்ளன.

வரிசை எண்: 2285 சுவடி எண்: 1545-s

# மந்திர சாத்திரம்

ஏடுகள்: 2. சுவடியின் நிலைமை: மிகமிகப் பழுது. பக்கத்திற்கு: 10 வரிகள். பொருள்: மந்திரம். அளவு: 40½ × 4 செ.மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

## தொடக்கம்

(முன்பகுதி பழுதுபட்டுள்ளது)

## முடிவு

வாங்கு வாங்கு சாலக்காறாறா
உச்சாடினம் — தம்பனம்,
பேதளம், வசியம், நிறுநீ
நீலி சீலமாகுமே.

## காலம்

இல்லை.

## குறிப்பு

இதில், மந்திரத்திற்குண்டான எழுத்துக்கள் உச்சரிக்க வேண்டிய உருக்கள் கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 2286 சுவடி எண்: 1561-d

# மந்திர சாத்திரம்

ஏடுகள்: 8. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 8-9 வரிகள். பொருள்: மாந்திரீகம். அளவு: 19 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

## தொடக்கம்

**எல்லம்மாள் சக்கரம்**

(சக்கரம் இருக்கிறது)
ஓங்காரத்துள் அந்த
அதிகாரமு மந்திரமும்
பெருர். ✱

**முடிவு**

சிகர சீகார அகோர அகோர
அட்சாட்சர அன அன
தெக தெக அக்கினி சுபாலா
லையமாலா தாருணி அநேகம் மந்திரம்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில் சக்கரங்களுடன் பூடுதுரப்பு, தொட்டயத்துக்கு (தொட்டியத்து) எல்லம்மாள் உரை முதலானதுகள் உள்ளன.

---

வரிசை எண்: 2287 சுவடி எண்: 1575-f

# மந்திரசாத்திரம்

ஏடுகள்: 12. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 5-7 வரிகள். **பொருள்:** மாந்திரீகம். அளவு: 17 × 2½ செ.மீ. கி. **எண்ணிக்கை** 150. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

**திருடன் கள்ளனுக்கு மந்திரம்**

மேடைக்கு வந்து களவு செய்கிறதற்கு
செய்கிற மந்திரிக்கவும்
தாரை மந்திரிக்கவும்.

**முடிவு**

சருவு கட்டம் போட்டு மூட அது
காயிதமெல்லாம் பறந்து போயிருக்கும்
அது பஷ்பமாம்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், மீளாத பில்லி சூனியம் தீர மருந்து, இடது கால் மண்ணு மந்திரிக்க, பில்லி சூனியம், யெதுவிளி, பகையாளிக்கி மந்திரிக்க, மந்திரங்களும், மருந்துகளும் உள்ளன.

வரிசை எண்: 2288 சுவடி எண்: 1561-a

# மந்திரத்திரட்டு

ஏடுகள்: 3. சுவடியின் நிலைமை: பழுது பக்கத்திற்கு: 5-8 வரிகள். பொருள்: மாந்திரீகம். அளவு: 19 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 40. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

**சல்லியத்துக்கு சக்கதேவிமந்திரம்**

அம். உம். எம். ஐம். ஓம். காம்.
யிக்கும் சம் யநமசிவ ர ர ர ர ர
மனத்தல்லி சக்கத் தேவி ர ர ர ர
இது மூலமந்திரம்.

**முடிவு**

அனுமன் மந்திரத்துக்கு
யெந்திரம் (இருக்கிறது)

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், சக்க தேவி மந்திரம், அனுமன் மந்திரம் முதலியன உள்ளன.

---

வரிசை எண்: 2289 சுவடி எண்: 1545-v

# வேண்டின வீட்டில் சேராரும் வருவர்

ஏடுகள்: 1. சுவடியின் நிலைமை: மிக்மிகப்பழுது. பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: மாந்திரீகம். அளவு: 40½ × 4 செ.மீ. கி. எண்ணிக்கை: 50. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

உ சு க்ஷ வி வி ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ
க்ஷ க்ஷ வி ஹ உ சு றா றா

**முடிவு**

(மாரணத்துக்கு
சக்கரம் இருக்கிறது)

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், தம்பணம், பேதனம், மாரணத்துக்கு மந்திரங்கள் சக்கரங்களுடன் உள்ளன.

---

வரிசை எண்: 2290 சுவடி எண்: 1568-e

## அகத்தியர் சாத்திரம்

ஏடுகள்: 6.(89-94). சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 4 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 13 × 2 செ.மீ. கி. எண்ணிக்கை: 30 எழுத்து: தமிழ். ஆசிரியர்: அகத்தியர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

இந்த சோசியத்தை நூத்தெட்டுக் குள்ளே
மூன்று திரம் ஒரு லெக்கம் சொல்லச்
சொல்லி அந்த லெக்கத்தைக் கூட்டிய
துகையைப் பதினாறில் கழித்து

**முடிவு**

15-மெத்தவே பொருள் சேரும்
16-மீண்டும் வரும். நல்லவறத்து
பதினாறாகும்.

இதன்பின்னர்; முன்சொன்ன நூல்களின் பட்டியல் உள்ளது.

**காலம்**

ஆங்கிலா வருஷம் தை மாதம் 17-ஆம் தேதி வெல்லம்பட்டி
கிராம அச்சணம்பட்டியிலிருக்கும் வாத்தியார்
ஏறணஞ் செட்டியார் மகன் வெள்ளையன் செட்டி
கெவுளி காதல், மனை நூல், ஆந்தை காதல், ருதுசாந்தி, நாளியில்
விபரம், சீதாதேவிசக்கரம், இது வெல்லாம் எழுதியிருக்கிறது
இதை எடுத்துப் பார்த்த பேர்கள் பார்த்துப் போட்டு
ஏட்டுக் காரனிடம் குடுத்து அனுப்பிக்கவும்.

**குறிப்பு**

இது சோதிடத்தைச் சார்ந்தநூல். இதன் பின்னர் 7 ஏடுகள் கௌரி பஞ்சாங்கம் எழுதியது உள்ளன.

---

வரிசை எண்: **2291** சுவடி எண்: 1573-b

# அலகு நூல்

ஏடுகள்: **19.** சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 5-6 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 29½×2½ செ.மீ. கி.எண்ணிக்கை: 600. எழுத்து: தமிழ். ஆசிரியர்: சுக்கிராச்சாரியார். முழுமை: முற்றற்றது.

## தொடக்கம்

அருக்கனும் புந்தி வெள்ளி
அகலவே மூன்று நாளில்
கருக்கெனக் கால ............

## முடிவு

இருமான் செய்யுபுதன் மூப்பா னொன்றாய்
குருவை யைந்து வெள்ளிமுப்பான் மைந்த னெட்டு
வீறுபுத்தி ராகுகேதுளீதா னிரெட்டென்றோ. —86

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, எமது சுவடி எண் D 1463/797-b போன்றது இதன் பின்னர், சமுட்சியப் பிராண பலன் எழுதிய ஏடுகள் 5 உள்ளன.

வரிசை எண்: **2292** சுவடி எண்: 1573-d

# அன்பத்தோரட்சரம்

ஏடுகள்: **2+4.** சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 5-6 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 24×3 செ.மீ. கி.எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

## தொடக்கம்

**அன்பத்தோரட்சரம்**

| | | | |
|---|---|---|---|
| 12 | 15 | 19 | 5 |
| 18 | 18 | 11 | 16 |
| | ஆ | | |
| 7 | 21 | 13 | 10 |
| 14 | 9 | 8 | 20 |

**இதுக்கு திருமந்திரம்**

### முடிவு

விஷம் $3\frac{3}{4}$
தனம் $3\frac{3}{4}$
அமுர்தம் $3\frac{3}{4}$
கலகம் $3\frac{3}{4}$
சோரம் $3\frac{3}{4}$
விஷம் $3\frac{3}{4}$
ரோகம் $3\frac{3}{4}$

ஆக நாழிகை 50

### காலம்

இல்லை

### குறிப்பு

இதில், ஐம்பத்தோரட்சரசக்கம், மந்திரம், யோகினி, கௌரி பஞ்சாங்க சாத்திரம் ஆகியவை உள்ளன.

---

வரிசை எண்: 2293 சுவடி எண்: 1568-b

## ஆந்தைகாதல் அட்டவணை

ஏடுகள்: 4. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 33(28-60) வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 13 × 2 செ.மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

### தொடக்கம்

ஓரறை ஓரைக்குமாகில் உறுதியா சாவு சொல்லும்.
யீரரை ஓரைக்கு மாகில் யெண்ணிய மனமு நன்று
மூனுரை ஓரைக்கு மாகில் மோகமா
மங்கை சேருவாள்

### முடிவு

ஓரறை உரைக்கு மாகில்
ஓங்கிய பிணியுந் தீரும்
பத்துரை உரைக்குமாகில்
பதிவிட்டுப் பேறலாமே
ஆந்தை காதல் அட்டவணை முற்றும்

### காலம்

இல்லை

**குறிப்பு**

இதில் ஆந்தை காதல், நிமித்தக்காதல் வலமிடம் அறியும்படி, யெதிர்வரும் சயனம், காகமேரின மூலை பார்ப்பது, போதமேறு மூலையார்ப்பது, காடைநூல், எட்டுதிக்கு கணக்கு சொல்வது, காகம் கரைதல், காகம் சத்தம் முகூர்த்தம், கழுதை கரைதல், நேரான கெவுளிகாதல் விபரம், பல்லிவிழுதல் அறிதல், மாதங்களில் கரிநாள் அறியும்படி. வாரம், சூலம் அறியும்படி, ஆகியவை உள்ளன.

---

வரிசை எண்: **2294** சுவடி எண்: **1569-e**

# இடைக்காட்டார் சாத்திரம் வருஷபலன்

ஏடுகள்: 27 சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 3-4 வரிகள். பொருள்: சோதிடம், அளவு: 19 × 2 செ.மீ. கி.எண்ணிக்கை: 250. எழுத்து: தமிழ். ஆசிரியர்: இடைக்காடர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

பிரபவ வருஷம் பிழையுண்டு.
மனிதர் வியாதி கொண்டு சாவார்
கிழ்க்காவி, பசுவுக்கு ஆடு எருமைக்கு
நல்லது

**முடிவு**

ரவுத்திரி வருஷம் மழையுண்டு வெள்ளம் உண்டு
... ... ... .... ... ... ... பெருகும். மாடுகள் பெருகும்,
பிணியில்லை., ராசா தீதியுண்டு. சீலை, புடவை
பருவத்துக்கு குறையும் 54

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், 54 ஆண்டுகட்குரிய வருட பலன்கள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 2295 சுவடி எண்: 1573-a

## உள்ளமுடையான் நட்சத்திரப் பொருத்தம்

ஏடுகள்: 102. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு 6-7 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 29½×2½ செ.மீ. கி. எண்ணிக்கை: 3500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: உள்ளமுடையான். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

இல்லை

**முடிவு**

இல்லை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது எமது சுவடி எண் 1518, 1570-a போன்றது.

---

வரிசை எண்: 2296 சுவடி எண்: 1572-b

## குமாரசாமீயம் மூலமும் உரையும்

ஏடுகள்: 7. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 4-6 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 37×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: குமாரசுவாமி. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

இல்லை

**முடிவு**

இல்லை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, எமது சுவடி எண் D 1526 / 803-ஐ போன்றது.

---

வரிசை எண்: 2297 சுவடி எண்: 1545-t

# கோச்சனை மனிதருக்கு ரேகை லெட்சணம்

ஏடுகள்: 7. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 10-11வரிகள் பொருள்: சோதிடம். அளவு: 40½ × 4 செ.மீ. கி.எண்ணிக்கை: 700. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

இருடிகளை வணங்கி யெங்க
ளிறைவன் றிருவடிகள் ......
...............................

**முடிவு**

விமானம் வேல் சோடிக்
......... டயாள் வாழ்க்கை
கரும்புய மாது தானே. —69

**காலம்**

(ஸ்ரீ 1828-ப்பாட்)

**குறிப்பு**

இதில், ரேகை லட்சணங்கள் கூறப்பட்டுள்ளன, இன்னின்ன ரேகைக்கு இன்னின்ன பலன் என்று கூறப்பட்டுளது.

—✱—

வரிசை எண்: 2298 சுவடி எண்: 1542

# களரிகால் - கெவுளி காதல்

ஏடுகள்: 9. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 4-6 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 23½ × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஹரி: ஓம்.
வாக்குண்டாம் ............ தமக்கு
ஏழுவாரத்துக்கு நாழிகை 420
வகை ஒன்றுக்கு 105 நாழிகையாகவும்
இதுவறியும்படி. நாயறு 60-நாழிகையும்.

**முடிவு**

ஆகாசத்தில் , சூரியனிருப்பான் கலகமுண்டு
பூமியில் இந்திர னிருப்பான் - நல்லபாக்கியம் வரும்.
தேவிசகாயம்.
சனிக் கெவுளி முற்றும்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, பல்லி சொல்லுக்குப் பலன் கூறுவது. இன்ன கிழமையில் இன்னதிசையில் பல்லி சொன்னால் இன்னபலன் என்று கூறுகிறது. இப்பெயரால் எம் சுவடி எண் D 1012 / 714-kல் ஒரு சுவடி உள்ளது.

---

வரிசை எண்: 2299 சுவடி எண்: 1568-a

# கெவுளி சாத்திரம்

ஏடுகள்: 11 (17-27) சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 4 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 13 × 2 செ.மீ. கி. எண்ணிக்கை: 50. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

..............................தூரத் துறவு வரும்
இடையில் சந்தோஷ வார்த்தை வரும்
தெற்கே அற்த லாபம். இடையில்
நோயுண்டாகும்.

**முடிவு**

இந்தப் பிரகாரம் சனி முப்பது
நாழிகைக்கும் பார்த்துக் கொள்ள
வேண்டியது. கந்தனாதன் துணை
இந்தப்படி கரிவாரம் ஏழுக்கு
கெவுளிசாத்திரம் பார்த்துக்கொள்ளுகிறது.

**காலம்**

இல்லை.

**குறிப்பு**

இது, பல்லி சொல்லுக்குப் பயன் கூறுவது.

---

வரிசை எண்: 2300 சுவடி எண்: 1570-b

# கோசாரபலன்

ஏடுகள்: 20. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 4 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 31 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

## தொடக்கம்

**சூரியன்பா**

இரவி அஞ்சா மிடந்தனி திங்க ளெட்ட
 லேர்தனில் செவ்வாயு மிரண்டிற் புந்தி
விரவு குருமூன்றதனில் சூங்க னாரில்
 மிக்கசனி சென்மத்தில் மிகுபாம் பொன்பால்

## முடிவு

சீருலவு முன்னோ ருரைத்தபடி யான்சொல்
 சிந்தைவைத் தாளுமம்மா
திருமேவு யக்கரை பதியிலே வளர்கின்ற
 திருசூலி மாரியுமையே.

## காலம்

இல்லை

## குறிப்பு

பாட்டெண் இல்லை, கடைசிப் பாடலின் முன்பாடல்கள் இரண்டில், ''திண்டி நகரில் வளறு மிருளப்ப சன்னாசி மனமகலாத வாலை அங்காளம்மனே!'' என்று முடிகின்றன. இதில், ஏழு நாட்களின் பாட்டு, குழுவின்பாட்டு, மகாதிசைப் பலன் அறியும்படி, நட்சத்திரங்களில் நிற்கும் ராசிகளாவன், தன்னையறியும் நாள், பலன், வியாதித்தான் நாள் ஆகியவை உள்ளன. பின்னர் மருத்துவம் எழுதிய ஏடுகள் இரண்டு உள்ளன.

வரிசை எண்: 2301 சுவடி எண்: 1547

# சகாதேவநூல் சாத்திரம்

ஏடுகள்: 109. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 3-4 வரிகள். பொருள்: சோதிடம் அளவு: $17\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ. கி. எண்ணிக்கை: 800. எழுத்து: தமிழ். ஆசிரியர்: சகாதேவர். முழுமை: முற்றுமுளது.

## தொடக்கம்

விநாயகர் காப்பு

**விருத்தம்**

தகாத காரியந் தன்னை விலக்கவும்
புகாத வேலை புகுந்து நிலைநிற்க
சகாதேவன் கலை சாற்று துணை செய்
மகா தேவன் சுதன் மன்னுவா னென்னுளே.

**நூல்**

**விநாயகக் கடவுளைப் பூசிக்க நன்றோ தீதோ**

விநாயகக் கடவுளைப் பூசிக்க மிகவும் நன்று

## முடிவு

**சிநேகம் செய்ய நன்றோ? தீதோ?**

1. சிநேகம் செய்ய நன்று
2. சிநேகம் செய்தால் பகைவரும்
3. சிநேகம் செய்தால் வேறொருவனால் நன்மை
4. சிநேகம் செய்தால் துன்மை வரும்
5. சிநேகம் செய்தால் நன்று
6. சிநேகம் செய்தால் வேறொருவரால் தீது
7. சிநேகம் செய்தால் பொருள்வரும்.
8. சிநேகம் செய்தால் மரணமுண்டாம்

சகாதேவர் சாஸ்த்திரம்

முற்றும்

## காலம்

விகுறுது வருஷம் மார்கழி மாதம் 16-ஆம் தேதி அரிவுரான குலசேகர பட்டணத்து கல்வர்ச நாட்டுச் சுந்தர பாண்டிய புரத்தில் நன்னெரி பூண்டிருடையார் சின்னத் திருவப்பன் செட்டியார் குமாரன் சின்னான் செட்டி யெழுதிய சகாதேவர் சாஷ்த்திரம். திங்கட்கிழமை ஆயிலிய நட்சேத்திரமும் சித்துயோகமும் மீனலக்கினமும் கூடிய சுபயோக சுபதினத்தில் யெழுதிய சகாதேவர் சாஷ்த்திரம் முற்றிற்று.

இதை எடுத்தவர்கள் பிழையிருந்தால் திருத்திக் கொண்டு சாஷ்த்திரம் பார்த்துக் கொள்ளவும்.

மங்கள நாயகர் துணை
மலையலங்கார சுவாமி துணை
ஆண்டித் தெயம் துணை

## குறிப்பு

இது சோதிடநூல்களுள் ஒன்று. கயறு போட்டுப் பார்க்கும் சுவடி போன்றது. பாண்டவர்களுள் ஒருவாரன சகாதேவரால் இயற்றப்பட்டதென்பர்

இது எமது சுவடி எண் D 1456/840 போன்றது.

வரிசை எண்: 2302 சுவடி எண்: 1564

# சகாதேவன் சாத்திரம்

ஏடுகள்: 36. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 6-7 வரிகள்: பொருள்: சோதிடம். அளவு: 24 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 800. எழுத்து: தமிழ். ஆசிரியர்: சகாதேவன். முழுமை: முற்றுமுளது.

## தொடக்கம்

ஹரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 111 | 424 | 342 | 314 | 232 | 144 |
| 134 | 112 | 431 | 343 | 321 | 233 |
| 223 | 141 | 113 | 432 | 344 | 322 |
| 312 | 224 | 142 | 114 | 433 | 411 |
| 441 | 313 | 231 | 143 | 121 | 434 |

## முடிவு

அந்த பயத்தை விட்டுவிடவும்
உன் பந்துக்களுடன் கூடி வாழவும்
நலம், நீமுன் செய்த தொழிலை
விட்டு இருக்கிறாய். அதைச் செய்யவும் — 34
சுகமாகும். உத்தமம்
தொடுகுறி சாஷ்த்திரம்
முற்றிற்று.

## காலம்

இல்லை

## குறிப்பு

இதில், முன்னருள்ள கட்டங்களில் உள்ள எண்களில் ஒன்றைத் தொட்டால், அதற்குரிய பலன்கள் ஏட்டில் சொல்லப்பட்டுள்ளன. இது எமது சுவடி எண் 1547-ன் வேறாயது. தொடுகுறி சாத்திரம் போன்றது.

—o—

வரிசை எண்: 2303 சுவடி எண்: 1502

# சக்கரப்பொசிப்பு

ஏடுகள்: 31. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 7-9 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 35 × 4 செ.மீ. கி. எண்ணிக்கை: 1200. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

## தொடக்கம்

**மேஷச் செவ்வாயில் வருஷம்-7 ஊன்காரகன்**

மேஷச் செவ்வாய் ஊன் முதலானதுக்கு நாள் 28

அங்கர்ரகன் சக்க ரத்தில்
அழலவன் பொசிக்கு மாகில்
மங்கவே வியாதி யுண்டாம்
மனையில்அக் கினியாய்ப் பீடை
பாங்குடன் பூமி சண்டை
பகைதன வழக்குண் டாக
அங்கமும் வடிவு நொந்து
ஆருயிர் அழிவுண் டாமே! —1

## முடிவு

| | | | |
|---|---|---|---|
| விருட்சகச் செவ்வாய் வருஷம் | 7 நாள் | 3 நாழிகை | 325/8 |
| தனுசு வியாழம் | 10 | 5 | $3\frac{3}{4}$ |
| மகரச் சனி | 4 | 2 | $1\frac{1}{2}$ |
| கும்பச் சனி | 4 | 2 | $1\frac{1}{2}$ |

ஆக ராசி 12-க்கு 10-ம் சரி

## காலம்

இல்லை

## குறிப்பு

இது, ராசி, சக்கரத்தின் கோள் நிலைகளின் பலன் கூறுவது.

வரிசை எண்: 2304 சுவடி எண்: 1583

# சத்தியாரூடம்

ஏடுகள்: 33. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 23 × 2½ செ.மீ. கி. எண்ணிக்கை: 700. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

## தொடக்கம்

வெத்திமா தவத்தோன் கும்ப
மெய்முனி பதத்தைப் போற்றி
சத்தியா ரூடந் தன்னில்
தரும் பொருள் தன்னை யாய்ந்து

**நூல்**

பாதி மதியணி வேணிப்பரமனார் கஞ்சப்
பதம் போற்றியே யுலகில்ப் பருவமாக
ஆதிபரா பரையுமை மாதங்கி சத்தி
யாரூட நீதிநெறி யறியக் கேளு

## முடிவு

விரித்திட்ட சத்தியா ரூட மான
விருத்தமது ஒருநூறு வேத மாகும்
வருத்தமாய் மனம்பத்திப் பார்ப்பா ராகில்
மாநிதியம் பெற்று மண்மேல் வாழ்வார்
தரித்திரங்க ளணுகாது தர்ம முண்டாம்
தாரணியில்ச் சித்தர்வந்து தருவார் புத்தி
கருத்துடனே ஆத்தாளும் அய்யா வுந்தான்
காட்சிதரு வார்களொரு நூறு முற்றே! —101

சத்தியாரூடம் முற்றும்

## காலம்

தொடங்கினது: நந்தன வருஷம் மாசி மாதம் 21-ஆம் தேதி வாத்தியார் முத்து மருதைாபிள்ளை வடிவேல் துணை.

முடித்தது: நந்தன வருஷம் பங்குனி மாதம் 3-ஆம் தேதி மேலவயலூரிலிருக்கும் சு.ம. முத்துமருதை வாத்தியார் சுவடி.

வடிவேல் துணை
குருபாதமே கெதி

## குறிப்பு

இது சித்திராரூடம் மருத்துவம் D 533 / 301-b; இலக்கியம் D 1983 / 1054 போன்றது. இதிலும் விஷமுடைய பாம்புகளின் பெயர், இந்நூலைக் கற்கும்முறை, சாதியறிதல் முதலானவை சொல்லப்பட்டுள்ளன.

இதன் பின்னர் விடத்துக்கு மருந்து, சுப்பிரமணியர் சடாட்சர மந்திரம், கொட்டையூர் சிவன் பாடல் 2 ஆகியவை உள்ளன.

---

வரிசை எண்: 2305 சுவடி எண்: 1524

# சல்லிய நூல்-100

ஏடுகள்: 38. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 22 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 1200 எழுத்து: தமிழ். ஆசிரியர்: சல்லிய முனிவர். முழுமை: முற்றற்றது.

## தொடக்கம்

### சல்லிய முனிவர் பாடல் - 100

ஆதியா மாந்தி ரீக
மாய்ந்தவர் முனிவர் பாதம்
நீதிசேர் சல்லிய னென்றே
நிலத்தினில் செய்த நூலைத்
தீதறுந் தமிழி னாலே
செப்பவே பொருளை யாய்ந்து
சோதிசேர் செம்பொற் பாதம்
சூடினேன் சென்னி மீதே! 1

## முடிவு

குருவரு ளாலே சல்லியன்
கூறிய தொழில்க ளெல்லாம்
குருவரு ளாலே கண்டு
குறிப்புடன் அறிய வேணும்
குருவருள் தானே முத்தி
குருவிரு பாத மிரண்டும்
கொண்டனன் சென்னி மீதே — 100

சல்லியநூல் முற்றும்.

அய்யுங் கிலியும் சவ்வும் .............. அய்யும்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, எமது சுவடி எண். D 1977 / 1253 போன்றது. 30 - 50 வரை பாடல்கள் இல்லை. இதன் பின்னர், மாந்திரீகம் சக்கரங்களுடன் எழுதிய 4 ஏடுகள் உள்ளன.

---

வரிசை எண்: 2306 சுவடி எண்: 1565

# சாதக விதி அஷ்ட்ட கர்மம்

ஏடுகள்: 39 + 5. (35வது ஏடு இல்லை) சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 8-9 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 21 × 3½ செ. மீ. கி.எண்ணிக்கை: 800. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

கதிரவனுக் குறவு செவ்வாய் திங்கள்
பொன்னோன் கடும்பகையாகும் வெள்ளி
சனி சமனே புந்தி
மதிதனக்கு நட்பருக்கன் பகையே மேதை
மற்றவர்கள் சமனாகு கடிய செவ்வாய்
கதிநட்புச் சந்திரன் சூரியன் வியாழம்
ஆய்பகை புந்திசமன் சனியே வெள்ளி
விதிதிகழ் மாதவர்க் குரவு கதிரோன் சுங்கன்
மிஞ்சுபகை மதிமற்றவர்க ளென்னே. —1

**முடிவு**

லங்கினத்துக்கு இருப்பந்தி ரெண்டா
நட்சேத்திரம் யெந்த நட்சேத்திரம்
வருமோ அந்த நட்சேத்திரத்துக்கு

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், எந்தெந்த கோள்களுக்கு எந்தெந்த கோள்கள், நட்பு, பகை என்ற விபரமும், லக்கின பாவமும் கூறப்பட்டுள்ளன.

இதன்பின் உள்ள உதிரி ஏடுகள் 5-ல், சூரிய அஷ்ட்ட கர்ம்ம், சந்திரன், செவ்வாய், சறுவா அஷ்ட்ட கருமக வர்க்கம் முதலியன கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 2307 சுவடி எண்: **1505**

# சாமுத்திரிகா லட்சணம்

ஏடுகள்: 36. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 4-7 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 18 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை 600. எழுத்து: தமிழ். ஆசிரியர்: சாமுத்ரியன். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஹரி: ஓம். நன்றாக
குருவாழ்க குருவே துணை

**புருஷ லட்சணம்**
**காப்பு**

வடிவைப்பொரு நெடுங்கண் வல்லபையாம் பச்சை
பிடியைப் பிணைகளிற்றைப் பேணி — அடியைத்
தினம் நினைந்தா ரெய்தாற் சிறப்புவே றுண்டோ
மனம் நினைந்த தெல்லாம் வரும்

திருச்சிற்றம்பலம்

**நூல்**

இரவி தனைவணங்கி யெங்க ளிறைவன்
திருவடிகள் சென்னியின்மேற் சேர்த்தி — தெரிவரிய
**சாமுத் திரியன்** தமிழால் விரித்துரைப்பன்
சாமுத் திரியாய் நவின்று — 1

❋ ❋ ❋ ❋ ❋

அட்டமி மதிய மேபோன்
றழகுய நெற்றியாகிற்
பட்டமே கட்டுமென்க
பாங்கினர்ப் நரம்பொன் றாகில்
விட்டிடில் நடுவில் நின்று
விளங்கிடில் வேந்தன் தன்னோ
டொட்டிய சேனைக் கெல்லா
மொருபெருந் தலைவ னாமே! — 47

புருஷலக்கணம் கூறியது முற்றும்
குருவே துணை

## முடிவு

**மகளிரிலக்கணம்**

ஆதியங் கடவு ளண்டத்
ததிபதி யணங்கு சூழ்ந்த
தாதவிழ் கொன்றை சூடுந்
தந்துவ வடிவை வாழ்த்தி
நீதியால் முனிவன் சொன்ன
நேரிழை மகளிர் தம்பா
லோதிய பரிசே யெல்லா
லக்க(ண) முனாக்க லுற்றேன். — 1

❋ ❋ ❋ ❋ ❋ ❋

நாவிதற் பூர மற்ற
நல்கிய தென்னம் பாளை
காவிசே ரிலுப்பைப் போது
கமழ்பொழி யனிச்சந் தாழை
மேவுநந் திறைக ளெல்லாம்
விளும்புற் நாறு மாகில்
தேவியைத் திருவை யொத்து
நீளகத் திருக்கு மன்றே! — 61

மகளி ரிலக்கணம் முற்றும்
ஆக விருத்தம் — 108
சாமுத்ரிகா லட்சணம் நூல் முகிந்தது
முற்றும்
சுப்பிரமணியம் லட்சிக்க

**காலம்**

இல்லை

## குறிப்பு

இது, ஆண்பெண்களின் அவயவ இலக்கணமும், அவற்றின் பலாபலனும் கூறுவது. இது, அகத்திய முனிவருக்கு குமாரக்கடவுள் உபதேசித்தது. இது, உரை நடை நூலாகவும்,சுவடி எண் D 1032/675, D 1478/763 முதலான சுவடிகளில் காணப்படுகின்றது.

வரிசை எண்: 2308 சுவடி எண்: 1510

# சாமுத்ரிகாலட்சணம்

ஏடுகள்: 19. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 7-9 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 24 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 600. எழுத்து: தமிழ். ஆசிரியர்: சாமுத்ரிகன். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஹரி ஓம் நன்ருக
குருவாழ்க குருவே துணை
இரவி தனைவணங்கி யெங்கள் பெருமாள்
திருவடிகள் சென்னியின் ... .... .... தெரிவரிய
சாமத் திரியத் தமிழால் விரித்துரைப்பன்
... ... ... ... லும் நவின்று

**நூல்**

தோளொடு நடுவிரல் தொட்டு ரட்டிசெய்
நீழம தடிலொடு நெற்றி தீண்டிடில்
காளைதன் னுருவோடு கண்ணுஞ் செய்யவாய்
கோளறு சதாயுவாய்க் குலாவுஞ் செல்வமே! — 1

❋ ❋ ❋ ❋ ❋

விட்டிடில் நடுவில் நின்று
வர்ங்கிடில் வேந்தர் தம்மோ
ரொட்டிய சேனைக் கெல்லாம்
ஒரு பெருந் தலைவ னாமே! — 50

ஆண்பால் முற்றும்

**கற்பு லட்சணக்குறி அத்தியாயம்**

தீதெரித்த தமிழ்முனி செப்பலும்
மாது சொற்ற னனாவண்ண வனென்றருள்
மாத ... ... ... ... கேட்ப மகிழ்வுடன்
சூத மாமுனி சொல்லலுற் றாமரோ — 1

**முடிவு**

(மதி) ரம்போ லிருந்து மெய்தான்
னொளியுடன் விளங்கிப் பின்னும்
மதுரமே நாறு மாகில்
மங்கல (மூர்த்)தி யாகும்
றெதிதரும் மருட்சி யெய்தி
நீடுழி வாழ்ந்தி ருக்குமென்று
நிதிதரு மனத்தி யாகிச்
சிறப்புடன் வாழு மன்றே! — 50

சாமத்திரிய லட்சணமுற்றும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, எமது சுவடி எண் 1505 போன்றது. இதில் வேறுபாடுகள் அதிகம் காணப் படுகின்றன. 'சாவித்திரி' லட்சணம் என்றும் காணப்படுகிறது பிழைகள் மலிந்து நடக்கின்றன.

---

வரிசை எண்: **2309** சுவடி எண்: 1562

# சித்திராரூட நொண்டி

ஏடுகள்: 45. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 6-9 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 25×3 செ.மீ. கி. எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

இல்லை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, எமது சுவடி எண் D 1983/1052 போன்றது.

---

வரிசை எண்: **2310** சுவடி எண்: 1529

# சித்திராரூடம்

ஏடுகள்: 87. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 5-6 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 16×3 செ.மீ. கி.எண்ணிக்கை 1000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

ஹரி ஓம்

அத்திமா முகவன் செய்ய
வடியிணைக் கமலம் போற்றி
சித்திரா ரூடந் தன்னில்
செப்பிய பொருளா ராய்ந்து
சுத்தமா யெவர்க்குள் தோன்ற
சுருக்கமா நொண்டிச் சிந்தா
வித்தக னருளி னாலே
தமிழில் விளம்ப றுற்றேன்

**முடிவு**

வேதியன் முதல்நால்ச் சாதி
    விடவராக் கடியுண் டோர்க்கு
கோதிய மந்தி ரத்தால்
    மருந்தி னாலும் நோய் தீர்த்தோர்ன்
சாதியின் மிக்க வேதத்
    தலைவராய் பிறந்து பின்னர்
போதில்வாழ் பிரம்ம ராகிப்
    புகழவீற் றிருப்பர் தாமே!
    சித்தாரூடம் முற்றும்
    குருவேதுணை லட்சிக்கவும்

**காலம்**

பிறசோபதி வருஷம் அற்பிசை மாதம் 20 தேதி ஆறுமுத்து மகன் மூத்நவன்னன் சித்தாரூடம் எழுதி நிறவேறினது முற்றும்.

எடுத்து வாசித்துப்பார்த்த பேர்கள் பிழையிருந்தால் திருத்திக் கொள்ளவும்.

எடுத்து வாசித்துப் பார்த்தவர்கள் ருடுத்து விடவும். குருவே துணை லட்சிக்கவும் தெண்டாயுதபாணி லெட்சிக்கவும்.

## குறிப்பு

இதில், பாம்புகளின் சாதி, இறையெடுக்கும் நாள், இருக்குமிடம் படத்தின் குறி, நிறம், வாசனை, கெற்பம் தரிக்கும் காலம்; பல்லின்பேர், ரத்த மண்டலி, சீதமண்டலி, அடக்கக்குறி, கருடத்தியானம்; சோதினை வேர் விரியன் கடிக்கு மருந்து முதலிய பல தலைப்புகள் உள்ளன.

இது, எமது சுவடி எண் D 1983/1052 போன்றது.

—❋—

வரிசை எண்: 2311 சுவடி எண்: 1586-ஊ

# சித்திராரூடம்

ஏடுகள்: 47. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 6-7 வரிகள். பொருள்: மருத்துவம், சோதிடம். அளவு: 29 × 3 செ.மீ. கி.எண்ணிக்கை: 1000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

இல்லை

**முடிவு**

இல்லை

**காலம்**

ராட்சத வருடம் அற்ப்பசி மாதம் 5-ஆம் தேதி சித்திராரூடம் முற்றும். அப்பு கையெழுத்து

**குறிப்பு**

இது, எமது மருத்துவச் சுவடி எண் D 533/301-b போன்றது.

வரிசை எண்: 2312 சுவடி எண்: 1572-a

## சூடாமணி உள்ளமுடையான்

ஏடுகள்: 32. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 4-5 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 37 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 700. எழுத்து: தமிழ். ஆசிரியர்: உள்ளமுடையான். முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

இல்லை

**முடிவு**

இல்லை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது, எமது சுவடி எண் D 1434/850-a போன்றது. இதில் முழுமையாக இருப்பினும் 30-வது ஏடு பாதியாக ஒடிந்துளது.

முகப்பு ஏட்டில் வடமொழி சுலோகம் தமிழில் எழுதப்பட்டுளது.

வரிசை எண்: 2313 சுவடி எண்: 1588

## சோதிடம் சாத்திரம்

ஏடுகள்: 140. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 4-8 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 24 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 5000. எழுத்து: தமிழ் & கிரந்தம். ஆசிரியர்: பலர். முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

......................மால் தூண்டவுட......................
சுபன் பாரில்..................மதி.................. சனிபார்க்கிற
குலத்தை விட்டு

### முடிவு

மிருகசீரிஷஞ் சித்திரை அவிட்டம்
இந்த நட்சேத்திரங்களிலொரு
நட்சேத்திரத்திற் பாவக்கிரக மிருந்தா
லிந்த ஆறுக்கும் சுப கற்மம் விலகும்

### காலம்

இல்லை.

### குறிப்பு

இதில், அஷ்டகர்மம், கடபயாதி சங்கை, காலச்சக்கரம், கிரக சமயம் உரை, அஷ்டவர்க்கம், சாதகயோக மறிவது யேகாதிபத்தியம், கெவுளி பஞ்சாங்கம் முதலான பல தலைப்புகள் உள்ளன.

---

வரிசை எண்: 2314 சுவடி எண்: 1527

## சோதிடம்

ஏடுகள்: 25. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 5-6 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 33½ × 2½ செ.மீ. கி. எண்ணிக்கை: 800. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

### தொடக்கம்

வில்வமும் வாண்மருத்தாளை
மகிழ் மூங்கில் தேமாவும் வன்னியும
பலாசு வஞ்சி மாமரம்

### முடிவு

சாந்தி பிரதிஷ்டை வீடெடுத்தல்
மேலும் பொதுவியல் விதான மெல்லாம்
புகலுவேன் பூவையின்னாய என்பது..................

### காலம்

இல்லை

### குறிப்பு

இதில், முதல் 4 ஏடுகள் இல்லை. நாம நட்சேத்திரமறிய விபரம், காலன் யமகண்டன் அறதபிறாணன் குளியன், ஆட்சி, உச்சம், பகை நீசம் முதலியன உள்ளன.

---

வரிசை எண்: 2315 சுவடி எண்: 1559

# சோதீடம்

ஏடுகள்: 30. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 4-5 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 17½ × 2 செ.மீ. கி. எண்ணிக்கை: 300 எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

இல்லை

**முடிவு**

இல்லை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது தனிப்பட்டவருடைய ஜாதகம் ஆகும்.

வரிசை எண்: 2316 சுவடி எண்: 1503

# தரிக்கால் விபரம் (வள்ளுவர் வாக்கியம்)

ஏடுகள்: 7. சுவடியின் நிலைமை: நல்ல நிலை. பக்கத்திற்கு: 8] வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 35 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 150. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. (வள்ளுவர்) முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

அல்லா உதவி செய்யவும்
**ஆ. செ. சொ. லா – அசுபதி**
கூரிய அசுப திக்குக்
குதிரையாம் விருட்ச மெட்டி
மீரிய கிணமுந் தேவர்
மிகுந்தரா சாளி பட்சி
சீரிய அடியின் நூலாஞ்
சிறந்ததோர் ராசி மேஷம்
பாரிய செவ்வாய் நீசம்
பகிர்ந்திடும் வேத நூலே! —1

**முடிவு**

தெ தொ சசி - ரேபதி
நல்லரே பதியே யானை
நாடிய யிலுப்பை வல்லூர்
சொல்லுவார் கிணமுந் தேவர்
சுகம்வட கிழக்கு வாசல்
வெல்லுவார் மீன ராசி
வியாழம்பங் குனியே நீசம்
வல்லுவர் சொல்லுகின்ற
வாக்கிய நூல தாமே. — 27

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், 27 கோள்களுக்கும் உரிய, விலங்கு, பறவை, மரம், கணம் முதலானவை கூறப்பட்டுள்ளது, கடைசி வரியினால் இது, வள்ளுவர் வாக்கியம் போல காணப் படுகிறது. இதில் நட்சத்திரப்படி வைக்கவேண்டிய பெயர்களின் முதலெழுத்துக்கள் காணப்படுகின்றன. எழுத்துக்களைச் சொல்லியபின் பாடல்கள் தொடங்குகின்றன.

---

வரிசை எண்: 2317 சுவடி எண்: 1545-a

# தொடுகுறி சாத்திரம்

ஏடுகள்: 28. சுவடியின் நிலைமை: மிக்மிகப்பழுது. பக்கத்திற்கு: 8-10 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 40½ × 4 செ.மீ. கி. எண்ணிக்கை: 1500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

**குறி சொல்லுகிறது**
**(விருத்தம்)**

கண்றிடுங் கணங்களகி கனத்ததோர் பவுசுண்டாகும்
கொண்டிடும் பெண்சாதிக்கு கொடியதோர் பிணியுமுண்டு
வேண்டும் படையுவெற்றி வேலவர் துணையுமுண்டு
கண்றமுக் கண்ணேதொட்டால் பாலனே சொல்வேன்.

**முடிவு**

.........த்தாற் புள்ளியங்கெயி தேக
கணமுந் தெளிந்து கொள்ளுவ ருருந்த ...... விடமே
மத்தி......றாம் சாமிதுணைவருவார்
பொம்மக்காள்துணை
அளகனாச்சியம்மன் துணையாக வேண்டியது

**காலம்**

ஸ்ரீ மகா வருஷம் சித்திரை மாதம் கஉ முற்றும்.

**குறிப்பு**

மனித உறுப்புகளில் இன்னின்ன உறுப்புகளைத் தொட்டால் இன்னின்ன பலன் என்று கூறுவது. எண்களைத் தொட்டுச் சொல்லும் குறியினும் வேறாயது.

---

வரிசை எண்: 2318 சுவடி எண்: 1592

# நட்சத்திர நிகண்டு

ஏடுகள்: 140. சுவடியின் நிலைமை: மிகப்பழுது. பக்கத்திற்கு: 5-7 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 42½ × 3 செ.மீ. கி.எண்ணிக்கை: 7000. எழுத்து: மணிப்பிரவாளம் (கிரந்தம்) ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

புத்தியாம் பலத்தி னாலே
பொருவரி தாய நல்ல
முத்தியா மிடத்தி னாலே
முறையுற விரண்டுஞ் செய்யில்
புத்தியு முத்தி தானும்
பொருந்திடும போதந் தன்னில்
வைத்தம லன்பொற் பாதம்
வர்க்கி .....................
பவத்ய நட்சத்திரம் அஸ்வம்
தஸ்ரம் கரம் கம:

**முடிவு**

நலாபம். அப்பால் இடது கையில் — 1 நாசம்
இந்தப்படி பார்ப்பது, முன் சொன்னவனுக்கு
ஜென்ம நட்சத்திரம் தெரியாவிட்டால் நாம நட்சத்திரத்துக்கு
பார்ப்பது,

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், நட்சத்திரங்களின் வெவ்வேறு பெயர்கள் முதலான சோதிட செய்திகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 2319 சுவடி எண்: 1518

## நட்சத்திரப் பொருத்தம்

ஏடுகள்: 8. சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 8 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 26 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 150. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

ஹரி: ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை
சு.சே. சொல். அசுபதி யோனி கடுவன்
குதிரை. பட்சி ராசாளி, விருச்சீகம்.
எட்டி மரம். கிணம் - தெய்வகிணம்.

**முடிவு**

கூ. சா. ஞா. தா. உத்திரட்டாதி
யோனி பால்ப்பசு, பச்சி கோட்டான்
விறுக்சீசம் - வேம்பு - கிணம் - மனுசாள் கிணம்
வாரம் - வியாழக்கிழமை, பங்குனி முதல் சூனியம்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், பெயர் முதலெழுத்து கொண்டு, யோனி, கணம் கண்டு அவற்றின் பொருத்தம் (திருமணத்திற்கு) பார்த்துக் கூறுவது.

வரிசை எண்: 2320 சுவடி எண்: 1570-அ

## நட்சத்திரப் பொருத்தம்

ஏடுகள்: 14. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 5-6 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 31 × 3 செ.மீ. கி. எண்ணிக்கை: 300. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

இல்லை

**முடிவு**

இல்லை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது எமது சுவடி எண் 1518 போன்றது. இதில், முழுமையும் இருக்கிறது.

வரிசை எண்: 2321 சுவடி எண்: 1569-b

# பல்லிக்குப் பலன்

ஏடுகள்: 4. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 4-5 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 19 × 2 செ.மீ. கி. எண்ணிக்கை: 80. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

பல்லி, ஓணான், அரணை, பாம்பு, எலி
இந்த அஞ்சுக்கு பலன் அறியும்படி
பிடரியில் விழுந்தால் கலகம்

**முடிவு**

எண்ணிப் பார்த்து ஒரெழுத்தொரு சக்கிஷத் தோர் பக்கம்
கூட்டி பேரெழுத் தெழுச்சி ரெட்டை பெண்
ஒத்தை யானே
குருபாதம் துணையாக வேணும்

**காலம்**

இல்லை

**குறிப்பு**

பஞ்சபட்சி போல பஞ்ச செந்துக்களின் சோதிடம் கூறுவது.

வரிசை எண்: 2322 சுவடி எண்: 1523-c

# பல்லி விழும் பலன்

ஏடுகள்: 3 சுவடியின் நிலைமை: மிகமிகப்பழுது. பக்கத்திற்கு: 6 வரிகள். பொருள்: சோதிடம், அளவு: 15½ × 2½ செ.மீ. கி. எண்ணிக்கை: 50. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

வலது கன்னத்தில் விழுந்தால் சுகம்
இடது கன்னத்தில் ராசபயம்
மூக்கு மேல் விழுந்தால் வியாது
வலது மூக்கில் விழுந்தால் பொருள்கேடு

**முடிவு**

வலது உள்ளங்காலில் விழுந்தால்
அசுபரிய முண்டாகும்
ஆசனத்தில்அநேக நம்மை
யுண்டாய் வரும்
நடுத்தலையில் மறணம்
குருவே துணை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

பஞ்சாங்கத்தில் உள்ளது போல் பல்லிவிழும் பலன் உளது தலைப்பு இல்லை.

வரிசை எண்: 2323 சுவடி எண்: 1501

# மரண கண்டிகை

ஏடுகள்: 53. சுவடியின் நிலைமை: நல்லநிலை. பக்கத்திற்கு: 8-9 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 35 × 3½ செ.மீ. கி. எண்ணிக்கை: 2000. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

செய்யவன் திருந்தச் செய்வான்
சேயிழை யார்க்கு நல்லான்
மையுறு மணியும் பொன்னும்
வந்தவர்க் கெல்லா மீயும்
பொய்யுரை யொன்றுஞ் சொல்லான்
புகழ்பெற வாழ வல்லான்
அய்யமிட் டுண்ண வல்லான்
அசுபதி னாளி னானே!
என்பது மேஷ ராசியின் பலன்.

**முடிவு**

ராகுகேது சுக்கிர னுதையமாகில்
மாதா பிதாவைக் கொல்லுமே, என்றவாறு
ரேபதி நட்சேத்திரம் முற்றும்,
அல்லா உதவிநாலே

**காலம்**

ஆனந்த வருஷம் ஆடிமாதம் 16-தேதி நாயத்துக்கிழமை பொழுது விழுந்து 4 நாழிகையில் எழுதி முடிந்தது.
எழுதியது மாது றாவுத்தன்.

**குறிப்பு**

இதில் இன்னின்ன நட்சத்திரத்தில் பிறப்பவர்கட்கு இன்னின்ன பலன், மரணம் முதலானவை கூறப்பட்டுள்ளன.

---

வரிசை எண்: 2324 சுவடி எண்: 1568-d

# மனை சாத்திரம்

ஏடுகள்: 11(78-88) சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 4 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 13 × 2 செ.மீ. கி. எண்ணிக்கை: 50. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

**தொடக்கம்**

**வீடுகட்டுகிறதற்கு அவரவர் கால் அடியளந்து கட்டவும்**
பத்தரை அடி அளந்து வீடு கட்டினால்
பாக்கியவானாவான்
11-அடிக்கி வியாதி கண்டிருப்பான்
12-அடிக்கு பகையாளியாலே தெண்டம் வரும்

**முடிவு**

வியாழத்தில் குடிபுகுந்தால் சதிகளும்
பகைஞ்சாற் வந்து தணலெரி மூட்டினாலும்
வேகா. பதிதனில் இந்திரனைப் போல்
பார்தனில் வாழ்வார் கண்டாய்.

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இதில், புதுவீடு கட்டுகிறவர்கள் அவரவர் காலடியினாலே பத்தரை முதல் நாற்பது அடிவரை அளந்து கட்டும் போது என்னென்ன நன்மை தீமை ஏற்படும் என்பதும், சீதா சக்கரம் தொடுகுறி சாத்திரத்தின் மூலமும், பகலைக்கு நாழிகை அறியும்படியும். வீட்டின் மேற்கட்டியில் (மரக்) கை, மரம் வைக்கிறதற்கு நாள் அறியும்படியும் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 2325 சுவடி எண்: 1569-d

## மனைசாத்திரம்

ஏடுகள்: 25. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 4-6 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 19 × 2 செ.மீ. கி. எண்ணிக்கை: 500. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றறது.

**தொடக்கம்**

இல்லை

**முடிவு**

இல்லை

**காலம்**

இல்லை

**குறிப்பு**

இது 1568-d போன்றது, இதிலும் பல்லிகாதல் முதலியன கலந்துள்ளன. இதன் பின்னர், ஒருத்தலைவலிக்கு சக்கரம். சகுனக்குறி பாட்டு, கட்டுமருந்து முதலியன எழுதிய 11 ஏடுகள் உள்ளன.

வரிசை எண்: 2326 சுவடி எண்: 1568-c

## ருது சாத்திரம்

ஏடுகள்: 17(61-77) சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 4 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 13 × 2 செ.மீ. கி. எண்ணிக்கை: 100. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றுமுளது.

**தொடக்கம்**

**ருது சாந்தி குறி**

பட்டது துள்ளிரத்தம் பட்டிருந்தால்
பெண் பெறுவாள்
ரட்டை பட்டிருந்தால்
ஆண் பெறுவாள்.

**முடிவு**

உத்திரட்டாதி — வறுமை — கன்னியாவாள்
ரேவதி — பிணிவுண்டு — புத்திரரைப் பெறுவாள்
ஆக நட்சேத்திரம் 27க்கு அறியும்படி

**காலம்**

இல்லை.

**குறிப்பு**

இதில், ருதுவான மாதபலன், நாள் பலன் ருதுவானமூலை, திதி, நட்சேத்திரம் முதலானவைகளுக்குப் பலன் முதலியன கூறப்பட்டுளது.

வரிசை எண்: 2327 சுவடி எண்: 1569-a

# லக்கினபலன்

ஏடுகள்: 9. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 4-6 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 19 × 2 செ.மீ. கி. எண்ணிக்கை: 150. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

## தொடக்கம்

நாயற்றுக் கிழமை பிள்ளை வியாதி
திங்கள் — பதிவிருதை
செவ்வாய் — விதவை

## முடிவு

பத்தாவின் பேரிலே பச்சமா யிருப்பாள்
புத்திரனுடையள் மீனத்தில் லட்சணம்
உண்டாயிருப்பளென் றறியவும்
லக்கின பலன் முற்றும்
ரெங்கநாயகர் துணையாகவேணும்

## காலம்

இல்லை

## குறிப்பு

இது ருதுசாத்திரமாகக் காணப்படுகிறது.

வரிசை எண்: 2328 சுவடி எண்: 1569-c

# லக்கினபலன்

ஏடுகள்: 7. சுவடியின் நிலைமை: பழுது. பக்கத்திற்கு: 4-5 வரிகள். பொருள்: சோதிடம். அளவு: 19 × 2 செ.மீ. கி. எண்ணிக்கை: 150. எழுத்து: தமிழ். ஆசிரியர்: அறியக்கூடவில்லை. முழுமை: முற்றற்றது.

## தொடக்கம்

இல்லை

## முடிவு

இல்லை

## காலம்

இல்லை

## குறிப்பு

இது எமது சுவடி எண் 1569-a போன்றது.